(1) இந்த முறைமை இலங்கை தரைப் படையின் பெறுகை நடைமுறையின் பொருட்டு மேம்படுத்தப்பட்டது. விலை கணக்குகளை சமர்ப்பிக்கும் செயற்பாடு போர் தளபாட மாஸ்டர் ஜெனரால் கிளை மற்றும் போர் தளபாட சேவைகளின் பணிப்பாளர் குழுமம் என்பவற்றுக்கிடையில் பரிமாற்றப்படும் அனைத்து ஆவணங்களும் இந்த முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(2) மேலும் இந்த மென்பொருள் முறைமை மூலம் நிதி முகாமைத்துவ கிளை மற்றும் நிதி பணிப்பாளர் சபையில் உள்ள வாக்கு முகாமைத்துவ வசதிகளையும் அளிக்கப்பட்டுள்ளது.

(3) போர் தளபாட சேவை பணிப்பாளர் சபையில் உள்ளூர் கொள்வனவு பிரிவிற்கு தேவையான பயன்படுத்துநர்களின் பயிற்சி 2012 திசெம்பர் மாதம் நடாத்தப்பட்டது. அலுவலர்களதும் ஏனைய பதவி படித் தரங்களினதும் முறைமை தொடர்பான அறிவை விருத்தி செய்வதற்காக 05 நாள் பயிற்சி அமர்வினை போர் தளபாட சேவை பணிப்பாளர் குழுமத்தில் நடாத்தப்பட்டது. அதற்காக 18 அலுவலர்களும் 108 ஏனைய பதவி படி தரங்களின் அலுவலர்களும் பங்குபற்றினார்கள்.

(4) தற்போது இந்த முறைமை உள்ளூர் கொள்வனவு பிரிவு மற்றும் கேள்விகளை திறக்கும் பிரிவிற்கு சமமாக நடைமுறைப்படுகின்றது.

இ. நலன்புரி காப்புறுதி முகாமைத்துவ முறைமை. இந்த முறைமை காப்புறுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வசதிகளை அளிப்பதுடன், நலன்புரி பணிப்பாளர் குழுமத்தில், மனித வள முகாமைத்துவ முறைமை இணைந்து இதனை நடைமுறைப்படுத்துகின்றது. அபிவிருத்தி நடவடிக்கைகள் 2013 செப்தெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

ஈ. ஆயுத முகாமைத்துவ முறைமை

(1) இந்த முறைமை நிலையான மென்பொருளாக (Standalone) அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன், மத்திய ஆயுத களஞ்சியத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

(2) இதன் மூலம் பிரிவுகளின் தரவுகளை யுத்த சேவைகளின் பேரேடுகளில் உள்ளடக்கப்படும்.

(3) இரண்டாவது கட்டத்தின் பின்னர் ஒவ்வொன்றுடன் அனைத்து தரவுகளையும் ஒப்பிட்டு பார்க்கப்படும்.

(4) முறைமை ஆய்வு தற்போது முடிவடைந்துள்ளதுடன், போர் நடவடிக்கை பணிப்பாளர் சபையின் மத்திய ஆயுத களஞ்சியம் மற்றும் பிரிவுகளின் ஆயுத களஞ்சியங்கள் என்பன இணைப்பதற்கு இணையத் தளங்களை அடிப்படையாகக்கொண்ட புதிய மென்பொருளை மேம்படுத்தப்பட்டுள்ளது.

(5) முறைமைக்கான பிரதான பதவிநிலை கிளையின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன், மத்திய ஆயுத களஞ்சியத்தில் ஆயுதங்கள் மற்றும் தோட்டாக்களை ஒப்பிடும் செயற்பாடு தற்போதும் நடைமுறைப்படுவதால், தரவு உள்ளடக்கும் பணியை தற்காலிகமாக நிறுத்துவதற்கு காரணமாகியுள்ளது.

உ. விலை பட்டியல்களை தீர்க்கும் கண்காணிப்பு முறைமை

(1) நிதி முகாமைத்துவ கிளையின் கண்காணிப்பை அதிகரிப்பதற்காக இந்த முறைமை மேம்படுத்தப்பட்டது.

(2) இந்த முறைமை மூலம் பிரதேச கணக்காளர்களுடன் நிதி முகாமைத்தவ பணிப்பாளர் நாயகம் தொடர்பு கொள்வார்.

(3) நிதி முகாமைத்துவ பணிப்பாளர் நாயகம் அவர்கள் விலை பட்டியல்களை தீர்க்கும் முறைமையை மேற்பார்வையிடலாம்.

(4) பிரதான கணக்காளர்களின் அலுவலகம் மற்றும் பிரதேச கணக்காளர்கள் இந்த முறைமையின் மூலம் தற்போது தொடர்பு கொள்கின்றனர்.

(5) நிதி முகாமைத்துவ கிளை, நிதி பணிப்பாளர் குழுமம் மற்றும் 06 பாதுகாப்பு படை தலைமையகங்களில் 15 அலுவலர்களும் 18 ஏனைய பதவி படித் தரங்களின்

பொருட்டும் **2013** யூலை மாதம் **29** ஆந் திகதி ஒரு நாள் செயலமர்வு மூலம் பயன்படுத்தல் தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.

(6) அனைத்து பிரதேச கணக்கு அலுவலகங்களிலும் கணக்கு அலுவலர்களின் பொருட்டு 05 நாள் செயலமர்வொன்று நிதி முகாமைத்துவ கிளை மற்றும் ஏனைய கணக்காளர்களின் பங்களிப்புடன் **2013** ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் **25** மற்றும் **29** ஆகிய இரண்டு நாட்கள் முழுவதும் நடாத்தப்பட்டது.

7) தற்போது இந்த முறைமை பிரதான கணக்காளர்களின் அலுவலகம் மற்றும் பிரதேச கணக்காளர்களின் அலுவலகங்கள் மூலம் அவர்களின் விலைப் பட்டியல்களை தீர்ப்பனவு நடைமுறைகளின் பொருட்டு பயன்படுத்தப்படுகிறது.

ஊ. போக்குவரத்து முகாமைத்துவ முறைமை. முறைமையை மேம்படுத்தல் மற்றும் பேணுதல் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டது.

எ. மருத்துவமனை தகவல் முகாமைத்துவ முறைமை

(1) மருத்துவமனைக்கு ஏற்புடையதாக நடைபெறும் எல்லா செயற்பாடுகளையும் ஆய்வு செய்த பின்னர், முறைமை மேம்படுத்தல் ஆரம்பிக்கப்பட்டது.

(2) மருத்துவமனை தகவல் முகாமைத்துவ முறைமை தற்போது நாராஹேன்பிட்டிய மருத்துவமனை காடி பிரிவிலும் வெளி நோயாளர் பிரிவிலும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது.

(3) விசேட மருந்து வழங்கப்படும் கருமபீடம், பொதுவான PULHEEMS பிரிவு மற்றும் ETU பிரிவும் கணினிமயப்படுத்தப்படுகின்றது. அந்த முறைமையை **2013** நவம்பர் மாத இறுதியில் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியும்.

(4) இந்த முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு சமமாக நாராஹேன்பிட்டிய மருத்துவமனையில் பயன்படுத்துநர்களுக்கான பயிற்சியும் நடைமுறைப்படுகின்றது. அடுத்து வரும் சில மாதங்களில் பயன்படுத்துநர்களின் முறைமையுடன் வேலை செய்யும் ஆற்றலை நன்கு உறுதிபடுத்தும் வகையில் அவர்களுக்கு முறையாக பயிற்சி அமர்வுகள் நடாத்தப்படும்.

(5) அடுத்த கட்டத்திற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான பெறுகை நடவடிக்கைகள் நடைமுறையில் உள்ளன.

ஏ. புலனாய்வு தகவல்களை முகாமைத்துவம் செய்யும் முறைமை. சுயாதீன பணிப்பாளர் குழுமத்திற்காக ஆரம்ப பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், **2013** ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

6. ஏனைய கருத்திட்டங்கள்

அ **2013** ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய கருத்திட்டங்கள் பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	கருத்திட்டம் - இடம்	தற்கால நிலைமை
1.	ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் தொழிற்பாட்டு தரவு முகாமைத்துவ முறைமை	முடிவுறுத்தப்பட்டுள்ளது.
2.	தரைப் படையல்லாத பாடநெறிகளின் முகாமைத்துவ முறைமை	முடிவுறுத்தப்பட்டுள்ளது
3.	கருத்திட்ட நிலைமைகளின் கண்காணிப்பு முறைமை	முடிவுறுத்தப்பட்டுள்ளது

4.	எல்லா பிரிவுகள் மற்றும் அணி நிலையங்களுக்கான பிரிவு நலன்புரி நிதியத்தின் மகாமைத்துவ முறைமை	முடிவுறுத்தப்பட்டுள்ளது
5.	யால விடுமுறை விடுதிக்கான ஹோட்டல் முகாமைத்துவ முறைமை	முடிவுறுத்தப்பட்டுள்ளது

7. <u>இணையத் தளங்கள்</u>

அ பின்வரும் இணையத் தளங்களை மேம்படுத்தல் மற்றும் பேணுதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

தொடர் இலக்கம்	இணையத் தளம் - இடம்	தற்கால நிலைமை
(அ)	(ஆ)	(இ)
1.	சுயேற்சை படையணி தலைமையகம்	அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேணுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
2.	அணி நிலையம் - இலங்கை பொறியியலாளர் சிறப்பணி	அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேணுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
3.	அணி நிலையம் - இலங்கை சைகை சிறப்பணி	அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேணுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
4.	அணி நிலையம் - இலங்கை தரைப் படை பெண்கள் சிறப்பணி	அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேணுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
5.	பாதுகாப்பு சம்மேளனம் 2013 இணையத் தளம்	பாதுகாப்பு சம்மேளனத்தின் பொருட்டு அறிமுகப்படுத்தப்பட்டது
6.	பாதுகாப்பு சம்மேளனம் 2014 இணையத் தளம்	அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
7.	அமைதி காக்கும் தொழிற்பாட்டு பயிற்சி பாடசாலை - குகுலே கங்க	புதிய இணையத் தளம் அறிமுகப்படுத்தப்பட்டது.
8.	பாதுகாப்பு படை தலைமையகம் (முல்லைதீவு)	மேம்படுத்தப்படுகின்றது
9.	பாதுகாப்பு படை தலைமையகம் (கிளிநொச்சி)	அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேணுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
10.	பாதுகாப்பு படை தலைமையகம் (மத்திய)	அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேணுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
11.	பாதுகாப்பு பதவிநிலை பிரதான அலுவலகத்தின் இணையத்தளம்	அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதுடன், பேணுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.
12.	தரைப் படை மருத்துவமனை(கொழும்ப)	மேம்படுத்தப்படுகின்றது
13.	விமான நுழைவுச்சீட்டு விற்பனை - போக்கவரத்து பணிப்பாளர் குழுமம்	மேம்படுத்தப்படுகின்றது

ஏனைய தரவுகள்

8. இலங்கை தரைப் படை மூலம் நடைமுறைப்படுத்தியுள்ள தரவு வலையமைப்பு தொடர்புகள்.

அ. சம்பளம் மற்றும் ஆவண பணிப்பாளர் குழுமம் - 01.

ஆ. இலங்கை தரைப்படை மற்றும் நலன்புரி நிதியம் - 01.

இ. 59 ஆவது படைப் பகுதி தலைமையகம் - 01.

ஈ. 64 ஆவது படைப் பகுதி தலைமையகம - 01.

உ 11 ஆவது இலங்கை சைகைச் சிறப்பணி - 01

மொத்தம் - **05**

9. 2013 ஆம் ஆண்டில் கணினி வேலைத் தளம் மூலம் பழுது பார்க்கப்பட்ட கணினிகள், துணைக் கருவிகள் தொடர்பான தரவுகள்.

அ. பனாகொடை வேலைத் தளம்.

தொடர் இலக்கம்	துணை கருவிகள்	வேலைத் தளம்	நிறுவனம்	பயன்படுத்த உதவாத
1.	CPU	245	141	214
2.	Monitor	67	50	263
3.	UPS	92	31	199
4.	Laptop	6	20	38
5.	Printer	102	72	103
6.	Other	52	29	260
மொத்தம்		**564**	**343**	**1077**

ஆ. தரைப் படை தலைமையகங்களின் வேலைத் தளம்.

தொடர் இலக்கம்	துணை கருவிகள்	வேலைத் தளம்	நிறுவனம்	பயன்படுத்த உதவாத
1.	CPU	674	54	41
2.	Monitor	51	8	15
3.	UPS	67	6	17
4.	Laptop	30	6	2
5.	Printer	110	14	13
6.	Other	32	-	33
மொத்தம்		**964**	**88**	**121**

(3) கொகாவில் வேலைத் தளம்.

தொடர் இலக்கம்	துணை கருவிகள்	வேலைத் தளம்	நிறுவனம்	பயன்படுத்த உதவாத
1.	CPU	692	-	-
2.	Monitor	38	-	-
3.	UPS	37	-	-
4.	Laptop	22	-	-
5.	Printer	118	-	-
6.	Other	17	-	-
மொத்தம்		**924**	**0**	**0**

<u>பயிற்றுவிப்புகள்</u>

10. **2013** ஆண்டில் தகவல் தொழில்நுட்ப பணிப்பாளர் குழுமம் மூலம் நடைமுறைப்படுத்திய விலை பட்டியல்களின் தீர்ப்பானை கண்காணிப்பு முறைமையின், பயிற்சி அமர்வு தரவுகள் பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	இடம்	பங்குபற்றிய எண்ணிக்கை	
		(அலுவலர்கள்)	(ஏனைய பதவிப் படித் தரங்கள்
1.	நிதி முகாமைத்துவ கிளை	-	01
2.	நிதி பணிப்பாளர் குழுமம்	06	06
3.	பாதுகாப்பு படை தலைமையகம் (யாழ்ப்பாணம்)	01	02
4.	பாதுகாப்பு படை தலைமையகம் (வன்னி)	02	03
5.	பாதுகாப்பு படை தலைமையகம் (கிழக்கு)	01	02
6.	பாதுகாப்பு படை தலைமையகம் (கிளிநொச்சி)	01	
7.	பாதுகாப்பு படை தலைமையகம் (முல்லைதீவு)	01	02
8.	பாதுகாப்பு படை தலைமையகம் (மேற்கு)	02	02
9.	பாதுகாப்பு படை தலைமையகம் (மத்திய)	01	
மொத்தம்		**15**	**18**

11. **<u>ஆட்சேர்ப்புகள் 04.</u>** தகவல் தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் 78 தரவு உள்ளடக்கும் இயக்குநர்கள் 2013 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டனர்.

நிதி முகாமைத்துவ குழுமம்

அறிமுகம்

1. நிதி முகாமைத்துவ கிளையை ஸ்தாபித்தல் தரைப்படை தளபதியால் 2005 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படும் வண்ணம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன் படி தற்போது நிதி முகாமைத்துவ கிளை பின்வரும் 07 பணிப்பாளர் குழுமங்களை கொண்டமைந்துள்ளது.

அ. வரவு செலவு மற்றும் நிதி நிர்வாக பணிப்பாளர் குழுமம்.

ஆ. சம்பள மற்றும் ஆவண பணிப்பாளர் குழுமம்.

இ. உள்ளக கணக்காய்வு பணிபபாளர் குழுமம.

ஈ. நிதி பணிப்பாளர் குழுமம.

உ. சொத்துக்களின் முகாமைத்துவ பணிப்பாளர் குழுமம.

ஊ. தரைப்படை நலன்புரி பணிப்பளார் குழுமம்.

எ. விவசாய மற்றும் கால்நடை வளங்கள் பணிப்பாளர் குழுமம் .

பொறுப்புகள்

2. நிதி முகாமைத்துவ கிளை முழு மொத்த தரைப்படையின் அனைத்து நிதி நடவடிக்கைகள் தொடர்பான நடைமுறைகளின் நிர்வாக அதிகாரியாக பணியாற்றுவதுடன், நிதி முகாமைத்துவ கிளையின் நிர்வாகத்தின் கீழ் பின்வரும் பணிப்பாளர் குழுமங்களின் நிர்வாகம், கண்காணிப்பு, கூட்டிணைப்பு மற்றும் பணிகள் தொடர்பாக பொறுப்பு கூறுதல் வேண்டும்.

அ. வரவு செலவு மற்றும் நிதி நிர்வாக பணிப்பாளர் குழுமம் தரைப்படை தளபதியால் வழங்கும் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் படி இலங்கை தரைப்படைக்கு ஏற்புடையதாக வினைத்திறன் மற்றும் பயனுள்ள நிதி முகாமைத்துவ வரவு செலவு மதிப்பீடுகளை தயாரித்தல் மற்றும் செலவு விடயங்களின் கீழ் ஒதுக்கீடுகளை ஒதுக்குதல், செலவு முகாமைத்துவம், மீளாய்வு, தேவைக்கேற்ப நிதி முகாமைத்துவம் தொடர்பான தகவல்களை உள்ளக மற்றும் வெளியக தரப்புகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் என்பன பணிப்பாளர் வரவு செலவு மற்றும் நிதி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளாகும்..

ஆ சம்பளம் மற்றும் ஆவண பணிப்பாளர் குழுமம் தரைப்படை நடைமுறையொழுங்கு **18/94, 1994** ஏப்பிரல் **30** இன் படி சம்பளம், படி, நட்டஈடு செலத்தல், தனிப்பட்ட அறிக்கைகள் என்பன பேணுதல் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்தல், சம்பளம் மற்றும் ஆவண பணிப்பளார் சபையின் பொறுப்புகளாகும்.

இ உள்ளக கணக்காய்வு பணிப்பாளர் குழுமம். தரைப் படையில் தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொள்வதன் ஊடாக நிலவும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை வலுப்படுத்தல், நட்டங்கள், வீண்விரயங்கள் மற்றும் செயலிழந்தவைகள் மூலம் சொத்துக்களை பாதுகாத்தல், பலவீனமான முறைமைகளை அடையாளம் காணப்பட்டு அந்த முறைமைகளை மேம்படுத்தல், பிழைகள், மோசடிகள், தவிர்த்தல் மற்றும் வெளிப்படுத்திக்கொள்ளுதல் என்பவற்றுக்கு தேவையான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை நடைமுறைப்படுத்தல் உள்ளக கணக்காய்வு பணிப்பாளர் குழுமத்தின் பொறுப்பாகும்.

ஈ நிதி பணிப்பாளர் குழுமம். அரச நிதி ஒழுங்குவிதிகள், ஏனைய ஏற்புடைய சட்டங்கள், பொது திறைசேரி மூலம் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்கள், வழிகாட்டல் என்பவற்றுக்கு அமைவாக தரைப்படையின் அனைத்து அரச நிதி கட்டுப்பாடு, கணக்கு நடவடிக்கைகளை பேணுதல், அறிக்கையிடல் மற்றும் ஏனைய ஏற்புடைய நடைமுறைகளின் பொருட்டு பொறுப்பு கூறுதல் வேண்டும்.

உ சொத்துக்களின் முகாமைத்துவ பணிப்பாளர் குழுமம். தப்பிபடைக்குரியதான சொத்துக்களை மிகவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் முகாமைத்துவம் செய்வதற்கு தேவையான அனைத்து செயற்பாடுகளையும் நடைமுறைப்படுத்தல் சொத்துக்களின் முகாமைத்துவ பணிப்பாளர் குழுமத்தின் பொறுப்புகளாகும்.

ஊ நலன்புரி பணிப்பாளர் குழுமம். உறுப்பினர்களின் உதவுத் தொகை சேர்க்கப்படுதல், மிக கூடிய பயன் கிடைக்ககூடிய வாறு பயனுள்ள மற்றும் பாதுகாப்பான வகையில் முதலீடு செய்தல் நலன்புரி பணிப்பாளர் குழுமத்தின் பொறுப்புகளாகும்.

எ. விவசாய மற்றும் கால்நடை வளங்களின் பணிப்பாளர் குழுமம். தரைப் படையின் விவசாய பண்ணைகளில் உள்ள அலுவலர்கள் மற்றும் ஏனைய பதவி படித் தரங்களில் உள்ளவர்களுக்கு அதி நவீன விவசாய தொழில்நுட்ப அறிவை வழங்குதல், பணி நிலையங்களுக்கு விவசாய அலவலர்கள் மற்றும் விவசாய படையினர் இணைப்பதற்கான ஆலோசனை வழங்குதல், விவசாய இயந்திரங்களை பண்ணையின் பொருட்டு ஒதுக்குதல் மற்றும் விநியோகித்தல், தரைப் படையில் உள்ள விவசாய கருத்திட்டங்கள் மற்றும் தரைப்படை பண்ணைகளில் மேம்பாட்டுக்கு தேவையான அறிவு, ஆலோசனைகள் என்பன வழங்குதல் பொறுப்புகளாகும்.

செயற்பொறுப்புகள்

3. வரவு செலவு மற்றும் நிதி நிர்வாக பணிப்பாளர் குழுமம், உள்ளக கணக்காய்வு பணிப்பாளர் குழுமம், சம்பளம் மற்றும் ஆவண பணிப்பாளர் குழுமம், சொத்துக்கள் முகாமைத்துவ பணிப்பாளர் குழுமம், தரைப்படை நலன்புரி பணிப்பாளர் குழுமம், விவசாய மற்றும் கால்நடை வளங்களின் பணிப்பாளர் குழுமம், நிதி பணிப்பாளர் குழுமம் என்பவற்றுக்கு ஏற்புடையதான அனைத்து பணிகளுக்குமான நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கூட்டிணைத்தல் நிதி முகாமைத்துவ கிளையின் செயற்பொறுப்புகளாகும்.

பணிகள்

4. இக் கிளையின் பணிகள் பின்வருமாறாகும்.

அ. கிளையின் கீழ் உள்ள பணிப்பாளர் குழுமங்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் என்பவற்றில் முழுமொத்த தொழில்நுட்ப நிர்வாகம், கண்காணிப்பு மற்றும் கூட்டிணைப்பு.

ஆ. கிளையின் கீழ் உள்ள பணிப்பாளர் குழுமங்களில் அனைத்து தொழில்நுட்ப தேவைகளுக்காக கொள்கைகளை தயாரித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணித்தல்.

இ. கிளையின் கீழ் உள்ள பணிப்பாளர் குழுமங்களில் அனைத்து நிதி முகாமைத்துவ செயற்பாடுகள், வரவு செலவு திட்டங்களை தயாரித்தல், செலவுகளின் பொருட்டு நிதி பெற்றுக்கொள்ளுதல் மற்றும் விநியோகங்களுக்கு ஏற்புடையதான நிர்வாகம் மற்றும் முழு மொத்த கண்காணிப்பு.

ஈ தரை படையிடம் ஒதுக்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் நிதியங்களை சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு நிதி முகாமைத்துவ நடைமுறைகள், கணக்கீட்டு முறைமைகள், உள்ளக கணக்காய்வு முறைகள், சொத்துக்களின் முகாமைத்துவ முறைமைகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் பேணுதல்.

உ. அரச நிதி, அரச கணக்காய்வுக்கு ஏற்புடையதாக அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, திறைசேரி , கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் என்பவற்றுடன் தொடர்பினை பேணுதல்

ஊ. கிளையின் கீழ் உள்ள பணிப்பாளர் குழுமங்களிடம் தரைப்படை தளபதியால் வழங்கப்படும் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல்

எ. நிதி முகாமைத்துவ கிளையில் நிதிசார் தகவல்களின் தரவு கோவைகளை மேம்படுத்தல் மற்றும் இற்றைப்படுத்தல்.

வருடாந்த மீளாய்வு

5. 2014 ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட அரச நிதியை ஆகக் கூடியதாக பயன்படுத்துவதற்கு எல்லா செலவு கட்டுப்பாட்டு அலுவலர்களையும் கொள்கை கட்டுப்பாட்டு அலுவலர்களையும் அறிவுறுத்துவதற்காக 2013 நவம்பர் 26 மற்றம் 27 திகதிகளில் "2014 வரவு செலவு மாநாடு" நடாத்தப்பட்டது.

6. பாதுகாப்பு படை தலைமையகத்தில் (மத்திய) நிதி பணிப்பாளர் குழுமத்தின் கீழ் பிராந்திய கணக்காளர் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்க 2013 ஏப்பிரல் 03 ஆந் திகதி அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டது.

சாதனைகள்

7. 2013 ஆம் ஆண்டில் தரைப்படையிடம் ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகளை மிக வினைத்திறனுடனும் பயனுள்ளதாகவும் பயன்படுத்தியுள்ளதாக நிதி பணிப்பாளர் குழுமத்தில் பேணிச் செல்கின்ற உண்மையான செலவு அறிக்கைகளுக்கு அமைவாக பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	வகை	ஒதுக்கீடு ரூபா	செலவு ரூபா	%
	மீண்டுவருஞ்	116,900,114,000.00	116,842,837,305.00	99.95
	மூலதன	6,055,225,000.00	6,049,964,879.00	99.91
	மொத்தம்	122,955,339,000.00	122,892,802,184.00	99.95

நிதிசார் விபரங்கள்

8. இந்த கிளையில் நிதி ஒதுக்கீடுகள் பின்வருமாறாகும்.

அ. 2013 ஆம் ஆண்டுக்காக மொத்த ஒதுக்கீடகள் பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	வகை	பெறுமதி ரூபா	%
1.	மீண்டுவருஞ்	116,900,114,000.00	95%
2.	மூலதன	6,055,225,000.00	5%
	மொத்தம்	122,955,339,000.00	100%



ஆ. உண்மையான செலவு (நிதி பணிப்பாளர் சபை மற்றும் பிரதேச கணக்காளர் அலுவலகங்களின் அறிக்கை பிரகாரம் **2013.12.31** ஆந் திகதியில்).

தொடர் இலக்கம்	வகை	பெறுமதி ரூபா	%
1.	மீண்டுவருஞ்	116,842,837,305.00	95%
2.	மூலதன	6,049,964,879.00	5%
	மொத்தம்	122,892,802,184.00	100%



இ. பிரதான வகை படுத்தலின் பிரகாரம் 2013 ஆம் அண்டில் செலவு

தொடர் இலக்கம்	வகை	பெறுமதி ரூபா	%
1.	சம்பளங்கள் மற்றும் படிகள்	**91,741,600,653.00**	75%
2.	ஏனைய மீண்டுவருஞ்	**25,101,236,652.00**	20%
3.	மூலதன	**6,049,964,879.00**	5%
	மொத்தம்	**122,892,802,184.00**	100%



வரவு செலவு மற்றும் நிதி நிர்வாக பணிப்பாளர் குழுமம்

அறிமுகம்

1. 1981 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட வரவு செலவு மற்றும் நிதி நிர்வாக பணிப்பாளர் குழுமம் தரைப்படை தளபதியின் நேரடி கண்காணிப்பின் கீழ் நிர்வகிக்கப்பட்டது.

2. 1994 ஆம் ஆண்டில் இலங்கை தரைப்படை தலைமையகம் மீளமைக்கப்பட்டு மீள்கட்டமைப்பு செய்கின்றபோது வரவு செலவு மற்றும் நிதி நிர்வாக பணிப்பாளர் குழுமத்தின் கண்காணிப்பு பொறுப்பு பணிப்பாளர் ஜெனரால் பிரதான பதவிநிலையிடம் கையளிக்கப்பட்டுள்ளதுடன், 1994 தொடக்கம் 2006 வரை தரைப்படை தலைமையகத்தின் பிரதான பதவிநிலை கிளையின் கீழ் நிர்வகிக்கப்பட்டது.

3. பொது திறைசேரி மற்றும் அர்னஸ்ட் அண்டி யன்க் கணக்காய்வு நிறுவனத்தின் பரிந்துரைகளின் படி 2006 ஆம் ஆண்டில் நிதி முகாமைத்துவ கிளை ஸ்தாபிக்கப்பட்டது. அதன் பின்னர் 2006 ஆண்டு தொடக்கம் இது வரை வரவு செலவு மற்றும் நிதி நிர்வாக பணிப்பாளர் குழுமம், நிதி முகாமைத்துவ கிளையின் கண்காணிப்பின் கீழ் கடமைகளை நிறைவேற்றுகின்றது.

பொறுப்புகள்

4. தரைப்படை தளபதியால் வழங்கப்படும் ஆலோசனைகளும் வழிகாட்டலுக்கும் அமைவாக இலங்கை தரைப்படைக்கு ஏற்புடையதாக வினைத்திறன் மற்றும் பயனுள்ள நிதி முகாமைத்துவம், வரவு செலவு மதிப்பீடுகளை தயாரித்தல் அத்துடன் செலவு தலைப்புகளின் கீழ் ஒதுக்கீடுகளை ஒதுக்குதல், செலவு முகாமைத்துவம், மீளாய்வு மற்றும் தேவைக்கேற்ப நிதி முகாமைத்துவ தகவல்களை உள்ளக மற்றும் வெளியக தரப்புகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்பன பணிப்பாளர் வரவு செலவு, நிதி நிர்வாகத்திடம் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளாகும்.

செயற் பொறுப்புகள்

5. இலங்கை தரைப்படைக்கு ஏற்புடையதாக அரச நிதி முகாமைத்துவம் மற்றும் அரசு சாராத நிதி நிர்வாகம் என்பன வரவு செலவு மற்றும் நிதி நிர்வாக பணிப்பாளர் குழுமத்தின் செயற் பொறுப்புகளாகும்.

பணிகள்

6. இப் பணிப்பாளர் குழுமத்தின் கடமைப் பொறுப்புகள் பின்வருமாறாகும்.

அ. தரைப் படையின் நிதி முகாமைத்துவம் தொடர்பில் தேவையான ஆலோசனைகளை பணிப்பாளர் ஜெனரால் நிதி முகாமைத்துவத்திடமிருந்து தரைப்படை தளபதியிடம் வழங்குதல்.

ஆ. தலைப்படையின் நிதி முகாமைத்துவத்திற்கு தேவையான திட்டங்களை தயாரிப்பதற்கும் நிதி முகாமைத்துவத்திற்கும் தரைப்படை தளபதிக்கு தேவையான நிதிசார் தகவல்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்.

இ. மூலதன செலவுகள் மற்றும் மீண்டுவருஞ் செலவுகளின் கீழ் தரைப்படைக்கு தேவையான வருடாந்த ஒதுக்கீடுகள் மற்றும் மேலதிக ஒதுக்கீடுகள் தொடர்பாக விபரங்களை தயாரித்துபொது திறைசேரியிடம் சமர்ப்பித்தல்.

ஈ கருத்திட்டங்கள் மற்றும் செலவுத் தலைப்பு என்பவற்றுக்கிடையில் ஒதுக்கீடுகளை மாற்றுவதற்கு உள்ளக அனுமதி வழங்குதல் மற்றும் பொது திறைசேரியிடம் அனுமதி பெறுதல்.

உ. நடைமுறைகளின் கட்டுப்பாட்டு அலுவலர்கள் மற்றும் முனைப்பான கட்டுப்பாட்டு அலுவலர்களிடம் ஆலோசனை வழங்குதல் மற்றும் கொள்கை ஆலோசனை வழங்குதல்.

ஊ. நிதிசார் மற்றும் வரவுசெலவு தகவல்களின் கட்டுப்பாடு, மீளாய்வு மற்றும் பகுப்பாய்தல்.

எ இலங்கை தரைப்படையின் நிதிசார் நடவடிக்கைகளை பொது திறைசேரியிடமும் அரச பாதுகாப்பு அமைச்சிடமும் எப்போதும் கூட்டிணைத்தல்.

ஏ அரசு சாராத கணக்குகள் தொடர்பான நடவடிக்கைகளை நிர்வகித்தல், கண்காணித்தல் மற்றும் கொள்கை ஆலோசனைகளை வழங்குதல்.

ஐ. ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் கடமைகளுக்கு ஏற்புடையதாக பேணிச் செல்கின்ற உப வைப்பு கணக்குகள்/கட்டுநிதிகள் கணக்குகள் தொடர்பில் தேவையான ஆலோசனைகளை வழங்குதல், கண்காணித்தல் மற்றும் கொள்கை ஆலோசனைகளை வழங்குதல்.

வருடாந்த பொது மீளாய்வு

7. மீண்டுவருஞ். **2013** ஆம் ஆண்டுக்காக இலங்கை தரைப்படையின் பொருட்டு மீண்டுவருஞ் செலவினமாக **133,550.00** மில்லியன் ரூபாவிலான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் பொது திறைசேரியால் மீண்டுவருஞ் செலவாக **118,167.00** மில்லியன் ரூபாவாக வரையறுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. அந்த ஒதுக்கீடுகளுள் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்கு **88,289.00** மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய மீண்டுவருஞ் செலவின மீதியாக **29,878.00** மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடுகளைக் கொண்டு (**118,167.00** மில்லியன் ரூபா- மில்லியன் ரூபா: **88,289.00**) முகாமைத்துவம் செய்துகொள்வதற்கு முடிந்தது.

8. மூலதன இலங்கை தரைப்படையால் **2013** ஆண்டுக்காக **11,786.00** மில்லியன் ரூபா மூலதன செலவாக மதிப்பிடப்பட்ட போதிலும் பொது திறைசேரியால் அது **3,999.00** மில்லியன் ரூபா ஒதுக்கீடுக்கு வரையறுக்கப்பட்டது.

சாதனைகள்

9. **2013** ஆம் ஆண்டுக்காக மீண்டுவருஞ் மற்றும் மூலதன செலவு தலைப்பின் கீழ் வழங்கிய ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக பொது திறைசேரியிடமிருந்து பின்வருமாறு இலங்கை தரப்படைக்கு மேலதிக ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

அ. மீண்டுவருஞ் செலவினம்

தொடர் இலக்கம்	செலவுத் தலைப்பு	ரூபா: சதம்
1.	எரிபொருள்	500,000,000.00
	முழு மொத்தம்	500,000,000.00

ஆ. மூலதன செனவினம்

(1) மூலதன செலவினத்தை கைப்பற்றுதல்

தொடர் இலக்கம்	செலவுத் தலைப்பு	ரூபா: சதம்
1.	கட்டிடங்களும் நிருமாணிப்புகளும்	74,000,000.00
	முழு மொத்தம்	74,000,000.00

(2) மனித வள அபிவிருத்தியில் பதவியனியின் பயிற்சி

தொடர் இலக்கம்	செலவுத் தலைப்பு	ரூபா: சதம்
1.	உள்நாட்டு பயிற்றுவிப்புகளும் ஆற்றல் விருத்தியும்	14,000,000.00
2.	வெளிநாட்டு பயிற்றுவிப்புகளும் ஆற்றல் விருத்தியும் - வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகளை கொள்வனவு செய்தலும்.	1,000,000.00
3.	வெளிநாட்டு பயிற்றுவிப்புகளும் ஆற்றல் விருத்தியும் - வெளிநாட்டு பயிற்சி பாடநெறிகளுக்கான படி.	170,000,000.00

4.	வெளிநாட்டு பயிற்றுவிப்புகளும் ஆற்றல் விருத்தியும் - (விமான பயணச் சீட்டுகளும் கடல்சார் போக்குவரத்தும்)	15,000,000.00
மொத்தம்		**200,000,000.00**
முழுமொத்தம்		**274,000,000.00**

நிதி சார் விபரங்கள்

10. இலங்கை தரைப்படையால் 2013 ஆம் ஆண்டுக்காக பின்வரும் ஒதுக்கீடுகள் தேசிய வரவு செலவு ஒதுக்கீடுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

அ. மூலதன - ரூபா: **3,999,225,000.00.**

ஆ. மீண்டுவருஞ் - ரூபா: **118,167,214,000.00.**

மொத்தம் - ரூபா: **118,566,439,000.00**

உள்ளக கணக்காய்வு பணிப்பாளர் குழுமம்

அறிமுகமும்

1. நிதிசார் நடவடிக்கைகளுக்கு ஏற்புடையதாக உள்ள உள்ளக நிர்வாக முறைமையின் செயலாற்றுகை கண்காணிப்பு, மதிப்பிடல், மற்றும் நடப்பு ரீதியாக மாற்றமடையும் நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக தற்போதுள்ள உள்ளக நிர்வாக முறைமையின் நடவடிக்கைகளை மேம்படுத்தம் நோக்கத்துடன் உள்ளக கணக்காய்வு பணிப்பாளர் குழுமத்தை தரைப்படை தளபதியால் படை நடைமுறையொழுங்கு **20/2006** கீழ் ஸ்தாபிக்கப்பட்டது.

பொறுப்புகள்

2. இந்த பணிப்பாளர் குழுமத்தின் பொறுப்புகள் பின்வருமாறாகும்.

அ. தொடர்ச்சியான மீளாய்வுகளை மேற்கொள்வதன் ஊடாக நிலவும் நிர்வாக முறைமையினை வலுப்படுத்தல்.

ஆ நட்டங்கள், வீண்விரயங்கள் மற்றும் காலம்கடந்துள்ள சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல்.

இ. பலவீனமான முறைகளை அடையாளம் காணப்பட்டு அந்த முறைமைகளை மேம்படுத்தல்.

ஈ. பிழைகள் மற்றும் மோசடிகள் தவிர்த்தல் மற்றும் வெளிப்படுத்தலுக்கு தேவைப்படும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை நடைமுறைப்படுத்தல்.

செயற் பொறுப்புகள்

3. உள்ளக கணக்காய்வு பணிப்பாளர் குழுமத்தின் செயற்பாடுகள் யாதெனில் தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொள்ளுதல் மற்றும் தரைப்படைக்குரிய சொத்துக்களின் முகாமைத்துவத்தில் நிதிசார் செயலாற்றுகையை சுயாதீனமாக மதிப்பீட்டுக்கு உட்படுத்தல், பயனுள்ள உள்ளக பரிசோதனை முறைகளின் மூலம் தவிர்த்தல், வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளுதல் மற்றும் நிறுவனத்தின் பொருளாதாரம், உற்பத்திதிறன் மற்றும் வினைத்திறன் என்பவற்றை மேம்படுத்துவதற்கு தேவையான சரியான நிர்வாக முறைகளை அறிமுகப்படுத்தல் என்பனவாகும்.

பணிகள்

4. இந்த பணிப்பாளர் குழுமத்தின் பணிகள் பின்வருமாறாகும்.

அ. அரசாங்கத்தில் உள்ள நிதி ஒழுங்குவிதிகள், பெறுகை நடவடிக்கை முறைகள், தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகள் மற்றும் அவ்வப்போது மேலதிகங்கள் மூலம் வெளியிடப்படும் ஆலோசனைகளை சரியாக நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்தல்.

ஆ நிலவுகின்ற உள்ளக பரிசோதனைகள் மற்றும் நிர்வாக முறைமைகளில் போதுமான தன்மை மற்றும் அது உரியவாறு நடைமுறைப்படுகின்றதா என்பது தொடர்பாக கண்டறிதல்.

இ தரைபடையில் பேணிச் செல்கின்ற கணக்கீட்டு மற்றும் பேணப்படுகின்ற ஏனைய அறிக்கைகளின் நம்பகத்தன்மையையும் செவ்வைத்தன்மையையும் கண்டறிதல்.

ஈ தரைப்படையின் சொத்துக்கள் எவ்வளவு தூரத்திற்கு எல்லா வகையிலும் நட்டங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டுள்ளது? அந்த சொத்துக்களுக்கு ஏற்புடையதாக ஏற்படக் கூடிய வீண்விரயங்களை தவிர்த்தல், வெளிப்படுத்திக்கொள்ளுதல், கண்டறிதல் மற்றும் அந்த சொத்துக்கள் எவ்வளவு தூரத்திற்கு வினைத்திறனுடன் பயன்படுத்தப்படுகிறது என்பது தொடர்பாக கண்டறிதல்.

உ தேவைகளுக்கேற்ப விசேட ஆய்வுகளை நடாத்தல் மற்றும் அதன் பலனை உயர் பிரிவுகளிடம் அறிக்கையிடல்.

வருடாந்த மீளாய்வு

5. **2013** ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்.

அ. **2013** ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்தால் அவதானிப்புக்கு உட்படுத்திய கணக்கயர்வு அவதானிப்புகளின் பொருட்டு பதில் அளித்தல் மற்றும் கூட்டிணைத்தல்.

(1) கணக்காய்வு உசாவுதல்கள்

(அ) **2013** I ஆவது காலாண்டில் கிடைக்கப்பெற்ற கணக்காய்வு உசாவுதல்கள் - **02**

(ஆ) **2013** II ஆவது காலாண்டில் கிடைக்கப்பெற்ற கணக்காய்வு உசாவுதல்கள் - **04**

(இ) **2013** III ஆவது காலாண்டில் கிடைக்கப்பெற்ற கணக்காய்வு உசாவுதல்கள் - **04**

(ஈ) **2013** IV ஆவது காலாண்டில் கிடைக்கப்பெற்ற கணக்காய்வு உசாவுதல்கள் - **01**
(உ) கிடைக்கப்பெற்ற மொத்த கணக்காய்வு உசாவுதல்கள் - **11**

(ஊ) அரசாங்கத்தின் கணக்காய்வாளர் அதிபதி திணைக்களத்திடம் பதில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு உசாவுதல்களின் எண்ணிக்கை - **09**

(எ) பதில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வு உசாவுதல்களின் எண்ணிக்கை - **02**

மொத்த கணக்காய்வு உசாவுதல்களின் எண்ணிக்கை - **11**

ஆ. **2013** ஆம் நிதி ஆண்டில் உள்ளக கணக்கயர்வு பணிப்பாளர் குழுமத்தால் மேற்கொள்ளப்பட்ட உள்ளக கணக்காய்வுகளின் எண்ணிக்கை.

(1) **2013** ஆண்டில் கணக்காய்வு திட்டத்தின் படி மேற்கொள்வதற்கு திட்டமிடிப்பட்ட கணக்கயர்வுகளின் எண்ணிக்கை - **647**

(2) **2013** ஆம் ஆண்டின் நிதி ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட கணக்கயர்வுகளின் எண்ணிக்கை.

(அ) பொதுவான கணக்காய்வுகளின் எண்ணிக்கை - **293**

(ஆ) விசேட கணக்காய்வுகளின் எண்ணிக்கை - **06**

(இ) மேற்கொள்ளப்பட்ட மொத்த கணக்காய்வுகளின் எண்ணிக்கை - **299**

சாதனைகள்

6. **2013** ஆம் ஆண்டில் அரசாங்க கணக்கயர்வாளர் அதிபதி திணைக்களத்தால் அவதானிப்புக்கு உட்படுத்திய கணக்காய்வு உசாவுதல்களுக்கு பதில் வழங்கல்.

7. பதவிநிலை தலைவர்களின் வழிநடாத்தல் மற்றும் 29/2006 இன் கீழ் படை ஒழுக்க நெறி கட்டளைகளின் படி 21130705 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்தல்.

8. **2013.02.08** மற்றும் **2013.11.02** ஆந் திகதிகளில் அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களில் பங்குபற்றுதல்.

சம்பள மற்றும் ஆவண பணிப்பாளர் குழுமம்

அறிமுகம்

1. 1949 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 10 ஆந் திகதி இலங்கை தரைப்படையின் ஆரம்பம் தொடக்கம் சம்பளம் மற்றும் ஆவுண அலுவலகம் நடைமுறைப்பட்டுள்ளது. தரைபடை நடைமுறையொழுங்கு கட்டளை 18/94 இன் படி 1994 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆந் திகதி சம்பளம் மற்றும் ஆவண அலுவலகம், பணிப்பாளர் குழுமமாக மேம்படுத்தப்பட்டுள்ளது. சம்பளம் மற்றும் ஆவணப் பணிப்பாளர் குழுமத்தின் கடமைகளை மேலும் வினைத்திறனுடன் மேற்கொள்ளும் நோக்கத்தில் 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 02 ஆந் திகதி தரைப்படை நடைமுறையொழுங்கு கட்டளை 4/2007 மற்றும் 5/2007 இன் படி 3 மற்றும் 4 இலங்கை தரைப்படை பொதுச் சேவை சிறப்பணி (சம்பளம் மற்றும் ஆவணம்) பிரிவுகளை ஆரம்பிக்கப்பட்டது. இந்த பிரிவுகள் தமக்கே உரித்தான கடமைகளை இலகுவாக நிறைவேற்றும் பொருட்டு தொழிற்பாட்டு நடவடிக்கைகள் நேரடியாகவே பணிப்பாளர், சம்பளம் மற்றும் ஆவணங்களின் கீழ் நடைமுறைப்படுவதுடன், நிர்வாக நடவடிக்கைகள் மட்டும் படையணி நிலையம், இலங்கை தரைப்படை பொது சேவைகள் சிறப்பணியின் கீழ் நடைமுறைப்படுகின்றது.

பொறுப்புகள்

2. சம்பளம் மற்றும் படிகள், நட்டஈட்டு பணிக்கொடைகள் தொடர்பான கொள்கைகளை தயாரித்தல், சுயவிபரக் கோவைகளை பேணுதல், வருடாந்த மதிப்பீடுகள் மற்றும் மேலதிக புள்ளிவிபர அறிக்கைகளை தயாரித்தல், மற்றும் 1994 ஆம் ஆண்டு ஏப்பிரல் 30 ஆந் திகதிய தரைப்படை நடைமுறையொழுங்கு கட்டளை 18/94 இன் படி தரைப்படையின் தரவுகளை பேணுதல் சம்பளம் மற்றும் ஆவண குழுமத்தின் பொறுப்புகளாகும்.

பணிகள்

3. சம்பளம் மற்றும் ஆவணப் பணிப்பாளர் குழுமத்தின் பொறுப்பும் பணிகளும் பின்வருமாறாகும்.

அ. சம்பளம் மற்றும் படிகள், நட்டஈடு வழங்குதல் தொடர்பான கொள்கைகளை தயாரித்தல் மற்றும் தனிப்பட்ட தரவுகளை பேணுதல்.

ஆ. சம்பளம் மற்றும் படிகள் தொடர்பான பணிகளை உரியவாறு கூட்டிணைத்தல் மற்றும் வருடாந்த சம்பளங்கள், படிகள் என்பவற்றின் மதிப்பீடுகளை தயாரித்தல்.

இ. தனிப்பட்ட கடிதக்கோவைகளின் பேணல் மற்றும் அலுவலர்கள், ஏனைய படித் தரங்களின் சேவை நிலைய விபரங்களை பேணுதல்

ஈ. எதிர்காலத்திற்கு தேவைப்படுகின்ற தொழிலாளர்கள் மற்றும் புள்ளிவிபரங்களை பேணுவதற்காக திட்டங்கள் தயாரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

வருடாந்த மீளாய்வு

4. மரணமடைந்த, அங்கவீனராகிய பின்னர் விலகிச்சென்ற போர்வீரர்களும் உள்ளிட்ட/ஏனைய படித்தரங்களில் உள்ள **210,835** பேர்களின் சம்பளம், ஆவணங்கள் தொடர்பான கடமைகளின் பொருட்டு சம்பளம் மற்றும் ஆவண பணிப்பாளர் குழுமத்தின் கீழ் தற்போது 63 கிளைகள் 3 மற்றும் 4 தரைப்படை பொது சேவைகள் சிறப்பணி (சம்பளம் மற்றும் ஆவணங்கள்) பிரிவின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக மாதாந்த சம்பளம் மற்றும் படிகள் தயாரித்தல், வருடாந்த மதிப்பீடுகளை தயாரித்தல், ஓய்வூதிய சம்பளம் மற்றும் பணிக்கொடை படிகளை கணக்கிடல், நிரந்தர தரைப்படை உறுப்பினர்களின் சுய விபரக்கொவைகளின் பேணல், இரண்டாவது பகுதியில் கட்டளைகளை வெளியிடல், அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கின் கீழ் கடன் விண்ணப்பங்களை அட்டவணைப்படுத்தல் மற்றும் கடன்தொகை/முற்பணங்கள் வழங்குதல் மேற்படி சம்பளம் மற்றும் ஆவண பணிப்பாளர் குழுமத்தின் பிரிவு மூலம் மேற்கொள்ளப்படும் விசேட கடமைகளாகும். 3 மற்றும் 4 இலங்கை தரைப்படை பொது சேவைகள் சிறப்பணி (சம்பளம் மற்றும் ஆவணங்கள்) என 02 பிரிவுகள் வெவ்வேறாக நிர்வாக ரீதியாக இருப்பினும், சம்பளம் மற்றும் படிகள் வழங்குவதற்காக ஒவ்வொரு மாதமும் 8250.0 மில்லியன் ரூபாவிலான நிதி பொறுப்பினை வகிப்பதால் பணிப்பாளர் சபை மற்றும் இந்த பிரிவு இரண்டும் இணைந்து செயற்படுகின்றது.

5. சம்பளத் குழுமத்தொகுதி 04 இன் கீழ் 29 சம்பளப் பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், அது 27 அலுவலர்களையும் 352 ஏனைய படித் தரங்களின் அலுவலர்களையும் கொண்டமைந்துள்ளது. ஆவணங்கள், 15 குழுமத்தொகுதி அலுவலர்கள்களையும் 314 ஏனைய படித் தரங்களின் அலுவலர்களையும் கொண்டமைந்துள்ளது. ஒவ்வொரு சம்பளப் பிரிவிலும் ஏறத்தாழ 7000 - 7500 அளவிலான சம்பளக் கோவைகளை பேணப்படுவதுடன், ஒரு பேரேடு எழுதுநரால் ஆகக்குறைந்தது 600 - 650 சம்பளக் கடிதக்கோவைகள் பேணப்படுகின்றது. ஒவ்வொரு சம்பளக் கோவைகளும் பிரதான தரவுகள் மற்றும் வேறுபடும் தரவுகள் அதாவது திரட்டிய சம்பளம், பதவி உயர்வுகள், பங்கீடு, வீட்டு வாடகை, தகைமைகள் சம்பளம், இடர் படி, நலன்புரி படி, இடைக்கால படி மற்றும் ஏனைய படிகளை கொண்டமைந்துள்ளது.

6. தேவையான சந்தர்ப்பங்களில் மாதச் சம்பளம், படிகள், கடன், வெளிநாட்டு பயிற்சி படிகள் தொடர்பாக வருடாந்த மதிப்பீடுகள், மேலதிக மதிப்பீட்டு அறிக்கைகள், சம்பந்தப்பட்ட ஆண்டுகளில் சம்பளம் மற்றும் ஆவண பணிப்பாளர் குழுமத்திடமும் 3 மற்றும் 4 இலங்கை தரைப்படை பொது சேவை சிறப்பணி (சம்பளம் மற்றும் ஆவணங்கள்) பிரிவிடமும் பெற்றுக்கொள்கின்ற தரவுகளின் படி பணிப்பாளர் சபையால் தயாரிக்கப்படும்.

7. 2013.12.31 ஆந் திகதியல் சம்பளம் மற்றும் ஆவணப் பணிப்பாளர் குழுவால் மரணமடைந்த, அங்கவீனமான, விலகிச்சென்ற 26,879 பேர்களின் பொருட்டு சம்பளம் வழங்கப்படுகின்றது. மரணமடைந்தவர்களின் தங்கிவாழ்பவர்களுக்கு செலுத்தப்படும் தொகை மாதாந்தம் வேறுபடும். தங்கிவாழ்பவர்களுக்கு மாதச் சம்பளம் மற்றும் படிகள் இப் பணிப்பாளர் குழுமத்தால் செலுத்தப்படுவதுடன், விதவைகள், அநாதைகள் ஓய்வூதியச் சம்பளம் மற்றும் தங்கி வாழ்பவர்களின் படி செலுத்துவதற்கு தேவையான கடித ஆவணங்கள் 3 மற்றும் 4 இலங்கை தரைப்படை பொது சேவைகள் சிறப்பணியால் (சம்பளம் மற்றும் ஆவணங்கள்) அனுப்பி வைத்த பின்னர் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர் மூலம் செலுத்தல்கள் மேற்கொள்ளப்படும். மனிதநேய நடவடிக்கைகளின் போது பயங்கரவாத தாக்குதல் காரணமாக விதவைகளாகிய 2007.11.21 ஆந் திகதியின் பின்னர் மீண்டும் திருமணமானவர்களின் பொருட்டும் விசேட நட்டஈடு செலுத்தப்படுகின்றது.

8. நிரந்தரப் படையின் எல்லோரதும் தனிப்பட்ட கடிதக்கோவைகள் இந்த பணிப்பாளர் குழுமத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட ஆவணகூடம் மூலம் பேணப்படுகின்றது. படையணி நிலையங்கள் மற்றும் நிரந்தர/சுயேற்சை பிரிவுகளிடம் சமர்ப்பிக்கப்படும் (AFA) 9 அடிப்படையாகக்கொண்டு அதற்காக இரண்டாவது பகுதியில் கட்டளைகளை வெளியிடுதல் மாதாந்தம் மேற்கொள்ளப்படுகிறது. அதற்கு மேலதிகமாக சேவைக்கு ஏற்புடையதான எல்லா மாற்றங்களையும் இரண்டாவது பகுதியின் கட்டளைகளாக வெளியிடப்படுவதுடன். அந்த ஆவணங்கள் புறம்பாக பேணப்படும். சம்பளம் மற்றும் படிகள் செயற்பாடு, இரண்டாவது பகுதியினை வெளியிடல் கணினி நிகழ்ச்சிதிட்டம் மூலம் நடைமுறைப்படினும், இது வரை அந்த நிகழ்ச்சிதிட்டத்தின் முழுமையான உரிமையை அந்த நிறுவனம் சம்பளம் மற்றும் ஆவண பணிப்பாளர் குழுமத்திடம் வழங்கபப்டவில்லை.

<u>சாதனைகள்</u>

9. 2013 ஆம் ஆண்டு 01 ஆந் திகதி தொடக்கம் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை சம்பளம் மற்றும் படிகள் செலுத்திய அலுவலர்கள்/ ஏனைய படித்தரங்கள், 2013 ஆம் ஆண்டு 01 ஆந் திகதி தொடக்கம் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்ட மரணமடைந்த, அங்கவீனமாகி விலக்கப்பட்டவர்களின் விபரங்கள் பின்வருமாறாகும்.

அ. <u>2013 சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் 2013 திசெம்பர் 1 ஆந் திகதி வரை அலுவலர்கள் மற்றும் ஏனைய படித் தரங்களில் உள்ளவர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் வழங்குதல்.</u>

(1) <u>அலுவலர்கள்.</u>

மாதம்	நிரந்தர ரூபா.சதம்	சுயேற்சை ரூபா.சதம்	மொத்தம் ரூபா.சதம்
ஜனவரி	395,455,446.47	156,313,179.98	551,768,626.45
பெப்ரவரி	382,614,767.71	152,114,164.73	534,728,932.44
மார்ச்	384,017,008.15	149,784,238.94	533,801,247.09

ஏப்பிரல்	382,605,385.45	150,502,479.45	533,107,864.90
மே	394,385,339.47	155,681,712.52	550,067,051.99
ஜூன்	390,035,048.08	152,373,875.80	542,408,923.88
ஜூலை	401,361,507.43	152,038,191.48	553,399,698.91
ஆகஸ்ட்	416,532,135.56	163,540,276.91	580,072,412.47
செப்டெம்பர்	396,106,307.97	154,129,573.89	550,235,881.86
ஒக்டோபர்	410,965,974.49	153,447,337.97	564,413,312.46
நவம்பர்	405,335,320.90	154,448,172.29	559,783,493.19
டிசெம்பர்	399,884,710.17	154,448,172.29	554,332,882.46
மொத்தம்	**4,759,298,951.85**	**1,848,821,376.25**	**6,608,120,328.10**

(2) ஏனைய பதவிப் படித் தரங்கள்.

மாதம்	நிரந்தர ரூபா.சதம்	சுயேற்சை ரூபா.சதம்	மொத்தம் ரூபா.சதம்
ஜனவரி	4,828,123,773.48	2,640,660,477.93	7,468,784,251.41
பெப்ரவரி	4,373,862,440.26	2,342,709,541.91	6,716,571,982.17
மார்ச்	4,334,869,883.71	2,355,888,111.20	6,690,757,994.91
ஏப்பிரல்	4,348,645,379.67	2,355,751,387.12	6,704,396,766.79
மே	4,417,565,827.25	2,379,552,284.16	6,797,118,111.41
ஜூன்	4,391,442,251.19	2,350,492,817.33	6,741,935,068.52
ஜூலை	4,351,501,615.86	2,341,267,843.14	6,692,769,459.00
ஆகஸ்ட்	4,436,724,265.48	2,364,893,669.99	6,801,617,935.47
செப்டெம்பர்	4,490,103,473.94	2,423,841,844.68	6,913,945,318.62
ஒக்டோபர்	4,900,769,629.54	2,622,093,462.39	7,522,863,091.93
நவம்பர்	4,424,865,307.99	2,368,023,762.40	6,792,889,070.39
டிசெம்பர்	4,412,150,940.56	2,342,562,991.34	6,754,713,931.90
மொத்தம்	**53,710,624,788.93**	**28,887,738,193.59**	**82,598,362,982.52**

முழுமையான செலுத்தல்கள் (அலுவலர்கள் + ஏனைய பதவி படித் தரங்கள்) ரூபா 6,608,120,328.10 + ரூபா 82,598,362,982.52 = ரூபா 89,206,483,310.62

ஆ. **2013** சனவரி **01** அந் திகதி தொடக்கம் **2013** திசெம்பர் **1** ஆந் திகதி வரை மரணமடைந்த, அங்கவீனமாகி விலக்கப்பட்ட அலுவலர்களுக்கும், ஏனைய பதவி படித் தரங்களுக்கும் சம்பளம் மற்றும் படிகள் வழங்குதல்.

(1) அலுவலர்கள்.

மாதம்	நிரந்தர ரூபா.சதம்	சுயேற்சை ரூபா.சதம்	மொத்தம் ரூபா.சதம்
ஜனவரி	65,693,482.02	7,562,082.60	73,255,564.62
பெப்ரவரி	56,466,638.09	7,308,511.12	63,775,149.21
மார்ச்	64,562,292.18	7,729,415.75	72,291,707.93
ஏப்பிரல்	59,889,915.04	7,515,067.87	67,404,982.91
மே	62,009,680.33	7,532,517.03	69,542,197.36
ஜூன்	59,063,248.90	8,160,493.72	67,223,742.62
ஜூலை	59,504,675.75	7,698,645.65	67,203,321.40
ஆகஸ்ட்	59,055,960.97	7,642,002.41	66,697,963.38
செப்டெம்பர்	63,408,985.95	7,589,838.40	70,998,824.35
ஒக்டோபர்	62,084,576.54	7,836,591.53	69,921,168.07

நவம்பர்	60,636,450.86	7,722,633.75	68,359,084.61
டிசெம்பர்	61,132,141.57	7,793,551.65	68,925,693.22
மொத்தம்	**733,508,048.20**	**92,091,351.48**	**825,599,399.68**

(2) ஏனைய பதவி படித் தரங்கள்

மாதம்	நிரந்தர ரூபா.சதம்	சுயேற்சை ரூபா.சதம்	மொத்தம் ரூபா.சதம்
ஜனவரி	1,006,564,770.29	172,735,735.86	1,179,300,506.15
பெப்ரவரி	884,629,216.85	150,523,812.19	1,035,153,029.04
மார்ச்	919,157,959.28	169,077,709.90	1,088,235,669.18
ஏப்பிரல்	865,741,243.33	186,282,060.74	1,052,023,304.07
மே	928,769,810.62	164,939,188.87	1,093,708,999.49
ஜூன்	890,618,808.06	160,334,453.94	1,050,953,262.00
ஜூலை	937,326,566.61	163,166,105.40	1,100,492,672.01
ஆகஸ்ட்	910,188,094.89	164,099,425.49	1,074,287,520.38
செப்டெம்பர்	949,694,984.19	172,256,074.31	1,121,951,058.50
ஒக்டோபர்	1,063,179,088.55	187,103,145.11	1,250,282,233.66
நவம்பர்	954,326,525.66	169,895,629.42	1,124,222,155.08
டிசெம்பர்	931,141,469.49	163,348,279.15	1,094,489,748.64
மொத்தம்	**11,241,338,537.82**	**2,023,761,620.38**	**13,265,100,158.20**

முழுமையான செலுத்தல்கள் (அலுவலர்கள் + ஏனைய பதவி படித்தரங்கள் . ரூபா 825,599,399.68 + ரூபா 13,265,100,158.20 = ரூபா 14,090,699,557.88

10. **2013** ஆம் ஆண்டு **01** ஆந் திகதி தொடக்கம் **2013** ஆம் ஆண்டு திசெம்பர் **31** ஆந் திகதி வரையிலான அலுவலர்கள் மற்றும் ஏனைய பதவிப் படித் தரங்களின் அலுவலர்கள் வெளிநாட்டு பாடநெறிகள்/சுற்றுலா என்பவற்றுக்கு செலுத்தல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	விபரம்	பங்குபற்றிய எண்ணிக்கை	தொகை ரூபா.மில்
1.	விஜயம்/சுற்றுலா	536	134.0
2.	பாடநெறிகள்	1,428	891.9
	மொத்தம்	**1,964**	**1,025.9**

11. **2013** ஆம் ஆண்டுக்காக ஓய்வூதியங்களில் பணிக்கொடை மற்றும் அங்கவீனரின் ஓய்வூதியம் செலுத்தல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	விபரம்	பங்குபற்றிய எண்ணிக்கை	தொகை ரூபா.மில்
1.	ஓய்வூதியம்	4,606	2,518.3
2.	பணிக்கொடை	881	263.3
3.	அங்கவீனரின் ஓய்வூதியம்	155	92.3
	மொத்தம்	5,642	2,873.9

12. சமர்ப்பித்துள்ள கடன் விண்ணப்பங்களுக்கான இடர் கடன் செலுத்தல் (10 x மாதாந்த திரட்டிய சம்பளம் அல்லது ஆகக்கூடிய ரூபா. 250,000.00) தொடர்பான விபரங்களும் அரச வங்கிகள் மூலம் வழங்கப்படும் ஆதனக்கடன் மற்றும் போக்கவரத்து கடன் விண்ணப்பங்கள் சமர்ப்பித்துள்ள எண்ணிக்கையினர் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	விபரங்கள்	விண்ணப்பங்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (ரூபா.மில்)	ஏனைய
1.	இடர் கடன்	4,298	753.0	-
2.	ஆதனக் கடன்	458	-	வங்கிகள் மூலம் செலுத்தப்படுகின்றது.
	மொத்தம்	4,756	753.0	-

13. 2013 ஆம் ஆண்டு 01 ஆந் திகதி தொடக்கம் 2013 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் அளிப்பு பத்திரம், விசேட நட்டங்கள், விதவைகள் அநாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு தொகை, தங்கிவாழ்பவர்களின் படி மற்றும் மரண பணிக்கொடை வழங்குதல் என்பவற்றுக்கு ஏற்புடையதான விபரங்கள் பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	விபரங்கள்	விண்ணப்பங்களின் எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (ரூபா.மில்)
1.	விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம்	350	பிரதேச செயலகங்கள் மூலம் செலுத்தப்படுகின்றது.
2.	விசேட நட்டஈடுகள்	69	98.5
3.	நட்டஈடு -அ.நி.சு 21/88	39	3.1
4.	நட்டஈடு - தசுந 12/86	458	27.7
5.	விதவைகள் மீண்டும் திருமணமாகும்போது நட்டஈடு	117	322.4
6.	விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய உதவு தொகை மீண்டும் செலுத்தல்	2585	பிரதேச செயலகங்கள் மூலம் செலுத்தப்படுகின்றது.
7.	தங்கி வாழ்பவர்களின் படி	271	பிரதேச செயலகங்கள் மூலம் செலுத்தப்படுகின்றது.
8.	மரண பணிக்கொடை	826	157.9
	மொத்தம்	4715	609.6

14. சனாதிபதி செயலகம், அரச பாதுகாப்ப மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, தரைப்படை தலைமையகம் என்பவற்றுக்கு அனுப்புகின்ற தரைப்படை உறுப்பினர்களின் மனக்குறைகள். கடிதங்கள இந்த பணிப்பாளர் குழுமத்திடம் சமர்ப்பித்துள்ள என்னிக்கை பின்வருமாறாகும். அந்த எல்லா மனக்குறைகளையும், கடிதங்களையும் பணிப்பாளர் - சம்பளம் மற்றும் ஆவணம் தனிப்பட்ட முறையில் பரீட்சித்து சமர்ப்பிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக முன்னுரிமை அடிப்படையில் நிலவுகின்ற சட்டதிட்டங்கள்/ஒழுங்குவிதிகள் என்பனவுக்கு அமைவாக நடைமுறைப்படுவதற்கும், அது தொடர்பாக உரியவர்களை அறிவுறுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் அனுப்பி வைக்கப்படுகின்றது.

தொடர் இலக்கம்	இடம்	மனக்குறைகள்/கிடைக்கப்பெற்ற கடிதங்களின் எண்ணிக்கை
1.	சனாதிபதி செயலகம்	661
2.	அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு	23
3.	தரைப்படை தலைமையகம்	734
4.	ஏனைய	758
	மொத்தம்	**2176**

15. மூன்று தசாப்த கால யுத்தம் நிறைவடைந்த பின்னர் அரசமற்றும் தனியார் வங்கிகள் மூலம் தரைப்படை உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட கடன் தொகை வழங்கும் போக்கு அதிகரித்துள்ளது. அதன் படி 2013 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி தொடக்கம் திசெம்பர் வரை 44,797 கடண் படிவங்கள் (375 இல்) மற்றும் சம்பள அறிக்கைகள் இந்த பணிப்பாளர் குழுவிடமிருந்து வழங்கப்பட்டது. அதே போன்று தரைப்படை நலன்புரி நிதியத்திடம் 159039 பேரேடு பொழிப்புகள் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

16. **2013** ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் **2013** ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் தரைப் படை ஏனைய பதவி படித் தரங்களனதும் சேவை நீடிப்புகள் மற்றும் மீண்டும் ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	விபரங்கள்	எண்ணிக்கை
1.	மீண்டும் ஆட்சேர்ப்புகள்	6,091
2.	சேவை நீடிப்புகள்	12,408
3.	**மொத்தம்**	**18,499**

17. **2013** ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் **2013** ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் தரைப்படை அலுவலர்கள்.ஏனைய பதவி படித் தரங்களின் பொருட்டு சேவை சான்றிதழ்கள் பணிப்பாளர் - சம்பளம் மற்றும் ஆவணங்கள்- ஒப்பமிட்டு வழங்கியுள்ள எண்ணிக்கை தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	விபரம்	எண்ணிக்கை
1.	சேவை சான்றிதழ்கள் (அலுவலர்கள்)	124
2.	சேவை சான்றிதழ் புத்தகங்கள் (தபு 58) - ஆங்கிலம்	4,534
3.	சேவை சான்றிதழ் புத்தகங்கள் (தபு 58) - சிங்களம்	510
4.	சேவைச் சான்றிதழ்கள் (AFA 19) - ஆங்கிலம்	248
5.	சேவை சான்றிதழ் (AFA 19) - சிங்களம்	485
6.	சேவை சான்றிதழகள் (AFA 19 'அ')	3,232
	மொத்தம்	**9,133**

18. தரைப் படை உறுப்பினர்களின் குடும்பங்களில் பிறக்கின்ற 03 ஆவது பிள்ளைக்காக ரூபா. 100,000.00 படி வழங்குவதற்காக **2011** ஆம் ஆண்டு வரவு செலவு பிரேரணையின் மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் படி 2013 ஆம் ஆண்டுக்கு செலுத்தல்கள் மேற்கொள்ளப்பட்ட அலுவலர்கள்/ஏனைய பதவி படித் தரங்களின் எண்ணிக்கை பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	விபரங்கள்	விண்ணப்பங்களின் எண்ணிக்கை	ரூபா மில்லியன்
1.	அலுவலர்கள்	130	13.0
2.	ஏனைய பதவி படித் தரங்கள்	2273	227.3
	மொத்தம்	**2403**	**240.3**

19. தரைப்படை உறுப்பினர்களின் பெற்றோர்களின் பொருட்டு ரூபா. 750.00 விதம் விசேட படி வழங்குவதற்காக 2011 ஆம் ஆண்டின் வரவு செலவு பிரேரணை மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் படி 2013 ஆம் ஆண்டுக்கு அலுவலர்கள்/ஏனைய பதவி படித் தரங்களின் பொருட்டு செலுத்தப்பட்ட எண்ணிக்கை பின்வருமாறாகும்.

விபரம்	பெற்றோர்களின் எண்ணிக்கை	ரூபா(மில்லியன்)
பெற்றோர்கள்	144924	1072.2

20. **2013** ஆம் ஆண்டில் 52 சிவில் நீதிமன்ற வழக்குகளின் பொருட்டு சம்பள அறிக்கைகள் வழங்கும் படி பணிப்பாளருக்கு (சம்பளம் மற்றும் ஆவணங்கள்) நீதிமன்றம் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு சாட்சிகள் வழங்குவதற்கு தேவையான சம்பள கடித ஆவணங்களை தயார் செய்து கொண்டு அலுவலர்கள்/சிரேஷ்ட கொனொனின் அலுவலர்கள் (பேனல் மற்றும் விவாகரத்து வழக்குகளின் பொருட்டு) கௌரவ நீதிமன்றத்தில் தோற்றுவதற்கு பணியாற்றப்பட்டுள்ளது.

21. **2013** ஆம் ஆண்டு சம்பளம் மற்றும் ஆவணங்கள் நடைமுறை தொடர்பான போதனைகளை நடாத்துவதற்கு 76 அலுவலர்களையும் 54 சிரேஷ்ட கொனொனின் அலுவலர்களையும் தரைப்படை பயிற்சி நிறுவனங்களிடமும் பிரிவகளிடமும் அனுப்பி வைக்கப்பட்டது.

22. **2013** ஆம் ஆண்டு சனவரி **01** ஆந் திகதி தொடக்கம் **2013** ஆம் ஆண்டு திசெம்பர் **31**ஆந் திகதி வரை சம்பளம் மற்றும் ஆவணங்கள் பணிப்பாளர் குழுமத்தால் தீர்க்கப்பட்ட சுயவிபரக் கோவைகளின் விபரங்கள் பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	மாதம்	ஆட்சே.செய் பணி. குழு கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை
1.	ஜனவரி	**1711**
2.	பெப்ரவரி	கிடைக்கப்பெறவில்லை
3.	மார்ச்	கிடைக்கப்பெறவில்லை
4.	ஏப்பிரல்	**2125**
5.	மே	கிடைக்கப்பெறவில்லை
6.	ஜூன்	**4242**
7.	ஜூலை	**4765**
8.	ஆகஸ்ட்	கிடைக்கப்பெறவில்லை
9.	செப்டெம்பர்	**246**
10.	ஒக்டோபர்	கிடைக்கப்பெறவில்லை
11.	நவம்பர்	கிடைக்கப்பெறவில்லை
12.	டிசெம்பர்	**496**
	மொத்தம்	**13585**

நிதிசார் விபரங்கள்

23. **2013** ஆம் ஆண்டு திசெம்பர் மாத நிதி அறிக்கை பிரகாரம் இலங்கை தரைப்படையின் சம்பளம் செலுத்திய எண்ணிக்கை **183,956** ஆகும். (போர் நடவடிக்கை பணிகளின் போது மரணமடைந்த மற்றும் அங்கவீனமுற்று விலக்கியவர்களை தவிர்ந்து) 2013 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் இடர்கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை 4298 ஆகும். எவ்வாறாயினும், **2011** ஒக்டோபர் **04** வரை சமர்ப்பிக்கப்பட்ட இடர் கடன் விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1190 ஆவதுடன், 179.8 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளது.மீதி கடன் விண்ணப்பங்களை தீர்ப்பதற்காக 750.0 மில்லியன் ரூபா தேவைப்படுகிறது. மீதி இடர் கடன்களை வழங்குவதற்காக அப் பணம் கிடைக்கப்பெறுவதன் ஊடாக வீரர்களின் மனோ தைரியத்தை உயர் மட்டத்தில் பேணுவதற்கு பாரிய உதவியாக அமைகின்றது. **2013** ஆம் ஆண்டுக்காக வெளிநாட்டு பாடநெறிகள்/விஜயங்கள் என்பவற்றுக்காக **354.0** மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. அதன் பின்னர் மேலதிகமாக **671.2** மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதுடன், அதன் படி **2013** ஆண்டுக்காக மொத்தச் செலவு **1025.9** மில்லியன் ரூபாவாகும். **2014** ஆம் ஆண்டுக்காக அதன் படி **210.0** மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அது போதுமற்றதாகும். ஆகையால் உத்தேசிக்கப்பட்டுள்ளவாறு ஆகக்குறைந்தது **1222.0** மில்லியன் ரூபா தொகை சம்பந்தப்பட்ட தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக கட்டாயமாக 2014 ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்படுதல் வேண்டும்.

24. ஓய்வூதியம் வழங்குவதலை பின் வருமாறு வகைப்படுத்தலாம்.

அ. சேவை ஓய்வூதியங்களை வழங்குதல்.

ஆ. இயலாமை ஓய்வூதியங்களை வழங்குதல்.

இ. விதவைகள் அநாதைகள் ஓய்வூதியம் வழங்குதல். (நிரந்தர மற்றும் சுயேற்சை).

ஈ. தங்கி வாழ்பவர்களின் படி வழங்குதல்.

25. ஓய்வூதிய விண்ணப்பங்களை தயாரித்தல் மற்றும் ஓய்வூதிய திணைக்களத்தின் செலுத்தல் அனுமதியின் பொருட்டு சமர்ப்பிக்கப்படும் பொறுப்பு சம்பளம் மற்றும் ஆவணப் பணிப்பாளர் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது. மேற் குறிப்பிடப்பட்டுள்ள ஓய்வூதியம் செலுத்தும் அனுமதி ஓய்வூதிய திணைக்களத்திலிருந்து கிடைக்கப்பெற்ற பின்னர் ஓய்வூதியம் வழங்குதல் உலிய பிரதேச செயலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படும்.

26. அரசாங்க நிர்வாக கூற்றறிக்கை இலக்கம் **6/2006**(iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள சம்பள அளவுத்திட்டங்களின் படி 2007 ஆம் ஆண்டு யூன் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையிலான காலப்பகுதியில் ஓய்வுபெற்ற தரைப்படை உறுப்பினர்கள் அண்ணலவாக **8890** அளவிலானோர்களின் ஓய்வூதியம் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் **28/2010**(1) இன் படி திருத்தம் செய்வதற்கு பணியாற்றப்பட்டுள்ளது. அச் செயற்பாட்டினை விசேட நிகழ்ச்சியாக நடைமுறைப்படுத்தியதுடன், 6219 ஓய்வூதியர்களின் திருத்தம் செய்யப்பட்ட விண்ணப்பங்களை தயாரித்து செலுத்தும் நடவடிக்கைகளின் பொருட்டு பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

27. **2013** ஆம் ஆண்டில் செலவு அறிக்கைகளின் சாராம்சம் பின்வருமாறாகும்.

அ. <u>தரைப் படை செலவு தலைப்பு.</u>

தொடர் இலக்கம்	விபரம்	ரூபா மில்லியன்
(அ)	(ஆ)	(இ)
1.	சம்பளம் மற்றும் படிகள்	88,624.1
2.	வெளிநாட்டு பாடநெறிகள்/விஜயங்களுக்கான படிகள்	1,056.5
3.	ஆதன கடன் வட்டி	210.3
4.	நட்டஈடு	60.9
5.	இணைந்த படிகள்	0.1
6.	பங்கீடுகள்	853.5
7.	பயிற்சி படிகள்	24.8
8.	ஏனைய	2.0
9.	அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு	1,333.3
	மொத்தம்	**92,165.5**

ஆ. <u>ஏனைய செலவு விடயங்கள்</u>

தொடர் இலக்கம்	விபரங்கள்	ரூபா.மில்லியன்
1.	மரணமடைந்த மற்றும் அங்கவீனராகி விலக்கிய (செலவு விடயம் - ஓய்வூதியத் திணைக்களம்)	13,975.0
2.	தரைப்படை உறுப்பினர்களின் குடும்பங்களில் பிறக்கும் 3 ஆவது குழந்தை பிறப்பிற்கு(செலவு விடயம் - அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு)	240.3
3.	போர் வீரர்களின் பெற்றோர்களுக்கு (செலவு விடயம் - அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு)	1,072.8
4.	பணிக்கொடை (செலவு தலைப்பு - ஓய்வூதிய திணைக்களம்)	3,222.2
	மொத்தம்	**18,510.3**

2013 ஆம் ஆண்டுக்காக சம்பளம் மற்றும் ஆவண பணிப்பாளர் குழுமத்தால் **110,669.5** மில்லியன் ரூபாவைக் கொண்ட அதிகளவிலான நிதி சார்ந்த பொறுப்பை வகித்துள்ளதாக தரவுகளின் படி அறிய வருகின்றது.

சொத்துக்களின் முகாமைத்துவ பணிப்பாளர் குழுமம்

அறிமுகம்

1. சொத்துக்களின் முகாமைத்துவ பணிப்பாளர் குழுமம் **21/2006** தரைப்படை நடைமுறையொழுங்கு கட்டளையின் படி **2005.11.14** திகதி ஸ்தாபிக்கப்பட்டது. இந்த பணிப்பாளர் குழுமம் நிதி முகாமைத்துவ கிளையின் கீழ் நிர்வகிக்கப்படுவதடன், பணிப்பாளர் குழுமத்தின் எல்லா தொழிற்பாடுகள் தொடர்பாக சொத்துக்கள் முகாமைத்துவ பணிப்பாளர், பணிப்பாளர் நாயகம் நிதி மகாமைத்துவத்திடம் பொறுப்பு கூறுதல் வேண்டும்.

பொறுப்பு

2. இலங்கை தரைப்படையிடம் பொது மக்களின் நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ள சொத்துக்களை பேணுவதற்காக ஆலோசனை வழங்குதல் மற்றும் நிதி ஒழுங்குவிதிகளின் படி நடைமுறைப்படுவதன் மூலம் தரைப்படையின் சொத்துக்களை வினைத்திறனாக மற்றும் பயனள்தாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும்.

நோக்கங்கள்

3. சொத்துக்களின் முகாமைத்துவ குழுமத்தால் தரைப்படையின் எல்லா சொத்துக்கள் தொடர்பான நடவடிக்கைகளின்போது தலையிட வேண்டுமென்பதுடன், சொத்துக்களை பொருளாதார ரீதியாக சிக்கனமாகவும் பயனுள்ளதாகவும் முகாமைத்துவம் செய்தல் அடிப்படை நோக்கங்களாகும்.

செயற் பொறுப்புகள்

4. இந்த பணிப்பாளர் குழுமத்தின் செயற்பொறுப்புகள் பின்வருமாறாகும்.

அ. தரைப்படையின் எல்லா சொத்துக்கள் தொடர்பாகவும் அறிக்கைகளை வைத்துக்கொள்ளுதல் மற்றும் பேணுதல். அதே போன்று புதிய சொத்துக்களை கொள்வனவுசெய்தல், நவீனமயப்படுத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பேணுதல், மேம்படுத்தல் போன்ற சந்தர்ப்பங்களில் சொத்துக்களின் பெறுமதியை நாளதுவரைப்படுத்தல் மற்றும் தேய்மானங்களை உள்ளடக்குதல் வேண்டும்..

ஆ. சொத்துக்களை சுவீகரித்தல் மீள்ஸ்தாபித்தல், ஆரம்ப மறுசீரமைப்புகள், அகற்றல்கள் தொடர்பான விபரங்களை தரைப்படை தளபதி மற்றும் ஆலோசனை குழுவிடம் தகவல் வழங்குதல்.

இ. காலத்திற்கேற்றவாறு நிலையான சொத்துக்களின் பொருட்டு சபைகளை நியமனம் செய்தல் (உதா:- மதிப்பீடு செய்தல், செவ்வை பார்த்தல், அகற்றல்) வருடாந்தம் மற்றும் விசேட மதிப்பீடுகளின் மூலம் சொத்துக்களின் செவ்வைத் தன்மையை உறுதிப்படுத்தல்.

ஈ. பயன்பாட்டுக்கு உதவாத மற்றும் பழுதுபார்த்தல் பொருளாதார ரீதியாக பயனற்ற சொத்துக்களை ஏலத்தில் விடவதற்கு ஏற்புடையதான கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் தயாரித்தல், அகற்றுவதற்கான அனுமதி வழங்குதல்

உ. சொத்துக்களை சுவீகரித்தல், பாதுகாத்தல், பேணுதல் மற்றும் வீண்விரயங்களை குறைத்தல் என்பவற்றுக்கு பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை அறிமுகப்படுத்தல், அந்த கட்டுப்பாட்டு முறைகளை கண்காணித்தல்.

ஊ தரைப்படையினரின் எல்லா சொத்துக்கள் தொடர்பாகவும் நிலையான சொத்துக்களின் பதிவேடு, கட்டுப்பாட்டு கணக்குகள் மற்றும் பேரேடுகளை பேண வேண்டுமென்பதுடன், நிலையான சொத்துக்கள் தொடர்பாக தரவு வங்கியினை பேணிக்கொண்டு உப பிரிவுகளின் கூட்டிணைப்புடன் அறிக்கைகளை நாளதுவரைப்படுத்தல், சொத்துக்கள் தொடர்பாக தகவல்களை வழங்குதல், பேணுதல், பாதுகாப்பு, மதிப்பிடல் மற்றும் எல்லா சொத்துக்களையும் செவ்வை பார்த்தல் மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஊ. அரச நிதி கொள்கைகளின் பிரகாரம் எப்பொழுதும் புலனாய்வு செய்வதனூடாக பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற சொத்துக்களை அடையாளம் காணப்பட்டு பெறுகை நடவடிக்கை மூலம் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் எல்லா சொத்துக்களையும் சுவீகரிப்பதற்கு மன்னுரிமைகளை தயாரித்தல்.

எ. பொது திறைசேரியால் வழங்கப்படும் ஆலோசனைகளுக்கமைவாக சொத்துக்கள் தொடர்பான கொள்கைகள் மற்றும் முறைகள் என்பன நாளதுவரைப்படுத்தல்.

வருடாந்த மீளாய்வு

5. பொது ஆய்வு தொடர்பான மீளாய்வு பின்வருமாறாகும்.

அ. நிதி ஒழுங்கவிதி **758/759** இன் படி களஞ்சியங்களில் சோதனைச் சரிபார்ப்புகளை மேற்கொள்ளுதல். அரச நிதி ஒழுங்குவிதிகள் **758/759** இன் படி திணைக்களத்தின் தலைவர் அல்லது நிறுவனத்திற்கு பொறுப்பான அலுவலரின் கீழ் உள்ள களஞ்சியங்களின் இருப்பு நிலைமையை பேணுகின்ற பதிவேடுகளின் பிரகாரம் செவ்வையாக உள்ளதான என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு சோதனைச் சரிபார்ப்புகளை கட்டாயமாக மேற்கொள்ளுதல் வேண்டும். பொதுவாக எல்லா தலைமையகங்கள்/பிரிவுகள் நிதி ஒழுங்குவிதிகளின் படி சரியான சோதனைச் சரிபார்ப்புகள் மேற்கொள்ளப்படுவதுடன், சரியான நடைமுறைகள் மற்றும் தேவையான ஆலோசனைகள் வெளியிடப்பட்டுள்ளன. இருப்புகளை பேணுகின்ற எல்லா தலைமையகங்கள்/பிரிவுகள் என்பவற்றிடம் மேற்கொள்ளப்படும் சோதனைச் சரிப்பார்ப்புகள் தொடர்பான காலாண்டு அறிக்கையினை சொத்துக்கள் முகாமைத்துவ குழுமத்திடம் சமர்ப்பிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. காலாண்டு அறிக்கைகளின் படி பாரிய அளவில் மீதியாகவுள்ள எரிபொருள் மற்றும் பங்கீடு போன்ற பொருட்களை மீண்டும் இருப்புகளுக்கு எடுக்கப்படும். 2012 ஆம் ஆண்டில் 4 ஆவது காலாண்டு மற்றும் 2013 ஆம் ஆண்டு முதலாவது மூன்று காலாண்டுகளில் மேலதிக பொருட்களின் பெறுமதியில் சாராம்ச அறிக்கை பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	ஆண்டு	பங்கீடுகள்				எரிபொருள்		முழு மொத்தம்	
		இலங்கை தரைப் படையின் சிறப்பணி அலகுகள்		ஏனைய		இலங்கை தரைப் படையின் சிறப்பணி அலகுகள்			
		ரூபா:	ச:	ரூபா:	ச:	ரூபா:	ச:	ரூபா:	ச:
1.	**2012** (4 ஆவது காலாண்டு)	1,211,613	23	2,175,414	13	610,858	00	3,997,921	36
2.	**2013** (1 ஆவது காலாண்டு)	1,198,292	20	1,389,232	09	571,968	59	3,159,492	88
3.	**2013** (2 ஆவது காலாண்டு)	1,201,407	78	1,958,161	60	478,219	58	3,637,788	96
4.	**2013** (2 ஆவது காலாண்டு)	1,010,197	65	1,115,537	66	576,649	76	2,702,385	07
முழு மொத்தம்		**4,621,509**	**86**	**6,638,344**	**48**	**2,237,694**	**93**	**13,497,552**	**27**

ஆ. வருடாந்த மீளாய்வு சபைகளை சரிபார்த்தல். அரச நிதி ஒழுங்குவிதி **756/757** இன் படி தரைபடையின் சுய கணக்குகளை வைக்கும் தலைமையகங்கள், பிரிவுகள் பேணுகின்ற களஞ்சியங்களில் உள்ள உபகரணங்கள், பொருட்களில் செவ்வைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு மற்றும் பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற பொருட்களை அடையாளம்காணுவதற்காக வருடாந்த ஆய்வு சபைகளை நியமனம் செய்யப்படுகின்றது. **2012** ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த ஆய்வு சபையின் விபரங்கள் பின்வருமாறாகும்.

சபைகள் நியமனம் செய்ய வேண்டிய இடங்களின் எண்ணிக்கை	சபைகளை நியமனம் செய்துள்ள இடங்கள்	சபை அறிக்கைகளை அனுப்பியுள்ள இடங்களின் எண்ணிக்கை	அனுப்ப வேண்டிய சபை அறிக்கைகளின் எண்ணிக்கை
589	589	589	இல்லை

இ. வருடாந்த பயனற்ற பொருள் அகற்றும் சபை அரச நிதி ஒழுங்கவிதி 770/771 இன் படி பயன்படுத்தவதற்கு பொருத்தமற்ற பொருட்களை/உபகரணங்களை அடையாளம்காணலை நோக்கமாகக்கொண்டு சபைகளை நியமனம் செய்யப்படுவதுடன், பரிந்துரைகளைக் கொண்டு விறிபனை, மாற்றங்கள், பழுதுபார்த்தல்கள், அழித்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பயனற்ற பொருள் அகற்றும் சபையின் விபரங்கள் பின்வருமாறாகும்.

சபைகள் நியமனம் செய்ய வேண்டிய இடங்களின் எண்ணிக்கை	சபைகளை நியமனம் செய்துள்ள இடங்கள்	சபை அறிக்கைகளை அனுப்பியுள்ள இடங்களின் எண்ணிக்கை	அனுப்ப வேண்டிய சபை அறிக்கைகளின் எண்ணிக்கை
518	518	518	இல்லை

ஈ. வருடாந்த பொருட்களை அழித்தல் அரச நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் 772/773 இன் படி அகற்றப்பட்ட பயன்படுத்துவதற்கு பொருத்தமற்ற பொருட்களைவ விற்பனை செய்தல், மாற்றம் செய்தல் அல்லது பழுதுபார்த்தல் என்பவற்றுக்கு பொருத்தமற்றதாயின் அப் பொருட்களை அழிப்பதற்காக அழித்தல் சபை நியமனம் செய்யப்படும்.. 2012 ஆண்டுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த அழிப்புச் சபையின் விபரங்கள் பின்வருமாறாகும்.

சபைகள் நியமனம் செய்ய வேண்டிய இடங்களின் எண்ணிக்கை	சபைகளை நியமனம் செய்துள்ள இடங்கள்	சபை அறிக்கைகளை அனுப்பியுள்ள இடங்களின் எண்ணிக்கை	அனுப்ப வேண்டிய சபை அறிக்கைகளின் எண்ணிக்கை
450	450	450	இல்லை

உ. இருப்புகளை பேணுகின்ற பிரிவுகளில் வருட இறுதியில் உள்ள தொகைகளின் பெறுமதியை கணக்கிடுதல். அரச நிதி ஒழுங்குவிதிகள் 507(1) இன் படி இருப்புகளை பேணுகின்ற பிரிவுகளின் வருட இறுதியில் நடைமுறை இருப்ப நிலைமைகளில் உள்ள பெறுமதியை கணக்கிடுதல் மற்றும் வருடாந்த கணக்கு நடவடிக்கைகளை நொக்கமாகக்கொண்டு இந்த இருப்புகளின் கணக்கெடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது. இருப்புகளை பேணுகின்ற இலங்கை தரைப்படையின் படைக்கலச் படையணி, பீரங்கி படையணி, பொறியியல் படையணி, சைகை படையணி, சைகை படையணி, மருத்துவ சேவைகள் பணிப்பாளர் சபை மற்றும் சேவை சிறப்பணி, போர்த் தளபாடங்களின் சிறப்பணி போன்ற இடங்களில் பேணுகின்ற இருப்பு நிலைமைகளின் செவ்வைத்தன்மை மற்றும் வருட இறுதியில் நடைமுறையிலுள்ள அளவுகளை கண்டறிதல் மற்றும் அதன் பெறுமதியை வருடாந்த கணக்க நடவடிக்கைகளில் சமர்ப்பித்தல் என்பன நோக்கமாகக்கொண்டு வருடாந்த இருப்புகளை கணக்கிடுதல் மேற்கொள்ளப்படுகிறது. 2012 ஆம் ஆண்டில் இருப்புகளின் பெறுமதி மேற்கொள்ளப்படும் இடங்களின் விபரங்கள் பின்வருமாறாகும்.

சபைகள் நியமனம் செய்ய வேண்டிய இடங்களின் எண்ணிக்கை	சபைகளை நியமனம் செய்துள்ள இடங்கள்	சபை அறிக்கைகளை அனுப்பியுள்ள இடங்களின் எண்ணிக்கை	அனுப்ப வேண்டிய சபை அறிக்கைகளின் எண்ணிக்கை
201	201	201	இல்லை

ஊ ஆண்டு இறுதியில் நிலையான சொத்துக்களின் இயல்பினை சரி பிழை பார்த்தல். அரச நிதி ஒழுங்குவிதி 507 (2) இன் படி ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் நிலையான சொத்துக்களின் இயல்பினை சரி பிழை பார்த்து குறிப்பு வைத்தல் வேண்டும். நிலையான சொத்துக்களின் இயல்பினை சரி பிழை பார்ப்பதனை நோக்கமாகக்கொண்டு சபைகளை நியமனம் செய்யப்படுவதுடன், 2012 ஆம் ஆண்டில் சரி பிழை பார்த்தல் சபைகளின் விபரங்கள் பின்வருமாறாகும். முன்னரான ஆண்டில் சபைகளை நியமனம் செய்யும் அறிக்கைகளை

பெற்றுக்கொள்கின்ற வருடத்தில் வழங்கப்படுகின்றது. மேலும் சொத்துக்களின் முகாமைத்துவ பணிப்பாளர் சபை மேலும் ஒரு படிமுறையை முன் வைத்து நிலையான சொத்துக்களின் இயல்பினை சரி பிழை பார்க்கும் செயற்பாட்டின் பொருட்டு புதிய கணினி முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

சபைகள் நியமனம் செய்ய வேண்டிய இடங்களின் எண்ணிக்கை	சபைகளை நியமனம் செய்துள்ள இடங்கள்	சபை அறிக்கைகளை அனுப்பியுள்ள இடங்களின் எண்ணிக்கை	அனுப்ப வேண்டிய சபை அறிக்கைகளின் எண்ணிக்கை
476	**476**	**476**	இல்லை

(1) தற்போதுள்ள நிலையான சொத்துக்களின் கணினி மென்பொருள் முறைமையை மேலும் வினைத்திறனுடன் கூடிய வெவ்வேறாக சரியான சொத்துக்களின் விபரங்களை பெற்றுக்கொள்வதற்கான, கணினி வலையமைப்பு நிகழ்ச்சியாக மேம்படுத்துவதற்கு தகவல் தொழில்நுட்ப பணிப்பாளர் குழுமத்தின் கண்காணிப்பின் கீழ் நடைமுறைப்படுகின்றது. தற்காலத்தில் அந்த கணினி வலையமைப்பு நிகழ்ச்சியின் செவ்வைத்தன்மை பரிசீலிக்கப்படுகிறது.

(2) இது வரை நிதிசார் அடிப்படையின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட நடைமுறையல்லாத சொத்துக்கள் தொடர்பான அசைவு அறிக்கை **2013** ஆண்டு தொடக்கம் முன்னோடி கருத்திட்டமாக அட்டூறு அடிப்படையின் கீழ் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

எ. <u>காணமல்போதல் மற்றும் நட்டங்கள், சேதங்கள் என்பவற்றின் கீழ் தரைப் படையின் சொத்துக்களை பதிவழித்தல் நடைமுறை.</u> அரச நிதி ஒழுங்குவிதிகளின் படி **102-109** தரைப் படையின் சொத்துக்கள் காணமல்போதல் அல்லது நட்டங்கள் சேதங்கள் நிகழ்ந்தவுடன் அதற்கான காரணம் மற்றும் அந்த பொருட்களுக்கான விபர அறிக்கையை உரியவாறு தயாரித்து, அந்த பொறுப்பு தொடர்பாக விசாரணை நடாத்தல் வேண்டும். விசேடமாக காணமல் போதல் மற்றும் நட்டங்கள் சேதங்களின் கீழ் பயங்கரவாத நடவடிக்கைகளின் கீழ் கவனத்தில் கொள்ள தக்கதான நட்டங்கள் ஏற்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளது.

ஏ. சம்பந்தப்பட்ட விசாரணை சபை மற்றும் ஆவி.நீதிமன்றங்களில் பெரும்பாலான நடவடிக்கைகளின் கூட்டிணைப்பு மற்றும் நிர்வாக பலவீனங்கள் காரணமாக முடிவடையவில்லை என்பதுடன், அந்த பலவீனங்களை தவிர்த்துக்கொண்டு துரிதமாக அதனை தீர்த்து வைப்பதற்கு சொத்துக்களின் முகாமைத்துவ பணிப்பாளர் குழுமங்கள் படைப் பகுதி தலைமையகங்கள்/ அணி நிலையங்கள் ஆகியவற்றிடம் தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும், நிதி ஒழுங்குவிதி **102-109** இன் படி உரிய அறிக்கைகளை தயாரித்தல் அதன் படி மேற்கொள்ளப்படுகிறது. அதன் பலனாக ஏற்புடைய நிகழ்வுகளை சீராக்குவதற்கு நீண்டகாலம் சென்றுள்ளதாகவும் அதன் விபர அறிக்கை பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

தொடர் இலக்கம்	படிநிலைகளின் படி கடிதக் கோவைகள்	நிகழ்வுகளின் எண்ணிக்கை	பெறுமதி	
			ரூபா	சதம்
1.	நிதி ஒழுங்குவிதி **104(3)** இன் கீழ் ஆரம்ப அறிக்கைகள்	88	82,287,636	03
2.	நிதி ஒழுங்குவிதி **104(4)** இன் கீழ் விசாரணை சபைகள்/ இறுதி அறிக்கைகள்	155	1,850,334,266	46
3.	நிதி ஒழுங்குவிதிகள் **109** இன் கீழ் பதிவழிபபு அறிக்கைகள்	77	458,080,581	49

<u>நிதி சார் விபரங்கள்</u>

6. <u>கேள்வி நடைமுறை</u> இ.த.ப.த.சி பிரிவுகளின் பொருட்களை மீள பொறுப்பேற்கும் களஞ்சியங்களில் (பொ.மீ.கை.கள) உள்ள அனைத்து பயன்படுத்துவதற்கு உதவாத வாகனங்கள்

மற்றும் பொதுவான பொருட்களை கேள்வி நடைமுறையின் படி அகற்றப்படுகின்னறது. **2013** ஆண்டில் கேள்வி நடைமுறையின் படி அரச வருமானத்தில் வரவு வைக்கப்பட்ட மொத்த தொகை 66,648,132.21 ரூபாவாகும். அதன் விபரங்கள் பின்வருமாறாகும்.

தொடர் இலக்கம்	அணி	வாகனங்களின் எண்ணிக்கை (லொட்)	வாகனங்களின் வருமானம்		பொது பொருட்களின் எண்ணிக்கை (லொட்)	பொது பொருட்களின் வருமானம்	
			ரூபா	ச:		ரூபா	ச:
1.	1 ஆவது அணி இலங்கை தரைப்படையின் போர் தளபாடங்களின் சிறப்பணி	165	24,985,670	0	22	6,566,630	10
2.	2 ஆவது அணி இலங்கை தரைப்படையின் போர் தளபாடங்களின் சிறப்பணி	126	11,909,414	11	7	1,060,994	0
3.	3 ஆவது அணி இலங்கை தரைப்படையின் போர் தளபாடங்களின் சிறப்பணி	37	3,122,130	0	10	1,182,018	0
4.	5 ஆவது அணி இலங்கை தரைப்படையின் போர் தளபாடங்களின் சிறப்பணி	53	2,523,800	0	7	1,020,200	0
5.	6 ஆவது அணி இலங்கை தரைப்படையின் போர் தளபாடங்களின் சிறப்பணி	34	2,950,127	0	4	1,407,499	0
6.	7 ஆவது அணி இலங்கை தரைப்படையின் போர் தளபாடங்களின் சிறப்பணி	67	6,353,400	0	7	3,566,250	0
முழு மொத்தம்		**482**	**51,844,541**	**11**	**57**	**14,803,591**	**10**

நலநிதி நிதியத்தின் பணிப்பாளர் குழுமம்

அறிமுகம்

1. தரைப்படையின் உறுப்பினர்களிடம் சேமிப்பு மற்றும் சிக்கனம் என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தரைப்படை நலன்புரி நிதியம் 1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன், அந்த நிதியம் 1996 ஆம் ஆண்டு சனவரி மாதம் 06 ஆந் திகதி தொடக்கம் இலங்கை தரைப்படை நலன்புரி நிதியமாக பெயரிடப்பட்டது. அதன் தொழிற்பாடுகள் மேலும் வளர்ச்சி அடைந்ததன் காரணமாக நலன்புரி நிதியம் 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30 ஆந் திகதி தொடக்கம் பணிப்பாளர் குழுமமாக ஆரம்பிக்கப்பட்டது..

பொறுப்புகள்

2. உறுப்பினர்களிடத்தில் உதவு தொகை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அந்த உதவுதொகை இலாபமானதாகவும் பாதுகாப்பதாகவும் முதலீடு செய்வதன் ஊடாக உயர் நலன்களை பெற்றுக்கொள்ளலாம்.

நிதியத்தை ஸ்தாபிப்பதற்கான பொது நோக்கங்கள்

3. உறுப்பினர்களிடத்தில் சிக்கனத்தை விருத்தி செய்தல் இதன் முக்கியமான நோக்கமாகும்.

4. இந்த நிதியத்தின் முக்கியமான தொழிற்பாடுகள் பின்வருமாறாகும்.

அ தரைப்படை உறுப்பினர்களுக்க இந்த நிதியத்தில் உறுப்பினர் தகைமையை வழங்குதல்

ஆ உறுப்பினர்களின் உதவு தொகை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் பேரேடுகளை பேணுதல்

இ உதவுதொகையை அரச வங்கிகளின் திறைசேரி உண்டியல்களில் குறுகிய கால மற்றும் நீண்டகாலங்களின் பொருட்டு முதலீடு செய்தல்

ஈ வைப்புகளின் பொருட்டு கிடைக்கப்பெறும் வட்டியிலிருந்து உறுப்பினறுக்கு அதிக வட்டி வீதத்தை வழங்குதல்

உ. வைப்புத் தொகையில் 85% ஐ கடன் தொகையாக வழங்குதல்

ஊ. உறுப்பினர்களுக்கு உதவுத்தொகையில் 80% ஆன தொகை வழங்குதல்.

எ. ஓய்வு பெறுகின்றபோது நிதிசார் நலன் தொகை வழங்குதல்.

ஏ. பயன்பெறுநர்களுக்கு நிதிசார் நலன் செலுத்தல் (உறுப்பினர்கள் மரணமடைந்தவுடன்)

வருடாந்த மீளாய்வு

5. **நிதியம் மற்றும் உறுப்பினர்களின் விபரங்கள் .** 2013 ஆம் ஆண்டில் 7597 தரைப்படை உறுப்பினர்களுக்கு உறுப்பினர் தகைமை வழங்கப்பட்டுள்ளதுடன், ஆண்டு இறுதியில் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 189731 ஆகும். வருடத்தில் நிதியம் 6.027 பில்லியன் ரூபாவால் விருத்தியடைந்துள்ளதுடன், வருட இறுதியில் நிதியத்தின் மொத்த பெறுமதி 442 பில்லியன் ரூபாவாகும்.

6. முதலீடுகள். 2012 ஆவது நிதி ஆண்டில் தரைப்படையிடமிருந்து தீர்க்கப்பட வேண்டிய விலைப்பட்டியல்களை தீர்ப்பதற்காக பொது திறைசேரியிடமிருந்து ஐந்து பில்லியன் ரூபாவிலான தொகை அதிக வட்டி வீதத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 18 அந் திகதி வழங்கப்பட்டுள்ளது.

7. 2013.12.31 ஆந் திகதி தொடக்கம் அரச வங்கிகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதிசார் விபரங்கள் பின்வருமாறாகும்.

அ. வங்கிகளின் முதலீட்டு விபரங்கள் (நிலையான வைப்புகள்) - 2013.12.31 ஆந் திகதியில்

விபரங்கள்	இல.வங்கி (ரூ.மில்)	தே.சேமி.வங்கி (ரூ.மில்)	மக்கள் வங்கி (ரூ.மில்)	அரச ஈட்டு முதலீட்டு வங்கி (ரூ.மில்)	பொது திறைசேரி (ரூ.மில்)	மொத்தம் (ரூ.மில்)	சதவீதம்
மீள் கொள்வனவு (ரூ.மில்)			175.00			175.00	0.49%
நிலையான வைப்புகள் (ரூ.மில்)	7,548.87	9,986.04	10,315.04	382.07		28,232.02	79.74%
கடன் பத்திரங்கள் (ரூ.மில்)	2,000.00					2,000.00	5.65%
பொது திறைசேரி யின் கடன் தொகை (ரூ.மில்)					10,000.00	10,000.00	14.12%
மொத்தம் (ரூ.மில்)	9,548.87	9,986.04	10,490.04	382.07	10,000.00	40,407.02	100%

ஆ. ஆண்டக்கள் மேற்கொள்ளப்பட்ட செலவுகள்.

(1) 80% பணம் மீள செலுத்தல்.

தொடர் இலக்கம்	மாதம்	எண்ணிக்கை	பெறுமதி (ரூ.சத)
1.	ஜனவரி	**520**	215,269,311.95
2.	பெப்ரவரி	**368**	166,863,575.44
3.	மார்ச்	**614**	341,557,013.94
4.	ஏப்பிரல்	**586**	354,975,767.68
5.	மே	**652**	335,641,320.89
6.	ஜூன்	**567**	259,562,765.81
7“	ஜூலை	**527**	245,890,460.26
8.	ஆகஸ்ட்	**538**	233,886,615.03
9.	செப்டெம்பர்	**517**	206,101,716.30
10.	ஒக்டோபர்	**396**	166,716,441.70
11.	நவம்பர்	**445**	186,865,735.73
12.	டிசெம்பர்	**255**	99,998,596.11
	மொத்தம்	**5985**	**2,813,329,320.84**

(2) இறுதி செலுத்தல்கள் மற்றும் பயனுகரிகளிடம் பணம் செலுத்தல்.

தொடர் இலக்கம்	மாதம்	எண்ணிக்கை	பெறுமதி (ரூ.சத)
1.	ஜனவரி	353	129,529,915.66
2.	பெப்ரவரி	726	540,791,972.76
3.	மார்ச்	899	564,706,369.46
4.	ஏப்பிரல்	1125	556,416,551.83
5.	மே	807	404,257,084.40
6.	ஜூன்	855	406,122,100.94
7.	ஜூலை	880	383,208,333.03
8.	ஆகஸ்ட்	755	315,023,018.50
9.	செப்டெம்பர்	707	260,115,559.94
10.	ஒக்டோபர்	498	168,684,482.24
11.	நவம்பர்	940	363,869,986.38
12.	டிசெம்பர்	73	15,580,177.91
	மொத்தம்	**8618**	**4,108,305,553.05**

(3) 85% கடன் தொகை செலுத்தல்.

தொடர் இலக்கம்	மாதம்	எண்ணிக்கை	பெறுமதி (ரூ.சத)
1.	ஜனவரி	571	100,548,000.00
2.	பெப்ரவரி	648	121,561,000.00
3.	மார்ச்	932	160,075,000.00
4.	ஏப்பிரல்	1033	175,090,000.00
5.	மே	891	154,479,000.00
6.	ஜூன்	1061	178,508,000.00
7.	ஜூலை	1034	171,630,000.00
8.	ஆகஸ்ட்	1115	187,151,000.00
9.	செப்டெம்பர்	1273	208,461,000.00
10.	ஒக்டோபர்	1044	172,861,000.00
11.	நவம்பர்	1380	227,956,000.00
12.	டிசெம்பர்	803	132,839,000.00
	மொத்தம்	**11785**	**1,991,159,000.00**

ஏனைய விடயங்கள்

8. உள்ளக கணக்காய்வு கடந்த 10 ஆண்டுகளின் பொருட்டு (2001 தொடக்கம் 2012 வரை) நலன்புரி பணிப்பாளர் குழுமத்தின் கண்ககுகளை கணக்காய்வு செய்யும் நடவடிக்கைகள் நிஹால் ஹெட்டியாரச்சி கணக்காய்வு கம்பெனியால் 2012 நவம்பர் 12 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டது. ஆயினும் கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றபோது அந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு மாதாந்த உதவுதொகை பட்டியல் மற்றும் பேரேடுகளின் பொழிப்புகளின் படி பேரேடுகளை நாளதுவரைப்படுத்தல், உதவு தொகை செலுத்தாதுள்ளஉறுப்பினர்களை சரியாக அடையாளம்காணல், மற்றும் சரியான மீதிகளை கொண்டுள்ள உறுப்பினர்களின் தரவுகளை நாளதுவரைப்படுத்தல் என்பன அடிப்படையானதும் அத்தியாவசியமானதுமான விடயமாக அடையாளம் காணப்பட்டது. அதன் படி 2013 செப்தெம்பர் 12 ஆந் திகதி பிரதி பதவிநிலை தலைவரின் அலுவலகத்தில் நடாத்தப்பட்ட இந்த பணிப்பாளர் குழுமத்திற்கான பொறுப்பான சபையில் சரியான உறுப்பினர்களின் கணக்கு விபரங்கள் கணினிமயப்படுத்தும் வரை உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. உறுப்பினர்களின் கணக்கு விபரங்களை கணினிமயப்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவ கணினி நிகழ்ச்சித்திட்டத்தினை நாளதுவரைப்படுத்தல் ஆகிய நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளதுடன், அந்த நடவடிக்கைகளை 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

9. நலன்புரி பணிப்பாளர் குழுமத்தின் கணினிமயப்படுத்திய நிகழ்ச்சித்திட்டம்/தரைப்படை தரவு வலைப்பின்னலுடன் கூட்டிணைதல்/நலன்புரி பணிப்பாளர் குழுமத்தின் இணையத்தளம். **2013** ஆம் ஆண்டில் நலன்புரி பணிப்பாளர் சபையின் நிதி முகாமைத்துவ கணினி நிகழ்சசித்திட்டம் கடன் கழித்தல் நடைமுறைக்காகவும் விஸ்தரிக்கப்பட்டது. நலன்புரி பணிப்பாளர் குழுமத்தின் கடமைகளில் ஈடுபட்டுள்ள பதவிநிலை அலுவலர்களின் கோரிக்கை பிரகாரம் கடமைகள் விரிவுபடுத்துவதற்கு சமமாக நிதியத்தின் முகாமைத்துவ கணினி நிகழ்ச்சித்திட்டத்தில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. நலன்புரி பணிப்பாளர் குழுமத்தின் செலுத்தும் நடைமுறையை துரிதப்படுத்துவதற்கு பயன்பாட்டிலிருந்த கையால் தயாரிக்கப்படும் அறிக்கைகள் குறைக்கப்பட்டன. மேலும் **2013** ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக புதிய உறுப்பினர் தகைமைகளை வழங்குதல் மற்றும் பேரேடுகளின் விபரங்கள் என்பன கணினிமயப்படுத்தப்பட்டது. **2013** ஆம் ஆண்டு இறுதியில் நலன்புரி பணிப்பாளர் குழுமத்தின் தரவு வலையமைப்பு, தரைப்படையின் தரவு வலையமைப்புடன் இணைக்கப்பட்டதுடன், மாதாந்த கழிவுப் பட்டியல் மற்றும் கடன் கழிப்பு விபரங்கள், சம்பளங்கள், ஆவணங்கள் பணிப்பாளர் குழுமத்திடமிருந்து தரைப்படை தரவு வலையமைப்பு ஊடாக வழங்குவதனை ஆரம்பிக்கப்பட்டது. உள்ளக கணக்காய்வு நடைமுறையின் வெற்றி மற்றும் அனைத்து உறுப்பினர்ககளின் கணக்கு விபரங்கள் , நிதியத்தின் முகாமைத்துவ கணினி நிகழ்ச்சித்திட்டத்தில் நாளதுவரைப்படுத்தும் நடவடிக்கைகளை முடிவுறுத்தியதுடன்,2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதியல் நலன்புரி பணிப்பளார் குழுமத்தின் எல்லா நடவடிக்கைகளையும் கணினி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு முடியுமாவதுடன், மிகப்பெரிய வெல்லைக்குள் தரைப்படை உறுப்பினர்களின் நலன்புரி நடவடிக்கைகளின் பொருட்டு பங்குகொள்வதற்கு நலன்புரி பணிப்பாளர் குழுமத்திற்கு ஆற்றல் கிடைக்கப்பெறும்.

நிதி பணிப்பாளர் குழுமம்

அறிமுகம்

1. அரசாங்கத்தால் வருடாந்தம் தேசிய வரவு செலவு திட்டத்திலிருந்து அதிக அளவு பாதுகாப்பு துறைக்கு அனுப்பப்படுவதுடன், அதில் அதிக பகுதி இலங்கை தரைப்படையின் திணைக்கள நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் நிதியத்தின் பயண்பாட்டுக்கு வைத்துக்கொள்ளப்படுகின்றது.

2. பொது மக்களின் பணத்தில் நிர்வாகத்தின் பிரதான கடமைப்பொறுப்பு (அரச வரவு செலவில் பொது திறைசேரியிடம் வழங்கப்படும் திரவத்தன்மையுடைய நிதி முகாமைத்துவம் மற்றும் கட்டுப்படுத்தல்) நிதி பணிப்பாளர் குழுமம் மூலம் இலங்கை கணக்காளர் சேவையில் முதல் வகுப்பின் அலுவலரால் மேற்கொள்ளப்படும்.

செயற்பொறுப்புகள்

3. அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் இலங்கை தரைப்படைக்கு ஏற்புடையதாக பொது மக்களின் பணத்தை கணக்கு வைத்தல் மற்றும் ஏனைய நிதிச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல், நிதி பணிப்பாளர் குழுமத்தின் பிரதான கடமைப்பொறுப்பு ஆவதுடன், பொது திறைசேரி மூலம் அதற்கு தேவையான வழிகாட்டல் மற்றும் ஏற்புடைய சுற்றுநிருபங்கள் வெளியிடப்படும்.

பணிகள்

4. இந்த பணிப்பாளர் சபையின் தொழிற்பாடுகள் பின்வருமாறாகும்.

அ. திணைக்களத்து செலவுகளின் கட்டுப்பாட்டுக்காக செலவு விடய பேரேடை பேணப்படுவதுடன், அதற்கு கட்டாயமாக சம்பந்தப்பட்ட ஆண்டின் தேசிய வரவு செலவு ஒதுக்கீடுகளைக்கொண்டு பகிரப்படும்.

ஆ. திணைக்களத்தின் நிதி முகாமைத்துவ முறைமையை வினைத்திறனுடனும் பயனுள்ளதாகவும் நடைமுறைப்படுத்தல்.

இ உப அலுவலகங்களுக்கு தேவையான வாறு பொது திறைசேரி மூலம் கட்டுநிதி மற்றும் உப கட்டுநிதி பெற்றுக்கொண்டு வழங்குதல்.

ஈ. திணைக்களத்தின் வருமானம் மற்றும் செலவு அரசாங்க கணக்கீடு முறைமையின் மூலம் கணக்கு வைத்தல்.

உ. திணைக்களத்து அலுவலக வங்கி கணக்கில் கடனீட்டுப் பத்திரங்களின் செலுத்தல் நடவடிக்கைகளை பேணுதல்.

ஊ திணைக்களங்கள் மற்றும் ஏனைய பெறுகை நடவடிக்கைகளுக்கான சமர்ப்பித்தல்களை மேற்கொள்ளுதல்.

எ. ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுடன் தமது திணைக்களத்தின் நிதி நடவடிக்கைகளை கூட்டிணைத்தல்

ஏ. வருடாந்த கணக்கு அறிக்கைகளை தயாரித்தல், (ஒதுக்கீட்டு கணக்கு மற்றும் முற்பண "B" கணக்கு) அவற்றை கணக்காய்வாளர் அதிபதி மற்றும் ஏனைய அரச அலுவலர்களிடம் அனுப்பி வைத்தல்

5. நிதி முகாமைத்துவக் கிளையின் கீழ் நிதிப் பணிப்பாளர் குழுமம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அதற்கமைய நிதிப் பணிப்பாளர் குழுமத்தின் ஊடாக தமது கடமைப் பொறுப்பினை கூடியளவு தெளிவாகவும் மற்றும் வெளிப்படைத் தன்மையுடனும் மேற்கொள்வதற்காகவும் தலைமை அலுவலகத்தின் கடமைப் பொறுப்பினை பகிர்ந்தளித்தல் ஒன்றாகவும் பனாகொட, அநுராதபுரம், மின்னேரியா, கிளநொச்சி ஆகிய பிரதேசங்களில் பிரதேச ரீதியாக கணக்கீட்டு நிறுவனங்கள் தாபிக்கப்பட்டுள்ளன.

6. உரிய தலைமையகத்தின் ஊடாக தமது கடமைப்பொறுப்பினை வினைத்திறனுடனும் மற்றும் விளைதிறனுடனும் செயற்படுத்துவதற்காக மேற்படி உப பிரதேச அலுவலகங்கள் பூரண பங்களிப்பினை வழங்குவதுடன் இறுதியில் இது நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அர்த்தமுள்ள பங்களிப்பொன்றினையும் வழங்குகின்றன.

வருடாந்த மீளாய்வு

7. 2013 ஆம் ஆண்டில் மீண்டெழும் மற்றும் மூலதன செலவுகளுக்காக தேசிய வரவு செலவுத்திட்டத்தில் **ரூ.**123,080,939.00 நிதி ஒதுக்கப்பட்டது. 2013 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதியத்தின் அளவு மற்றும் உண்மையான செலவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

நிதி சார் விபரங்கள்

செலவினத் தலைப்பு	விபரம்	மொத்த ஒதுக்கீடு	உண்மையாண ஒதுக்கீடு	உண்மையான பெறுமதி
மீண்டெழும் செலவுகள்				
1001-1003	தனியாள் வேதனாதிகள்	91,769,925000	91,741,600,653	28,324,347
1101-1508	ஏனைய மீண்டெழும்	25,130,189,000	22,701,757,659	2,428,431,341
	மொத்தம்	116,900,114,000	114,443,358,312	2,456,755,688
	மூலதனச் செலவுகள்			
மூலதன சொத்துக்களின் மறுசீரமைப்பு மற்றும் விருத்தி செய்தல்				
2001	கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்கள்	298,500,000	297,919,869	580,131
2002	இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்கள்	126,000,000	125,838,551	161,449
2003	வாகனங்கள்	118,000,000	80,698,437	37,301,563
மூலதன சொத்துக்களை சுவீகரித்தல்				
2101	வாகனங்கள்	105,000,000	16,149,291	88,850,709
2102	வீட்டு மற்றும் அலுவலக உபகரணங்கள	124,500,000	123,868,199	631,801
2103	இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்கள்	354,500,000	354,411,209	88,791
2104	கட்டிடங்கள் மற்றும் நிர்மாணிப்புக்கள்	902,000,000	900,496,847	1,503,153
2105	காணிகள் மற்றும் காணிகளை விருத்தி செய்தல்	1,000,000	968,793	31,207
2401	கட்டிடங்கள் மற்றும் பயிற்சி வழங்கல்கள் மற்றும் ஆற்றல்கள் விருத்தி	909,100,000	907,559,207	1,540,793
2502	ஏனைய முதலீடுகள்	3,242,225,000	3,242,054,476	170,524
	மொத்தம்	6,180,825,000	6,049,964,880	130,860,120
	முழு மொத்தம்	**123,080,939,000**	**120,493,323,192**	**2,587,615,808**
முற்பணக் கணக்கு				
உச்ச எல்லை	2,450,000,000			
உண்மையான செலவுகள்	1,427,119,159			
உண்மையான கடன் பெறுமதி	1,731,702,085			

விவசாய மற்றும் கால்நடை வளங்கள் பணிப்பாளர் குழுமம்

அறிமுகம்

1. 2013 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் 58% ஆகக் காணப்பட்டதுடன் மொத்த தேசிய உற்பத்திக்காக விவசாயத்துறையின் பங்களிப்பு 99% ஆகக் காணப்பட்டது. அதற்கமைய நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்காக விவசாயத்துறை முக்கிய பங்களிப்பு ஒன்றினை வழங்குகின்றது. 3 தசாப்பதங்களுக்கும் மேற்பட்ட காலமாக இலங்கைத் தீவில் நிலவிய கொடூரமான தீவிரவாதம் முடிவடைந்ததுடன் இலங்கை தரைப் படையும் தேசத்தின் மகிமை மற்றும் அபிவிருத்திக்காக பல்வேறு துறைகளில் பங்களிப்பு வழங்குகின்றது. இலங்கை தரைப் படையானது நீண்ட காலமாக விவசாய நடவடிக்கைகளுக்காக விவசாயப் பண்ணைகளைப் பேணி வந்தது.எனினும் அதற்காக உரிய ஒருங்கிணைப்பொன்றோ அல்லது திட்டமிடப்பட்ட பொறிமுறை ஒன்றோ காணப்படவில்லை. ஆதலால் இலங்கை தரைப் படையின் மூலம் விவசாயத்துறைக்கு மிகவும் கூடிய ஒரு பங்களிப்பினை வழங்குவதனை நோக்காகக்கொண்டு 2010 ஆம் ஆண்டில் விவசாயப் பிரிவு ஒன்று பணிமத்திய நிலையம் இலங்கை தரைப் படை பொதுச்சேவைகள் படையணியின் கீழ் தாபிக்கத் திட்டமிடப்பட்டது. அதற்கமைய விவசாயத்துறையின் நெறிப்படுத்தலின் கீழ் நாட்டின் பல்வேறு பிரசேங்களில் விவசாய நடவடிக்கைகளை பரவச்செய்வதற்காக பாரியளவிலான விவசாயப் பண்ணைகள் ஆரம்பிக்கப்பட்டன.இலங்கை தரைப் படையில் விவசாய நடவடிக்கைகளின் பரவலுடன் அங்கு சிறந்ததோர் முகாமைத்துவம் மற்றும் உரிய நெறிப்படுத்தல் என்பவற்றின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்வதனை நோக்காகக்கொண்டு 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் விவசாய மற்றும் கால்நடை வளங்கள் பணிப்பாளர்கள் குழாம் என்ற பெயரில் புதியதோர் பணிப்பாளர் குழாம் ஒன்று இலங்கை இராணுவப்படையுடன் இணைந்தது. மேற்படி பணிப்பாளர் குழுமத்தின் நெறிப்படுத்தலின் கீழ் முறையானதோர் ஒருங்கிணைப்பு மற்றும் துணைப் பொறிமுறை ஒன்று நிலவுவதன் காரணமாக கடந்த இரு வருட காலகட்டப் பகுதியில் தரைப் படையினரின் விவசாயப் பண்ணைகளில் குறிப்பிடக்கூடிய அளவில் உற்பத்தி மற்றும் இலாபம் என்பவற்றை காணக்கூடியதாக இருந்தது.தற்போது விவசாய மற்றும் கால்நடை வளங்கள் பணிப்பாளர் குழுமத்தின் கீழ் 06 தரைப் படை விவசாயப் பண்ணைகள் கொண்டு நடாத்தப்படுவதுடன் பணிமத்திய நிலையம் இலங்கை தரைப் படைகள் பொது சேவைகள் படையணிக்குரிய 04 நிலையான மற்றும் சுயாதீன அலகுகளின் கீழ் 07 விவசாயப் பண்ணைகள் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. இந்த விவசாயப் பண்ணைகளில் இருந்து நெற் பயிர்ச்செய்கை அவ்வாறே காய்கறிகள் மற்றும் பழச்செய்கை பசும்பால் மற்றும் தயிறு உற்பத்தி என்பனவும் ஆடுகள் வளர்ப்பு அவ்வாறே லேயர் மற்றும் புரொயிலர் கோழி வளர்ப்பு என்பனவும் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றன.மேலும் நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் நிறுவப்பட்டுள்ள இலங்கை தரைப் படைக்குரிய விவசாயப் பண்ணைகளில் சகல விவசாய நடவடிக்கைகளுக்கும் தேவையான ஆலோசகர்களின் பங்களிப்பும் வழங்கப்படும்.

பொறுப்புக்கள்

2. தரைப் படையினரின் விவசாயப் பண்ணைகளில் அலுவலர்கள் மற்றும் ஏனைய பதவிகளில் உள்ளவர்களுக்கு உயர் தொழிநுட்ப நவீன மற்றும் புதியதோர் விவசாயக் கல்வியினை வழங்குதல்.

3. தரைப் படையினரின் விவசாயப் பண்ணைகளின் தேவைப்பாட்டிற்கு ஏற்ப கட்டாய சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட விவசாயத்துறை அலுவலர்கள் மற்றும் விவசாய காட்சிப்படுத்துநர்கள் / ஆலோசகர்கள் படையினரை நியமித்தல் மற்றும் குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு இணைத்தல் தொடர்பாக பணிதலைமையகத்திற்கு அறிவித்தல்.

4. தரைப் படையினரின் விவசாயப் பண்ணைகளின் தேவைப்பாட்டிற்கு ஏற்ப விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வேறாக்கல் மற்றும் பகிர்ந்தளித்தல்.

5. தரைப் படையினரின் விவசாயப் பண்ணைகள் மற்றும் தரைப் படையினரின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் விவசாயக் கருத்திட்டங்களின் பொதுவான நடைமுறைக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்குரிய அறிவினையும் மற்றும் ஆலோசனைளையும் வழங்குதல்.

அ. விவசாய மற்றும் கால்நடை வளங்கள் செயற்பாடுகளுக்காக நவீன இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பாவனை.

ஆ. பயிர்ச்செய்கை மற்றும் கால்நடை வளங்கள் உற்பத்திக்காக மிகவும் பொருத்தமான முகாமைத்துவ முறைகள்.

இ. விவசாயப் பண்ணைகளுக்குரிய விலங்குகளைத் தெரிவு செய்தல் (பாரியளவிலான / சிறயளவிலான)

ஈ. பயிர்ச்செய்கைக்கான பொருட்கள் மற்றும் பயிர் இனங்களைத் தெரிவு செய்தல்.

உ. விவசாயப் பண்ணைகளின் துப்பரவு ,பயிர்களுக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதார பாதுகாப்பு.

ஊ. இணைந்த பீடைக் கட்டுப்பாடு

எ. விவசாய இரசாயனப் பதார்த்தங்களை இடுதல், இரசாயனப் பதார்த்தங்கள் மற்றும் சேதனப் பசளைகளை இடல்.

ஏ. சேதனை பசளை மற்றும் உயிர்வாயு உர உற்பத்தி மற்றும் பாவனை

ஐ. நவீன நீர்ப்பாசன முறைகளை நிறுவுதல் மற்றும் முகாமைத்துவம்.

ஒ. பச்சைவீடு மற்றும் பொலித்தீன் வீடுகள் முகாமைத்துவம்.

ஓ. மண் பாதுகாப்பு.

ஔ. அறுவடை செய்தல் மற்றும் பின் அறுவடைத் தொழிநுட்பம்.

க. விதைகள் உற்பத்தி மற்றும் விலங்குகளின் இனப்பெருக்கம்.

<u>பணி</u>

6. சகல தரைப்படை விவசாயப் பண்ணைகளிலும் கட்டளை பிறப்பித்தல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் என்பவற்றை வினைத்திறனுடன் மேற்கொள்ளல் அவ்வாறே விவசாயக் கருத்திட்டம் மற்றும் ஒன்றிணைந்த விவசாயக் கருத்திட்டங்கள் என்பவற்றை ஆரம்பித்து பேணுதல்.

பணிகள்

7. மேற்படி பணிப்பாளர் குழுமத்தின் பணிகள் பின்வருமாறாகும்.

அ. தரைப் படையினரின் விவசாயப் பண்ணைகளில் மற்றும் விவசாயக் கருத்திட்டங்களில் உள்ள அலுவலர்கள் மற்றும் ஏனைய பதவிகளில் உள்ளவர்களுக்கு உயர் தொழிநுட்ப நவீன விவசாயக் கல்வி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.

ஆ. தரைப் படையினரின் விவசாயப் பண்ணைகளின் தேவைப்பாட்டிற்கு ஏற்ப கட்டாய சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட விவசாயத்துறை அலுவலர்கள் மற்றும் படையினரை நியமித்தல் (விவசாய ஆலோசகர் / காட்சிப்படுத்துநர்) மற்றும் குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு இணைத்தல்

இ. தரைப் படையினரின் விவசாயப் பண்ணைகளின் தேவைப்பாட்டிற்கு ஏற்ப விவசாய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வேறாக்கல் மற்றும் பகிர்ந்தளித்தல்.

ஈ. தரைப் படையினரின் விவசாயப் பண்ணைகள் மற்றும் தரைப் படையினரின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் விவசாயக் கருத்திட்டங்களின் பொதுவான நடைமுறைக்காக விவசாய மற்றும் கால்நடை வளங்கள் நடவடிக்கைகளுக்கு உரிய அறிவினையும் ஆலோசனைளையும் வழங்குதல்.

<u>வருடாந்த மீளாய்வு</u>

8. வருடாந்த மீளாய்வு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும்.

அ. **<u>நடாத்தப்பட்ட பாடநெறிகள்</u>**

(1). பாதுகாப்பு படைகள் தலைமையகத்தின் (மேற்கத்திய) கீழ் பல்வேறு இடங்களில் கடமையில் ஈடுபட்டுள்ள ஏனைய பதவிகளில் உள்ளவர்களுக்காக அடிப்படை விவசாய பாடநெறியினை நடாத்துதல்.

(2). 6 இலங்கை தரைப் படைகள் பொது சேவைகள் படையணி (சுயே) இற்குரிய ஏனைய பதவிகளில் உள்ளவர்களின் தொழில்சார் அறிவினை விருத்தி செய்வதற்காக மற்றும் தொழில்சார் பரிசோதனைக்கு வழிகாட்டுவதற்காக அடிப்படை விவசாய பாடநெறிகள் இரண்டினை நடாத்துதல்.

ஆ. விவசாய மற்றும் கால்நடை வளங்கள் பணிப்பாளர் குழாம்யின் அலுவலர்களுக்காக உருவாக்கப்படும் பாடநெறிகள்.

(1) விவசாயத்துறை உத்தியோகத்தர்களுக்காக பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விவசாய பீடத்தின் மூலம் நடாத்தப்படும் கால்நடை வளர்ப்பு தொடர்பான பாடநெறி

(2) கட்டாய சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட விவசாயத்துறை உத்தியோகத்தர்களுக்கு தரைப்படையின் கடிதங்களைத் தயாரித்தல், பரிமாற்றம், அலுவலக நடைமுறை தொடர்பாக இருநாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ஒன்றினை 6 இலங்கை தரைப் படை பொதுச்சேவைப்படையணி (சுயே) அலகின் ஊடாக நடாத்தல்.

இ. **<u>வெளிநாட்டுச் விஜயங்கள்</u>** இந்தோனேசியாவில் நடைமுறைப்படுத்தப்படும் நண்டுகள் வளர்ப்பு (செய்கை) மேற்கொள்ளல் தொடர்பான தொழிநுட்ப அறிவினைப் பெற்றுக்கொள்வதற்காக விவசாய மற்றும் கால்நடை வளங்கள் பணிப்பாளர் குழுமத்திற்குரிய அலுவலர் ஒருவர் இந்தோனேசியாவில் சுற்றுலாவில் ஈடுபடல்.

ஈ. ஏனைய செயற்பாடுகள் - சுற்றாடல் அமைச்சினால் நாடு பூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்ட மர நடுகைக் கருத்திட்டத்தின் ஒரு கட்டமாக தரைப் படையினரின் விவசாயப் பண்ணையாகிய கந்தகாடுவில் மர நடுகை கருத்திட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்தல்.

உ. தரைப் படையினரின் விவசாயப் பண்ணை செயற்பாடுகள்.

(1) <u>தரைப் படையினரின் விவசாயப் பண்ணை கந்தகாடு</u>.

(அ). விவசாய நடவடிக்கைகளுக்காக தரைப்படைசார் அடிப்படையில் 200 படைவீரர்களை புதிதாக இணைத்துக்கொள்ளல்.

(ஆ). நெல் உற்பத்தி மற்றும் விதை நெல் உற்பத்திக்காக 100 ஏக்கர்கள் வயல் நிலங்களில் பயிரிடல்.

(இ). இனப்பெருக்கத் தேவைப்பாட்டிற்காக ஆடுகளை வளர்த்தல் அலகினை பல்வேறு பிரிவுகளாகப் பிரித்தல்.

(ஈ). நாளொன்றிற்கு ஒரு பசுவில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பசும்பாலின் அளவினை குறைந்தது 10 லீற்றர்கள் வரையாவது கொண்டு வருவதற்காக பசும்பால் உற்பத்தி அலகினை விருத்தி செய்தல்.

(உ). பாரம்பரிய நெல் இனங்களை பயிரிடுதலை தொடர்ந்து நடைமுறைப்படுத்தல்.

(ஊ). 20 ஏக்கர்கள் பூமியில் இழைய வளர்ப்பு வாழைப் பயிர்ச் செய்கையினை ஆரம்பித்தல்.

(எ). போதிய நீர் முகாமைத்துவத்தின் ஊடாக வருடம் பூராகவும் அதி கூடிய வாழை அறுவடை ஒன்றினைப் பெற்றுக்கொள்வதற்காக 20 ஏக்கர்கள் நிலப்பரப்பில் நுண் நீர்ப்பாசன முறையொன்றினை நிறுவுதல்.

(ஏ). 50 ஏக்கர்கள் விஸ்தீரணமுடைய நிலப்பரப்பில் மரமுந்திரிகைச் செய்கையினை ஆரம்பித்தல்.

(ஐ). 5 ஏக்கர்கள் நிலப்பரப்பில் தெங்குச் செய்கையினை ஆரம்பித்தல்.

(ஒ). முன்னோடிக் கருத்திட்டம் ஒன்றாக 7.5 ஏக்கர்கள் நிலப்பரப்பில் இறப்பர் பயிர்ச் செய்கையினை ஆரம்பித்தல்.

(ஓ). சுற்றாடல் சுற்றுலா வர்த்தகத்தினை நோக்காகக்கொண்டு சுற்றுலா விடுதி ஒன்றினை நிர்மாணித்தல்.

(ஔ). மழை இல்லாத காலங்களில் நீர் வசதியினைப் பெற்றுக்கொள்வதற்காக சிறியதோர் நீர் மூலத்தினை நிர்மாணித்தல்.

(க). இலங்கை தரைப் படையினருக்கான உணவுத் தேவைப்பாட்டிற்காக இலங்கை தரைப் படைச்சேவைகள் பிரிவிற்கு காய்கறிகள் மற்றும் பழங்களைத் தொடர்ந்து வழங்கல்.

(2) <u>தரைப் படையினரின் விவசாயப் பண்ணை உதயார் கட்டு குளம்.</u>

(அ). தோடம்பழம் மற்றும் பலாப்பழம் என்பவற்றிற்கு பெறுமதி சேர்க்கும் கருத்திட்டம் ஒன்றாக புதிய தோடைப் பொதிகள் மற்றும் போத்தலில் அடைக்கப்பட்ட பழங்களை அறிமுகப்படுத்தி மேற்படி____கருத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்லல்.

(ஆ). அலுவர்கள் மற்றும் ஏனைய பதவிகளில் உள்ளவர்களின் நிருவாகத் தேவைப்பாடுகளுக்காக கூந்தல் ஒப்பனையகம் ஒன்றினை நிர்மாணித்தல்.

(இ). அலுவலகக் கட்டிடம் ஒன்றினை நிர்மாணித்தல்.

(ஈ). ஏனைய பதவிகளில் உள்ளவர்கள் 50 பேருக்கு போதியளவான படையினர் இல்லத்தினை நிர்மாணித்தல்.

(உ). காய்கறிச் செய்கை பண்ணப்படும் நிலத்தின் பரப்பினை 10 ஏக்கர்கள் வரை விரிவுபடுத்தல்.

(ஊ). 36 மில்லியன்கள் ‘ரூபாவினை செலவழித்து நீர்ப்பாசன முறையினை விருத்தி செய்தல்.

(எ). 2000 கமுகுக் கன்றுகள்,250 தோடம் பழக் கன்றுகள் 150 மாம்பழக் கன்றுகள்,150 கொய்யாப் பழக்கன்றுகள் என்பவற்றை களத்தில் ஸ்தாபித்தல்

(ஏ). இலங்கை தரைப் படையினருக்கான உணவுத் தேவைப்பாட்டிற்காக இலங்கை தரைப் படைச்சேவைகள் பிரிவிற்கு காய்கறிகள் மற்றும் பழங்களைத் தொடர்ந்து வழங்கல்.

(3) <u>தரைப் படையினரின் விவசாயப் பண்ணை நச்சிக் குடா.</u>

(அ). 400 ஏக்கர்கள் மரமுந்திரிகை நிலப்பரப்பில் இருந்து 3661 கீகிராம் மரமுந்திரிகை அறுவடையினைப் பெற்றுக்கொள்ளல்.

(ஆ). 10 ஏக்கர்கள் நிலப்பரப்பில் வேறு களப் பயிர்களை செய்கை பண்ணல்.

(4) <u>தரைப் படையினரின் விவசாயப் பண்ணை வெல்லங்குளம்.</u>

(அ). 05 ஏக்கர்கள் நிலப்பரப்பில் நெற் பயிர்ச்செய்கையினை ஆரம்பித்தல்.

(ஆ). ஏனைய பதவிகளில் உள்ளவர்களில் 60 பேருக்கு வசதிகளை வழங்கும் படைவீரர் இல்லம் ஒன்றினை நிர்மாணித்தல்.

(இ). புதியதோர் அலுவலகக் கட்டிடத்தினை நிர்மாணித்தல்.

(ஈ). அலுவலர்களுக்கு புதிய சாப்பட்டறை ஒன்றினை நிர்மாணித்தல்.

(உ). 228 ஏக்கர்கள் நிலப்பரப்பில் இருந்து 1708 கிராம் மரமுந்திரிகை அறுவடையினைப் பெற்றுக்கொள்ளல்.

(5) தரைப் படையினரின் விவசாயப் பண்ணை மெனிக்பார்ம்.

(அ). 25 ஏக்கர்கள் நிலப்பரப்பில் நெற் பயிர்ச்செய்கையினை ஆரம்பித்தல்.

(ஆ). காய்கறிச் செய்கைக்காக 08 ஏக்கர்கள் நிலப்பரப்பில் நீர்ப்பாசனக்க ட்டமைப்பு ஒன்றினை நிறுவுதல்.

(இ). ஏனைய பதவிகளில் உள்ளவர்களில் 100 பேருக்கு வசதிகளை வழங்கும் படைவீரர் இல்லம் ஒன்றினை நிர்மாணித்தல்.

(ஈ) இலங்கை தரைப் படையினருக்கான உணவுத் தேவைப்பாட்டிற்காக இலங்கை தரைப் படைச்சேவைகள் பிரிவிற்கு காய்கறிகள் மற்றும் பழங்களைத் தொடர்ந்து வழங்கல்.

(6) தரைப் படையினரின் விவசாயப் பண்ணை யால பலடுபான.

(அ) 03 ஏக்கர்கள் நிலப்பரப்பில் சேதனப் பசளை விவசாயப் பண்ணை ஒன்றினை ஆரம்பித்தல்.

சாதனைகள்

9. 2013 ஆம் அண்டில் விவசாயப் பண்ணைகளின் மொத்த வருமானம் 21.84 மில்லியன்கள் ஆவதோடு இலாபம் 9.62 மீல்லியன் ரூபாவாகும்.

10. பாதுகாப்புப் படைகள் தலைமையகம் (கிழக்கு) மற்றும் 21 ஆவது படையணிகள் தலைமையகத்தின் கீழ் தரைப்படையினருக்கான உணவுத் தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்காக கேள்வி அறிவித்தல் நடைமுறையின் கீழ் பிரதேச ரீதியாக விலைக்கு வாங்குவதற்கு தேவையான தொழிநுட்ப அறிவினை வழங்குவதன் ஊடாக பங்கீடு தேவைப்பாட்டிற்காக அரிசியனைத் தயாரித்து வழங்குவதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டதன் காரணமாக, தரைப்படைக்கு அரிசித் தேவைப்பாட்டினை வழங்கும் வழங்குனர்களின் கேள்வி அறிவித்தல் விலை மனுக்களை குறைக்க முடிதல்.

11. இலங்கை தரைப்படையினரின் உணவுத் தேவைப்பாடுகளுக்காக தரைப் படையினரின் விவசாயப் பண்ணையிலிருந்து காய்கறிகள் மற்றும் பழ வகைகளை இலங்கை தரைப்படையினரிற்கு வழங்குவதன் காரணமாக தரைப் படையினரிற்கு பிரதேச ரீதியாக காய்கறிகள் மற்றும் பழ வகைகளை வழங்குபவர்களின் கேள்வி அறிவித்தல் விலைமனுக்களின் விலைகளில் மிகத் தெளிவான மாற்றம் ஒன்றினை ஏற்படுத்தல்.

12. காய்கறி விதைகள் உற்பத்தியினை தொடர்ந்தும் பேணுதல் மற்றும் மேற்படி விதைகளை இலங்கை தரைப் படையினரின் விவசாயப் பண்ணைகளுக்கு இடையில் பரிமாற்றுக்கொள்ளல்.

13. **தரைப் படையினரின் விவசாயப் பண்ணைகளின் வருமானமஇசெலவுகள் மற்றும் இலாபம்**

தொடரிலக்கம்	விவசாயப் பண்ணை	வருமானம் (ரூ.)	செலவுகள் (ரூ.)	இலாபம் (ரூ.)
1.	கந்தகாடு	9,905,889.23	8,502,999.88	1,402,889.35
2.	மெனிக்பார்ம்	5,343,934.20	8,508,30.05	4,493,104.15
3.	நச்சிகுடா	1,096,859.55	439,775.00	6,570,84.55
4.	வெல்லங்குலம்	691,206.65	589,906.18	101,300.47
5.	உதயார்கட்டிகுலம்	4,853,546.16	1,885,379.66	2,968,166.50
	மொத்தம்	**21,891,435.79**	**12,268,890.77**	**9,622,545.02**

14. **2013 டிசம்பர் 31 முதலீடு**

தொடரிலக்கம்	விவசாயப் பண்ணை	வங்கிச் சேமிப்புக்கள்	
		பநடைமுறைக் கணக்கு(ரூ.)	நிலையான கணக்கு(ரூ.)
1.	கந்தகாடு	1,142,088.20	2,172,531.36
2.	மெனிக்பார்ம்	1,499,481.90	1,000,000.00
3.	நச்சிகுடா	603,610.00	1,500,000.00
4.	வெல்லங்குலம்	1,778,602.67	2,500,000.00
5.	உதயார்கட்டிகுலம்	91,754.96	3,497,157.23
	மொத்தம்	**5,115,537.73**	**10,669,689.59**

சவால்கள்

15. எதிர் நோக்கிய சவால்கள் பின்வருமாறாகும்

அ. 2013 ஆம் ஆண்டில் முழு நாட்டையும் பாதித்த கடும்கோடையின் காரணமாக சகல விவசாயப்பண்ணைகளின் பயிர்ச் செய்கைகளுக்கு கடுமையான பாதிப்புக்கள் ஏற்பட்டமையினால் வருமானம் குறைவடைந்தமை.

ஆ. மரமுந்திரிகைச் செய்கைக்கு ஏற்பட்ட கடுமையான பூச்சிகளின் பாதிப்பு மற்றும் அசாதாரண காலநிலை நிலைமைகள் காரணமாக பாரியளவில் அறுவடையில் வீழ்ச்சி மற்றும் வருமான நிலைமை வீழ்ச்சியிடைதல்.

இ. சகல விவசாயப் பண்ணைகளிலும் மாதாந்த போகத்திற்காக புதிதாக பயிரிடப்பட்ட பயிர்ச்செய்கைகளைப் பாதித்த கோடை நிலைமைகள் காரணமாக எதிர்பாராத செலவு ஏற்பட்டமை.

ஈ. விவசாயப் பண்ணை கால்நடை வளர்ப்பில் உயர் தரத்திலன்றிய அவ்வாறே ஆண் விலங்குகள் அதிகரித்தமையினால் மேற்படி விலங்குகளை அகற்றுவதற்கு பொருத்தமான முறையொன்று காணப்படாமை.

உ. நாளாந்த நடவடிக்கைகளுக்காக அத்தியவசியமான மனித வளங்களின் குறைபாடுகள்,இயந்திரங்கள் மற்றும் போதியளவான எரிபொருள் இல்லாமையினால் விவசாயப் பண்ணைகளில் உற்பத்தி வீழ்ச்சியடைதல்.

ஊ. துப்பரவாக்கப்படாத காணிகள் காணப்படுவதன் காரணமாக முதலீட்டிற்காக வருபவர்களின் ஆர்வம் குறைவடைதல்.

நிறைவேற்றுத்துறை ஜெனரல் கிளை

பொது விடயங்கள்

1. தலைமைப் பதவிநிலை உத்தியோகத்தர் பதவிகளை வகிக்கும் மேஜர் ஜெனரால் பதவிகளின் சிரேஷ்ட அலுவலர்களுக்கு இடையில் தரைப்படை தலைமையகத்தின் நிறைவேற்றுத்துறை ஜெனரால் கிளையின் தாபனத் தலைவராகிய நிறைவேற்றுத்துறை ஜெனரால் ஊடாக சகல நிருவாகம் சார் விடயப் பரப்பிற்கும் உரிய விடயங்கள் தொடர்பாக தரைப்படைத் தளபதி அவர்களிடம் பொறுப்புக் கூறுவர்.

பொறுப்புக்கள்

2. நிறைவேற்றுத்துறை ஜெனரால் கிளை ஒழுக்கம், நியதிகள் மற்றும் சேவை நிபந்தனைகள்,வைபவங்கள்,வைத்திய சேவைகள் என்பவற்றிற்காக தரைப்படைச் சட்டத்திற்கு அமைய பொறுப்புக் கூறல்.

3. நிறைவேற்றுத்துறை ஜெனரால் கிளையின் கீழ் நிருவகிக்கப்படும் பணிப்பாளர் குழுமம் மற்றும் நிறுவனங்கள் கீழ் வருமாறு அமையும்.

அ. ஆளனி நிருவாகப் பணிப்பாளர் குழுமம்.

ஆ. ஒழுக்க பாதுகாப்பு பணிப்பாளர் குழுமம்.

இ. நீதிச்சேவைகள் பணிப்பாளர் குழுமம்.

ஈ. நலன்புரி பணிப்பாளர் குழுமம்.

உ. இராணுவ சேவைகள் பணிப்பாளர் குழுமம்.

ஊ. மறுசீரமைப்பு பணிப்பாளர் குழுமம்.

(1) ரணவிரு செவன - ராகம.

(2) ரணவிரு எபரல்ஸ் யக்கல/அலவ்வ.

(3) அபிமங்சல 1.

(4) அபிமங்சல 11.

(5) அபிமங்சல 111.

(6) மிஹிங்து செத் மெதுர.

(7) இராணுவ வீரர்கள் வள மத்திய நிலையம்.

எ. மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங்கள் பணிப்பாளர் குழுமம்.

ஏ. பயிலுநர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் பணிப்பாளர் குழுமம்.

ஐ. அரவைணைப்புக் கல்வி வளங்கள் மற்றும் தகவல்கள் மத்திய நிலையம்.

ஒ. சிவில் நிருவாக பணிப்பாளர் குழுமம்.

ஓ. தலைமையக படையணி.

செயற் பொறுப்பகள்

4. நிறைவேற்றுத்துறை ஜெனரால் கிளையின் கீழ் நிருவகிக்கப்படும பணிப்பாளர்கள் குழுமங்களிடம் ஒப்படைக்கப்படும் பணிகள் தொடர்பாக கண்காணிப்புச் செய்து அவற்றை வினைத்திறனுடனும் மற்றும் கூடிய விளைதிறனுடனும் செயற்படுகின்றதா என்பதனை தேடிப் பார்க்கும் பொறுப்பினை வகித்தல்.

பணிகள்

5. நிறைவேற்றுத்துறை ஜெனரால் கிளையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும்.

அ. நிறைவேற்றுத்துறை ஜெனரால் கிளையின் கீழ் நிருவகிக்கப்படும் பணிப்பாளர் குழாம்களின் விடயங்கள் தொடர்பாக நிறைவேற்றுத்துறை ஜெனரால் இராணுவத் தளபதிக்கு அறிவூட்டும் பொறுப்பினை வகித்தல்.

ஆ. நிறைவேற்றுத்துறை ஜெனரால் கிளையின் கீழ் நிருவகிக்கப்படும் பணிப்பாளர் குழாம்களுக்காக நிர்வாக நடவடிக்கைகள் தொடர்பாக வழங்கப்படும் கட்டளைகளுக்கு இயைபாக கொள்கைகளை வகுத்தல் மற்றும் உரிய பணிப்பாளர் குழாம்யின் மூலம் உரிய முறையில் அது செயற்படுத்தப்படுகின்றதா என்பதனைக் கண்டறிதல்.

இ. தரைப்படைத் தளபதியின் கொள்கைகளுக்கு உரிய வகையில் இராணுவத் தளபதிக்குப் பதிலாக பணிப்பாளர் குழாம்க்கு உரிய கட்டளைகள் / ஆலோசனைகள் என்பவற்றை வழங்குதல்.

ஈ. சிறு கேள்வி அறிவித்தல் குழாம்யின் நடவடிக்கைகளுக்காக அதன் தலைவராக நிறைவேற்றுத்துறை ஜெனரால் பொறுப்பினை வகித்தல்.வருடாந்த மீளாய்வு.

வருடாந்த மீளாய்வு

6. பணிப்பாளர் குழுமங்களின் ஒருங்கிணைப்புடன் நடாத்தப்பட்ட தேசிய வைபவங்கள் பின்வருமாறாகும்.

அ. சுதந்திர தின விழா வைபவங்கள்.

ஆ. வெற்றி பெற்றமைக்கான அணிவகுப்பு.

இ. ‘‘நமக்காக நாம்’’ வீடுகள் கருத்திட்டம்.

ஈ வெற்றிக்கான பிரித்.

உ. கங்காராம வெசாக் வலயம்.

ஊ. தேசத்திற்கு மகுடம்.

7. பணிப்பாளர் குழுமங்களின் ஒருங்கிணைப்புடன் நடாத்தப்பட்ட தரைப் படைகள் வைபவங்கள் பின்வருமாறு அமையும்.

அ. பதக்கங்கள் வழங்கல்.

ஆ. பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்துள்ள தரைப் படை உறுப்பினர்களுடன் தொடர்புகொள்ளல்.

இ. இலங்கை யப்பான் நட்புறவு மன்றத்தின் ஊடாக நடாத்தப்படும் நன்கொடைகள்.

ஈ. தரைப்படையிலிருந்து அனுமதியின்றி விலகிச்சென்ற நபர்களை சேவையிலிருந்து நீக்கும் விஷேட நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பு செய்தல்.

உ. படைவீரர்களின் ரியல் ஸ்டார் படிமுறை.

ஊ. மேடை விளக்குகள் கண்காட்சி 2012.

எ. தரைப் படைகள் வர்ணங்கள் வழங்கும் வைபவம்.

ஏ. புத்தாண்டு வைபவம்.

ஐ. தரைப் படை வீர்ர்கள் தினத்தினை கொண்டாடுதல்.

ஒ. பாதுகாப்பு சேவைகள் விளையாட்டுப் போட்டி.

ஓ. வெளிநாட்டு பிரதம அதிதிகளின் வருகையினை ஒருங்கிணைப்புச் செய்தல்.

8. நிறைவேற்றுத்துறை ஜெனரால் கிளை 2013 ஆம் ஆண்டில் நிறைவேற்றிய விஷேட பணிகள் பின்வருமாறு அமையும்.

அ. யுத்தத்தினால் காயமடைந்த அலுவலர்கள் / ஏனைய பதவி படித்தரங்களில் உள்ளவர்கள் ஆகிய சகலரினதும் பூர்த்தியடையாத ஆ.வி.தி இனை நிறைவு செய்தல்.

ஆ. யுத்தத்தினால் காயமடைந்த அலுவலர்கள் / ஏனைய பதவி படித் தரங்களில் உள்ளவர்கள் ஆகிய சகலரினதும் வைத்திய வகைப்படுத்தல் நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல்

இ. யுத்தத்தினால் இறந்த அலுவலர்கள் / ஏனைய பதவி படித் தரங்களில் உள்ளவர்கள் ஆகிய சகலரினதும் எண்ணிகைகையினை குழாம் ஒன்றின் மூலம் நிறைவு செய்தல்.

ஈ. யுத்தத்தினால் காயமடைந்த அலுவலர்கள் / ஏனைய பதவி படித் தரங்களில் உள்ளவர்கள் ஆகிய சகலரினதும் எண்ணிகைகையினை குழாம் ஒன்றின் மூலம் நிறைவு செய்தல்.

உ.. யுத்தத்தினால் காயமடைந்த அலுவலர்கள் / ஏனைய பதவி படித் தரங்களில் உள்ளவர்கள் ஆகிய சகலரினதும் பதவி உயர்வு நடவடிக்கைகளை தீர்த்து வைத்தல்.

ஊ. தரைப்படை உறுப்பினர்களுக்காகவும் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களுக்காகவும் வைபவ மண்டபங்கள் விடுமுறை விடுதிகள் என்பவற்றை நிர்மாணித்தல்.

எ. தரைப்படை நலன்புரி நிதியத்தினை ஆரம்பித்தல்.

ஏ. தரைப்படை உறுப்பினர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களின் நலன்புரி விடயங்களுக்காக சலுகை அடிப்படையிலான 5 நலன்புரி பேருந்துகளை விலைக்கு வாங்கி சேவையினை ஆரம்பித்தல்.

ஐ. பத்து மாடிகளைக் கொண்ட தரைப் படை வைத்தியசாலை ஒன்றிற்கான திட்டங்களை வகுத்தல்.

ஆளணி நிருவாக பணிப்பாளர் குழுமம்

அறிமுகம்

1. 1994 ஏப்பிறல் மாதம் 30 ஆம் திகதி தரைப் படை நடைமுறையொழுங்கு 18/1994 இன் மூலம் தரைப் படைகள் தலைமையகத்தின் கூட்டுத் தாபனத்திற்கு ஏற்ப நிறைவேற்றுத்துறை ஜெனரால் கிளையின் கீழ் ஆளணி நிருவாகப் பணிப்பாளர் குழுமம் கட்டி எழுப்பப்பட்டது. மேற்படி பணிப்பாளர் குழுமம் மூலம் ஏனைய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடக்கம் ஓய்வூதியம் பெறும் சந்தர்ப்பம் வரையான நிருவாக நடவடிக்கைகள் மற்றும் அரச மற்றும் தரைப் படைவைபவங்களை ஏற்பாடு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பொறுப்பு

2. ஆளணி நிருவாகம் தொடர்பான கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காக அரச மற்றும் இராணுவ வைபவங்களை ஏற்பாடு செய்தல் தொடர்பான பொறுப்பினை மேற்படி பணிப்பாளர் குழுமம் வகிக்கும்.

செயற்பொறுப்புகள்

3. விளைதிறன்கொண்டதான மனித வள முகாமைத்துவம், ஏனைய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடக்கம் ஓய்வூதியம் பெறும் சந்தர்ப்பம் வரையான நிருவாக நடவடிக்கைகளை உறுதிப்படுத்தல்,கொள்கைகள் மற்றும் சேவை நிபந்தனைகளை வகுத்தல் மற்றும் மீளாய்வு, அரச மற்றும் தரைப் படை வைபவங்களை ஏற்பாடு செய்தல் ஆளணி நிருவாக பணிப்பாளர் குழாம்யின் வகிபாகமாகும்.

பணிகள்

4. ஆளணி நிருவாக பணிப்பாளர் குழுமத்தின் பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமையும்.

அ. மனித வள முகாமைத்துவம்,கெடட் அலுவலர்கள் மற்றும் தொழில்சார் உறுப்பினர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் சேவைகள் நிபந்தனைகள்

ஆ. ஏனைய பதவிகளில் உள்ளவர்களை சேவையிலிருந்து நீக்கல்,சேவை நீடிப்பு மற்றும் மீள ஆட்சேர்ப்புச் செய்தல்.

இ. தரைப் படை நிறுவனங்களைத் கட்டியெழுப்புதல்,மாற்றம் செய்தல்,களைத்து விடல் மற்றும் பல்வேறு விடயங்களுக்கு உரிய இராணுவக் கட்டளைகளை வெளியிடல்.

ஈ. அரச மற்றும் தரைப் படையின் வைபவங்களை ஏற்பாடு செய்தல் மற்றும் நடாத்துதல்.

உ. தரைப் படையினரின் வாத்தியக் குழுக்கள் மற்றும் கலாச்சாரக் குழுக்கள் என்பவற்றை ஒன்றிணைத்தல்.

ஊ. தரைப் படை ஆலோசனைகள் மற்றும் சீருடை என்பவற்றிற்குரிய ஒழுங்குவிதிகளை வெளியிடல்.

எ. பதக்கங்கள், அணிவிப்புக்கள் மற்றும் பாராட்டுக்களை வழங்கல்.

ஊ. மேலதிக படையணிகளின் கடமைகள் மற்றும் இணைப்புக்கள் என்பவற்றிற்குரிய கொள்கைகளை மீளாய்வு செய்தல் மற்றும் நியமித்தல்.

ஏ ஏனைய பதவிகளில் உள்ளவர்களின் பதவியுயர்வு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளைப் பேணுதல்.

ஐ. வெளிநாட்டுப் பாடநெறிகள்,சுற்றுலாக்கள்,கருத்தரங்குகள் ஆகியவற்றிற்காக பங்குபற்றும் ஏனைய பதவிகளில் உள்ளவர்களுக்கு மற்றும் அலுவலர்களுக்கு வெளிநாட்டுக் கொடுப்பனவுகளை உரித்தாக்கல்.

ஒ. ஏனைய பதவிகளில் உள்ளவர்களை அதிகார குழாம்க்கு நியமித்தல்.

ஓ. படையணிகள் பாதுகாப்புப் படைகள் தலைமையகம் மற்றும் பயிலுநர் பாடசாலைகளில் நிருவாக பரிசோதனைகள் ஒருங்கிணைப்பு மற்றும் நடாத்தல்.

ஔ. மரணமடைந்த மற்றும் காணமடைந்த அலுவலர்கள் மற்றும் ஏனைய பதவிகளில் உள்ளவர்களுக்கு நஷ்டஈடு வழங்கல்.

க. அலுவலர்கள் மற்றும் ஏனைய பதவிகளில் உள்ளவர்களை வைத்தியக் காரணங்கள் காரணமாக சேவையில் இருந்து நீக்கல்

ச. ஆளணி நிருவாகம் தொடர்பான கொள்கைகள் மீளாய்வு மற்றும் இற்றைப்படுத்தல் என்பவற்றை மேற்கொள்ளல்.

<u>வருடாந்த மீளாய்வு</u>

5 <u>வைபவங்கள்</u>. 2013.01.01 ஆந்திகதி முதல் 2013.12.31 ஆந்திகதி வரை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன வைபவங்கள் மற்றும் மரியாதை அணிவகுப்புக்கள் வழங்குவதனை ஏற்பாடு செய்து நடாத்தப்பட்டது.

அ. <u>2013.01.02.</u> 2013 ஆம் ஆண்டின் ஆரம்பத்தினை முன்னிட்டு தரைப்படை தளபதியினால் அலுவலர்கள் மற்றும் ஏனைய பதவிகளில் உள்ளவர்கள் ஆகியோரிற்கு உரையாற்றப்பட்டதுடன் பின்னர் தரைப் படைகள் தலைமையகத்தின் அலுவலர் குழாம் பங்குபற்றும் வகையில் தேநீர் விருந்து உபசாரம் ஒன்று தரைப் படைகள் தலைமையகத்தில் அமைந்துள்ள விளையாட்டு அரங்கில் நடாத்தப்பட்டது.

ஆ. <u>2013.01.10.</u> அரசாங்க பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் தலைமையில் ‘‘நமக்காக நாம்’’ வீடுகள் முன்மொழிவுத் திட்டத்தினை நிர்மாணிப்பதற்காக பங்களிப்பு வழங்கிய நபர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கும் நிகழ்வு ஒன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

இ. <u>2013.01.16.</u> அரசாங்க பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் தலைமையில் மொனராகலை மாவட்டத்தில் தரைப்படை வீரர்களின் நெருங்கிய உறவினர்களுக்காக உத்தம பூஜா பதக்கம் வழங்கும் வைபவம் ஒன்றினை குடாவெவ இல் அமைந்துள்ள கமாண்டோ பயிலுநர் பாடசாலையில் நடாத்தப்பட்டது.

ஈ. <u>2013.01.22.</u> தரைப்படை தளபதியின் பங்களிப்பில் அபிமங்சல III பான்கொல்ல கருத்திட்டத்திற்காக அடிக்கல் நாட்டும் வைபவம் நடாத்தப்பட்டது.

உ. <u>2013.02.04.</u> முப்படைகளினதும் மற்றும் பொலிசாரினதும் பங்களிப்பில் 65 ஆவது சுதந்திர தின வைபவம் திருகோணமலையில் நடாத்தப்பட்டது. இங்கு அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்காக முப்படைகளினதும் மரியாதை அணிவகுப்பு மற்றும் 21 மரியாதை வேட்டுக்கள் என்பன நடாத்தப்பட்டன.

ஊ <u>2013.02.09.</u> காலஞ்சென்ற கேர்னல் பிபீ பதிரன (ஓய்வுபெற்ற) கேஎஸ் அலுவலரின் தகனச் சடங்குகள் முழு இராணுவ மரியாதையுடன் தலாஹேன,மாலபே இல் அமைந்துள்ள தகனசாலையில் நடாத்தப்பட்டது.

எ <u>2013.03.02.</u> அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் ‘‘நமக்காக நாம்’’ வீடுகள் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் இரத்தினபுரி மாவட்டத்தில் இராணுவ வீரர்களுக்காக வீடுகளைப் பகிர்ந்தளிக்கும் வைபவம் ஒன்று நடாத்தப்பட்டது.

ஏ. <u>2013.03.13.</u> காலஞ்சென்ற பிரிகேடியர் எஏஎஸ் பெரேரா (ஓய்வு பெற்ற) அவர்களின் இறுதிச் சடங்குகள் முழு தரைப் படை மரியாதையுடன் பொரல்ல மயானத்தில் நடாத்தப்பட்டது.

ஐ. 2013.03.30. இலங்கை தரைப் படைகள் சுயாதீன படையணியின் படைகளின் நிறைவேற்றுத்துறை அதிகாரியினால் மலே இனத்திற்குரிய தரைப் படை வீரர்களுக்காக கொழும்பு 02 இல் அமைந்துள்ள மலே கிரிக்கெட் விளையாட்டரங்கில் நிர்மாணிக்கப்பட்ட நினைவுச் சின்னம் திறந்து வைக்கப்பட்டது.

ஒ. 2013.04.11. சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு வைபவம் (பக்மஹ உலெல) மலே கிரிக்கெட் விளையாட்டரங்கில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக தரைபடைத் தளபதி அவர்கள் கலந்துகொண்டார்.

ஓ. 2013.04.16. சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு வைபவத்தினை கொண்டாடுவதற்காக தரைபடைத் தளபதி அவர்களின் பங்களிப்பில் சகல பதவிகளுக்குமாக தேநீர் விருந்து உபசாரம் ஒன்று தரைப் படைகள் தலைமையக மைதானத்தில் நடாத்தப்பட்டது.

ஔ. 2013.04.16. சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு வைபவத்தினை முன்னிட்டு தரைப படை தளபதி அவர்கள் உட்பட சிரேஷ்ட அலுவலர்கள் தரைப்படை வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் சுகநலம் விசாரித்து அவர்களுக்கு பரிசுப் பொதிகளை வழங்கி வைத்தார்கள்

க. 2013.05.09. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் அனுசரனையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடாத்தப்பட்ட ஜெய பிரித்திற்குத் தேவையான சேவைகள் என்பவற்றை தரைப் படை வழங்கியது.பொரல்ல மயான முச்சந்தியில் இருந்து பௌத்த மத மாநாட்டு மண்டப கட்டிடம் வரை வீதியின் இருமருங்கிலும் வெசாக் கூடுகள் தூக்கப்பட்டு அலங்கரிக்கப்பட்டது.

ச. 2013.05.18. தீவிரவாதத்தினை வெற்றி கொண்டதனை கொண்டாடுதல் எனும் வெற்றி ஊர்வலம் காலி முகத்திடலில் நடாத்தப்பட்டதுடன் அதற்குப் பிரதம அதிதியாக அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் கலந்து கொண்டார். முப்படைகளின் மரியாதை அணிவகுப்பு, 21 மரியாதை வேட்டுக்கள் மற்றும் முப்படைகளின் பங்களிப்பில் மரியாதை அணிவகுப்பு என்பன அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்காக நடாத்தப்பட்டது

ட. 2013.05.18. இலங்கையின் பாதுகாப்பிற்காக உயிர் நீத்த தரைப் படை வீரர்களுக்கு மரியாதை செலுத்துதல் மற்றும் கௌரவிப்பதற்காக தரைப் படை வீரர்களின் உபகார வைபவம் ஒன்று பத்தரமுல்ல தரைப்படை வீரர்களின் நினைவுச் சின்னத்திற்கு அருகில் நடாத்தப்பட்டது.

த. 2013.05.18. வொசாக் வைபவத்தோடு இணைந்த வகையில் நடாத்தப்பட்ட தியவன்னா மற்றும் சம்போதி வெசாக் வலயம் என்பவற்றிற்காக வெசாக் கூடுகள் அலங்கரிப்பு மற்றும் மின் விளக்குகளை என்பவற்றை வழங்கி இலங்கை தரைப் படையின் பங்களிப்பினை வழங்கியது.

ப. 2013.05.27. இந்திய தரைப் படையின் புலனாய்வுப் பணிப்பாளர் நாயகம் லெப்டினன் ஜெனரால் ஆர்கே சிங் சிரேஷ்ட அலுவலரின் பங்களிப்பில் இலங்கையின் சமாதானங் கருதி கடமைகளில் ஈடுபடும்போது காலஞ்சென்ற இந்திய தரைப்படை வீரர்களுக்கு மரியாதை கௌரவத்தினை வழங்குவதற்காக மலர் உபசார வைபவம் ஒன்று பத்தமுல்லையில் அமைந்துள்ள இந்திய சமாதான நினைவுச் சின்னத்தின் அருகில் நடாத்தப்பட்டது.

ற. 2013.06.03. அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் தலைமையில் ‘‘நமக்காக நாம்’’ வீடுகள் முன்மொழிவுத் திட்டத்தின் கீழ் மாத்தளை மாவட்டத்தில் தரைப்படை வீரர்களுக்காக வீடுகளைப் பகிர்ந்தளிக்கும் வைபவம் ஒன்று ஹெட்டிபொல நுகவெல மகா வத்தியாலயத்தில் நடாத்தப்பட்டது.

ங. 2013.06.13. காலஞசென்ற கேனல் எச்பிஆர் ஹந்துனபதிரன ஆர்எஸ்பி பிஎஸ்சி அலுவலர் அவர்களின் முழு இராணுவ மரியாதையுடன் குலியாபிட்டிய மயானத்தில் நடாத்தப்பட்டது.

ஞ. 2013.06.18. முதல் 20 வரை மாதிவெலயில் அமைந்துள்ள ஈயம்போருவ கங்காதிலக விகாரையில் வேதாள தோரணம் மற்றும் பௌத்தர மந்திர என்பன அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் திறந்து வைக்கும் வைபவத்துடன் இணைந்த வகையில் நடைபெற்ற ஊர்வலத்திற்காக தரைப் படைவீரர்களின் ஆளணி பங்குபற்ற வைக்கப்பட்டது.

ந. 2013.06.17. தரைப்படை தளபதி அவர்களை ஜெனரால் பதவிக்கு பதவி உயர்த்துவதற்காக தரைபடை தளபதி அவர்களுக்கு மரியாதை அணிவகுப்பு ஒன்று தரைப் படைகள் தலைமையகத்தில் நடாத்தப்பட்டது.

ன. 2013.06.27. காலஞ்சென்ற பிரிகேடியர் பீஆர் ஜயசிங்ஹ (ஓய்வுபெற்ற) வீஎஸ்வி அலுவலரின் இறுதிச் சடங்குகள் முழு தரைப் படை மரியாதையுடன் குளியாபிட்டிய மயானத்தில் நடாத்தப்பட்டது.

ம. 2013.06.28. பாகிஸ்தான் தரைப் படை தலைவர் ஜெனரால் அபாக் பெர்வெஸ் கயானி அவர்களின் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக்கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தில் வீதி வரவேற்பு ஒன்று நடாத்தப்பட்டது.

ண. 2013.07.05. முதல் 07 வரை மாலைதீவுகள் அதிமேதகு ஜனாதிபதி கலாநிதி மொஹமட் வஹீட் அவர்களின் இலங்கைச் சுற்றுலாவிற்காக வைத்தியர் குழு ஒன்று மற்றும் பிரயாணப் பொதிகளை சுமந்து செல்வதற்கான கடமைக்காக படையணியினர் மற்றும் வாகனங்கள் தரைப் படையினரால் வழங்கப்பட்டது.

ய. 2013.07.15. அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் பங்களிப்பில் முப்படைகளுக்கு விக்கரம விருது வழங்கும் வைபவம் ஒன்று அலரி மாளிகையில் நடாத்தப்பட்டதுடன் அங்கு 232 முப்படைகளின் உறுப்பினர்களுக்கு வீர விக்ரம விபூஷணம், ரண விக்கிரம பதக்கங்கள் மற்றும் ரணசூர பதக்கம் என்பன வழங்கப்பட்டன.

ர. 2013.07.19. இலங்கை யப்பான் நட்புறவுச் சங்கத்தின் ஊடாக இலங்கை தரைப் படைக்கு தீயணைக்கும் வாகனங்கள் 02 இனை வழங்கி வைக்கும் வைபவம் தரைப் படைகள் தலைமையகத்தில் நடாத்தப்பட்டதுடன் மேற்படி வைபவத்தில் பிரதம அதிதியாக தரைப் படை தளபதி அவர்கள் கலந்துகொண்டார்.

ல. 2013.07.25. தரைப் படை தளபதி அவர்களின் தலைமையில் விக்ரம விருதினை வழங்கும் வைபவம் ஒன்று தரைப் படைகள் உடற் பயிற்சி அப்பியாச பயிலுநர் பாடசாலை மைதானத்தில் நடாத்தப்பட்டது.

வ. 2013.07.25. தரைப் படை தளபதி ஜெனரால் ஜே ஜயசூரிய ஆர்டபிள்யுபீ வீஎஸ்வீ யுஎஸ்பி என்டீயு பிஎஸ்சி தரைப் படை தளபதி பதவியிலிருந்து விலகுவதனை முன்னிட்டு மரியாதை ஊர்வலம் ஒன்று கொழும்பு 07 மெட்லென்ட் பிரசேத்தில் அமைந்துள்ள சீஎச் என் எப்சி மைதானத்தில் நடைபெற்றது.

அஅ. 2013.07.30. தரைப் படை தளபதி ஜெனரால் ஜே ஜயசூரிய ஆர்டபிள்யுபீ வீஎஸ்வீ யுஎஸ்பி என்டீயு பிஎஸ்சி தரைப் படை தளபதி பதவியிலிருந்து விலகுவதனை முன்னிட்டு வீதி வரவேற்பு ஒன்றும் மற்றும் மரியாதை அணிவகுப்பு ஒன்றும் பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஹெலியானா திடலில் நடாத்தப்பட்டது.

அஆ. 2013.08.01. தரைப் படை தளபதி லெப்டினன் ஜெனரால் ஆர்எம்டீ ரத்னாயக்க டபிள்யு .டபிள்யு வீ ஆர்டபிள்யுவீ ஆர்எஸ்பீ யூஎஸ்பீ என்டீயூ பீஎஸ்சி தரைப் படை தளபதி பதவி ஏற்பினை முன்னிட்டு மரியாதை ஊர்வலம் ஒன்று கொழும்பு 07 மெட்லென்ட் பிரசேத்தில் அமைந்துள்ள சீஎச் என் எப்சி மைதானத்தில் நடைபெற்றது.

அஇ. 2013.08.01. பாதுகாப்பு பதவிநிலைத் தலைவர் எயார் விப் மார்'ல் டபிள்யுடீஆர்எம்ஜே குணதிலக பாதுகாப்பு பதவிநிலைத் பிரதான பதவியிலிருந்து விலகுவதனை முன்னிட்டு முப்படைகளின் மரியாதை அணிவகுப்பு ஒன்று நடாத்தப்பட்டது.

அஈ. 2013.08.01. வினைத்திறனுடைய சேவையில் ஈடுபட்டிருக்கும்போது தமது உயிரினைத் தியாகம் செய்த தரைப் படை வீரர்களுக்கு மலர் அஞ்சலி செலுத்தும் வைபவம் ஒன்று, தரைப் படை தளபதி பதவியில் இருந்து விலகிச் செல்லும் ஜெனரால் ஜே ஜயசூரிய ஆர்டபிள்யுபி வீஎஸ்வீ யுஎஸ்பீ என்டீயூ பீஎஸ்சீ மற்றும் தரை படைத் தளபதி பதவியினை ஏற்றுள்ள லெப்டினன் ஜெனரால் ஆர்எம்டீ ரத்னாயக்க டபிள்யுடபிள்யுவீ ஆர்டபிள்யுபீ ஆர்எஸ்பீ யூஎஸ்பீ என்டீயூ பீஎஸ்சீ ஆகியோரின் தலைமையில் பத்தரமுல்லையில் அமைந்துள்ள தரை படை வீரர்களின் நினைவுச் சின்னத்திற்கு அருகில் நடாத்தப்பட்டது.

அஉ. 2013.08.02. ஜெனரால் ஜே ஜயசூரிய ஆர்டபிள்யுபி வீஎஸ்வீ யுஎஸ்பீ என்டீயூ பீஎஸ்சீ அவர்கள் பாதுகாப்பு பதவிநிலைத் தலைவர் பதவியில் கடமையைப் பொறுப்பேற்பதனை முன்னிட்டு முப்படைகளின் மரியாதை அணிவகுப்பு ஒன்று நடாத்தப்பட்டது.

8.	222-01-2-1403I மின்சாரம்	844,000,000.00	676,030,857.70
9.	222-01-2-1403 IV நீர்	396,000,000.00	303,354,464.22
	மொத்தம்	**1,449,699.84**	**1,167,791,716.91**

வழங்கல்கள் மற்றும் போக்குவரத்து பணிப்பாளர் குழுமம்

அறிமுகம்

1. வழங்கல்கள் மற்றும் போக்குவரத்து பணிப்பாளர் குழுமத்தின் தலைவர் அதன் பணிப்பாளராவார். அவர் பிரிகேடியர் பதவி வகிக்கின்ற ஒருவராவார். தரைப்படைக்கு அவசியமான வழங்கல்கள் மற்றும் போக்குவரத்து அலுவல்கள் இதன்மூலம் ஆற்றப்படுகின்றன. கரையோரப் போக்குவரத்து, விமான, உணவு, நீர், எரிபொருள், எழுதுநர் தேவைகள், சாரதிகள், சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதல் என்பவற்றுடன் அவசரத் தேவைகளின்போது இப்பணிப்பாளர் குழுமம் மூலம் தரைப்படைக்கு அவசியமான போக்குவரத்து வசதிகள் ஒழுங்குசெய்யப்படுகிறது.

பொறுப்புக்கள்:

2. வழங்கல்கள் மற்றும் போக்குவரத்துப் பணிப்பாளர் குழுமத்தின் செயற்பொறுப்பு முழுதுமளாவிய தரைப்படையின் வழங்கல்களையும் போக்குவரத்துத் தேவைகளையும் காப்புச் சேவைகளையும் சமாதான காலத்திலும் போர்க் காலத்திலும் நிறைவேற்றுவதாகும். அத்தகைய பணிகளும் பொறுப்புக்களும் பின்வருமாறு:

அ. வழங்கல்கள்: வழங்கல்கள் சேவை பிரதானமாக ஒப்பந்தங்களைக் கோரல், பங்கீட்டுணவு வகைகளைக் கொள்வனவுசெய்தல், இருப்பைச் சேகரித்தல், இருப்பு முகாமை, எரிபொருள் வழங்கல், பங்கீட்டுணவு விநியோகமும் கணக்குப் பேணுதலும் ஆகிய பணிகளை உள்ளடக்கியதாகும். அதேபோல், மீளச்செலுத்தும் அடிப்படையில் ஏனைய படை, கருத்திட்டங்களுக்காக தரைப்படைத் தலைமையகத்தினதும் பாதுகாப்பு அமைச்சினதும் ஆலோசனையின் பேரில் பங்கீட்டுணவு வகைகளும் எரிபொருள்களும் வழங்கப்படுகின்றன.

ஆ. போக்குவரத்து: முழுதுமளாவிய தரைப்படைக்கு அவசியமான முதல் வகுப்பு/இரண்டாம் வகுப்பு மற்றும் மூன்றாம் வகுப்பு போக்குவரத்து வசதிகளை வழங்குவதுடன், ஏனைய படைகள், அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கும் ஏனைய அமைப்புகளுக்கும் தரைப்படைத் தலைமையகத்தினதும் பாதுகாப்பு அமைச்சினதும் ஆலோசனையின் பேரில் போக்குவரத்து வசதி வழங்கப்படுகிறது. அதேபோல், 'பீ' வாகன பராமரிப்பும் மேற்கொள்ளப்படுகிறது.

இ. துணைமைச் சேவைகள்: தரைப்படையினருக்கு வழங்கப்படும் துணைமைச் சேவைகள் பின்வருமாறு:

(1) ஈமக்கிரியைகளுக்கான பற்றுச்சீட்டுக்களைத் தீர்த்தல்.

(2) காய்ந்த விறகு, எரிவாயு, சமையல் எரிபொருள் வழங்குதலும் கணக்கீட்டு அலுவல்களை மேற்கொள்ளலும்.

(3) வண்ணார சேவை.

(4) 'பீ' வாகன சாரதிகளைப் பயிற்றுவித்தல்.

(5) 'பீ' வாகன சாரதிகளைப் பரீட்சித்தலும் சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதலும்.

(6) எழுதுநர்களைப் பயிற்றுவித்தல்.

(7) சமையற்கலை உதவியாளர்களைப் பயிற்றுவித்தல்.

(8) சமையற்கலை உதவியாளர்களின் ஆலோசனைகளை தரைப்படைப் பிரிவுகளுக்கு பெற்றுக்கொடுத்தல்.

(9) வெதுப்பக தேவைகளை நிறைவுசெய்தல்.

வழங்கல்கள் (துணைமைச் சேவைகள் உள்ளிட்ட)

3. வழங்கல்கள் மற்றும் போக்குவரத்துப் பணிப்பாளர் குழுமத்தின் முன் மேற்பார்வையின்கீழ் இலங்கை தரைப்படை சேவைச் சிறப்பணியின் 07 பிரிவுகளும் (நிரந்தரப் பிரிவுகள் 06, தொண்டர் பிரிவு 01) தமக்கே உரித்தான கடமைகளை ஆற்றுகின்றன. அதேபோல், அப்பிரிவுகளினால் சுமார் 122,382 (தரைப்படை முனைப்பான சேவையில் ஈடுபட்டுள்ள படைவீரர்கள் அனைவரும்) படைவீரர்களின் போசாக்குத் தேவைகள் நிறைவேற்றப்படுகிறது. 2013 பெறுகைச் செயன்முறை விபரம் பின்வருமாறு:

தொடர் இல.	விடயம்	பெறுகை வகையீடு	பெறுகைக் குழு	பெறுகையின் தற்போதைய நிலைமை (2011)	இடங்களின் எண்ணிக்கை
1.	உலர் பங்கீட்டுணவு	வருடாந்த	அமைச்சரவை	கோரப்பட்டுள்ளது.	7
2.	பச்சை பங்கீட்டுணவு	வருடாந்த	அமைச்சரவை	கோரப்பட்டுள்ளது.	78
3.	இறக்குமதி செய்யப்பட்ட பங்கீட்டுணவுப் பொதிகள்	வருடாந்த	அமைச்சரவை	கோரப்பட்டுள்ளது.	1
4.	எரிபொருள் / உராய்வு நீக்கி	வருடாந்த	சிறு பெறுகை	முடிவடைந்துள்ளது	7
5.	சமையல் எரிவாயு	வருடாந்த	சிறு பெறுகை	முடிவடைந்துள்ளது	19
6.	விறகு	வருடாந்த	திணைக்கள பெறுகை	முடிவடைந்துள்ளது	73
7.	ஈமக்கிரியைச் சேவைகள்	வருடாந்த	திணைக்கள பெறுகை	முடிவடைந்துள்ளது	29
8.	வண்ணார சேவைகள்	வருடாந்த	திணைக்கள பெறுகை	முடிவடைந்துள்ளது	72

போக்குவரத்து

4. முதலாம் வகுப்பு வாகனங்கள் நிர்வாகக் கடமைகளுக்காக வழங்கப்படும் அதேவேளை, இப்பணிப்பாளர் குழுமம் மேலதிக வாகனங்களை விசேட கடமைகளுக்கும் நிர்வாகக் கடமைகளுக்கும் இக்காலப்பகுதியில் வழங்கியுள்ளது. அதேபோல், இந்த இரண்டாம் வகுப்பு தேவையை நிறைவேற்றுவதற்காக 2 ஆவது வகுப்பு வாகனங்களின் குழாமிலிருந்து வாடகைக் கொடுப்பனவு அடிப்படையில் சிவில் வழங்குநர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

பிற சேவைகள்

5. பயிற்சிகள்: வாழ்க்கைத்தொழில் மற்றும் தொழிற்பயிலுநர் பாடநெறிகள் சேவைச் சிறப்பணிப் பாடசாலைகள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன.

6. சாரதி அனுமதிப்பத்திரங்கள்: 2013 ஆம் ஆண்டிற்காக தரைப்படை சாரதிகளுக்கு நவீன டிஜிட்டல் முறைப்படி தயார்செய்யப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் அறிமுகப்பட்டது. அது 'பீ' வாகன சாரதிகளுக்கு வழங்கப்படுகிறது. தற்போது 8,352 அளவில் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சியவை தேவைக்கேற்ப வழங்கப்படும். தற்போது விநியோகிக்கப்படும் சாரதி அனுமதிப்பத்திரங்களின் நிலைமை பின்வருமாறு:

அ. கிடைக்கப்பெற்ற விண்ணப்பப்படிவங்களின் எண்ணிக்கை - 10,972

ஆ. விநியோகிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை - 8,352

இ. நிராகரிக்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை - 1,807

ஈ. அச்சிடப்பட்ட பின் பெற்றுக்கொள்ளவேண்டியுள்ள சாரதி அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை - 813

நிதிசார் விபரங்கள்

7. 2013 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகைகள் மற்றும் செலவுகள் பற்றிய விபரம் பின்வருமாறு:

தொடர் இல.	ஒதுக்கீட்டு விபரம்		மொத்த பகிர்ந்தளிப்பு (ரூ.மி.)	2013.12.31 ஆந் திகதி வரையான செலவின விபரம் (ரூ.மி.)
1.	222-01-2-1202 (i)	எரிபொருள்	3,733.8	5,375.2
2.	222-01-2-1202 (ii)	உராய்வு நீக்கி	248.7	181.6
3.	222-01-2-1203 (ii)	பங்கீட்டுணவு (நிரந்தர)	11,733.2	10,907.4
4.	222-01-4-1203 (ii)	பங்கீட்டுணவு (தொண்டர்)	2,750.0	1,897.5
5.	222-01-2-1203 (iii)	மருத்துவமனை பங்கீட்டுணவு	106.5	118.8
6.	222-01-2-1401 (vi)	சிவில் கையகப்படுத்திய வாகனங்களுக்கான கொடுப்பனவுகள்	1,152.0	1,062.5
7.	222-01-1-1401 (vii)	இ.போ.ச. சாரதிக்கான அறவீடுகள்	20.0	13.5
8.	222-01-2-1403 (ii)	காய்ந்த விறகு	50.7	68.7
9.	222-01-2-1403 (iii)	எரிவாயு	660.0	233.0
10.	222-01-2-1405 (iv)	வண்ணார சேவைகள்	26.5	30.4
11.	222-01-3-1405 (ix)	ஈமக்கிரியை சேவைகள்	5.5	4.5

போர்த் தளபாடங்கள் மாஸ்ரர் ஜெனரல் கிளை

அறிமுகம்

1. தரைப்படைக்கு அவசியமான பண்டங்களையும் உபகரணங்களையும் உரிய வேளைக்கு, உரிய இடத்திற்கு, உரிய அளவில், உரிய தரத்தில், சரியான முறையில் வழங்குவது போர்த் தளபாடங்கள் மாஸ்ரர் ஜெனரல் கிளையின்பாற்பட்ட பொறுப்பாகும். இச்செயன்முறையில் போர்த் தளபாடங்கள் சேவைகள் பணிப்பாளர் குழுமம், மின் மற்றும் எந்திரப் பொறியியல் பணிப்பாளர் குழுமத்தின் செயன்முறைகளுக்கு அட்டவணைப்படுத்த நேரிடும். அதேபோல், இக்கிளைக்குச் சொந்தமான போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமம்/மின் மற்றும் எந்திரப் பொறியியல் பணிப்பாளர் குழுமத்துடன் ஏற்படக்கூடிய பிரச்சினைகளுடனும் விடயத்துடனும் தொடர்புபட்ட விடயங்கள் சம்பந்தமான ஆராய்ச்சிகளுக்கும் ஊக்குவிப்புகளுக்குமான பதவிநிலை ஒருங்கிணைப்பு நிறுவனமொன்றாக இக்கிளை செயலாற்றுகிறது.

2. போர்த் தளபாடங்கள் மாஸ்ரர் ஜெனரல் கிளையினால் நிர்வகிக்கப்படும் பணிப்பாளர் குழுமத்தின் விபரம்.

அ. போர்த் தளபாட சேவைகள் சேவைகள் பணிப்பாளர் குழுமம்: கொள்வனவுகள், வழங்கல்கள், இருப்புப் பதிவு, களஞ்சியத்திடல், பண்டங்களின் பராமரிப்பு, உரிய முறையில் விநியோகித்தல், பண்டங்களின் பாதுகாப்பு, பேணல், வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பு, பண்டங்களை வழங்கல் என்பன போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமம் சார்ந்த பொறுப்புக்களாகும்.

ஆ. மின் மற்றும் எந்திரப் பொறியியல் பணிப்பாளர் குழுமம்: தரைப்படை வசமுள்ள எந்திர உபகரணங்கள், இலத்திரனியல் உபகரணங்கள், கட்புல உபகரணங்கள் என்பவற்றின் பராமரிப்பு, பழுதுபார்ப்பு, மேற்பார்வை என்பன மின் மற்றும் எந்திரப் பொறியியல் பணிப்பாளர் குழுமம் சார்ந்த பொறுப்புக்களாகும்.

பொறுப்புக்கள்

3. போர்த் தளபாடங்கள் மாஸ்ரர் ஜெனரல் கிளையின் பொறுப்புக்கள் பின்வருமாறு:

அ. போர்த் தளபாடங்கள் மாஸ்ரர் ஜெனரல் கிளைக்குச் சொந்தமான சகல பணிப்பாளர் குழுமங்களதும் செயற்பாடு குறித்து தரைப்படைத் தளபதிக்கு ஆலோசனை வழங்குதல்.

ஆ. போர்த் தளபாடங்கள் மாஸ்ரர் ஜெனரல் கிளைக்கும் பணிப்பாளர் குழுமங்களுக்கும் இடையில் உரிய ஒருங்கிணைப்புடன்கூடிய செயற்பாடொன்றைப் பேணுதல்.

இ. நிதிப்பிரமாணங்கள், பெறுகை வழிகாட்டுநெறிகள், திறைசேரி சுற்றுநிருபங்கள், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனையின் பிரகாரம் கொள்கைகளை வகுத்தலும், அவற்றுக்குரிய பணிப்பாளர் சபைகள் மற்றும் தலைமையகங்களுக்கு ஆற்றுப்படுத்தி அவற்றின் செயற்பாட்டை மேற்பார்வைசெய்தலும்.

ஈ. இன்றியமையாத வேளையில் இக்கிளையின் வரம்பிற்குட்பட்டு நிதிப் பிரமாணங்கள், பெறுகை வழிகாட்டுநெறிகள், திறைசேரி சுற்றறிக்கைகள், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் ஆலோசனைகள் என்பவற்றுக்கமைய தரைப்படைத் தளபதி சார்பாக முடிவெடுத்தல்.

உ. இக்கிளை சார்ந்த பணிப்பாளர் குழுமங்களின் உரிய இலக்கும் அவற்றின் செயற்பாடும் உரித்தும் குறித்து தரைப்படைத் தளபதியை அறிவுறுத்துதல்.

ஊ. தரைப்படைத் தளபதியினால் விதித்துரைக்கப்பட்ட கொள்கைகளின்படி பணிப்பாளர் குழுமங்களுக்கு உரிய வழிகாட்டுநெறிகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல்.

எ. போர்த் தளபாடங்களை வழங்கும் செயன்முறையின் வினைத்திறனையும் விளைவுப் பெருக்கத்தையும் உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், உரிய முறைமைக்கமைய அவை கணக்கீட்டில் உட்படுத்தப்படுவது குறித்து உறுதிப்படுத்திக்கொள்வதற்கும் போர்த் தளபாட களஞ்சியங்கள்/பிரிவுகள்/வேலைத்தலங்களில் அடிக்கடி கள சோதனைகளை மேற்கொள்ளல்.

ஏ. பண்ட முகாமையும் மின் மற்றும் எந்திரப் பொறியியல் கொள்கைகளும் செயன்முறைகளும் குறித்து தீவிர கவனம் செலுத்துதலும் அவசியப்படின் கொள்கைகளை அறிமுகப்படுத்துதலும்.

ஐ. வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரிக்க முன்னர் எதிர்வுகூறப்பட்ட மதிப்பீட்டை மீளாய்வுக்கு உட்படுத்தி இறுதித் திட்டத்தைத் தயாரித்தல்.

ஒ. வருடாந்தம் ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை நிர்வகிப்பதற்காக ஒரு கொள்கை நிர்வாகியாகச் செயற்படுதல்.

ஓ. உள்ளக ஊழல்களைத் தடுப்பதற்கு உரிய முறைமையொன்றை வகுத்தல்.

ஔ. நி.பி. 137/138 இன்பிரகாரம் பணிப்பாளர் சபையினால் அதிகாரமளிக்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களைத் தீர்க்கவேண்டிய நிறுவனங்களின் செயற்பாட்டை மேற்பார்வைசெய்தல்.

க. திட்டமிட்ட நோக்கம் அடையப்பெற்றுள்ள அளவு குறித்து புலனாய்வுசெய்தல்.

ங. போ.மா.ஜெ. பணிப்பாளர் குழுமத்தின் சிறு பெறுகைக் குழுவின் தலைவராகச் செயற்படுதல்.

ச. நிதி ஒதுக்கீடுகளை உரிய முறையில் ஒதுக்கீடுசெய்தலும் நலன்புரி பண்டங்களை உரிய முறையில் பகிர்ந்தளித்தலும்.

அடைவு

4. படைவீட்டு (பாளைய) பண்டங்களும் மூலதனப் பண்டங்களும் பற்றிய தரைப்படை பொது நிர்வாகமொன்றை அறிமுகப்படுத்தல்: தரைப்படை பரிணாமங்களுடன் தரைப்படைப் பிரிவுகளிலும் அதிகரிப்பொன்று ஏற்பட்டது. படைவீட்டு மற்றும் மூலதன உருப்படிகளை வெளியிடும்போது உரிய அளவின்றி இருப்பது ஒரு பிரச்சினையாக இருந்தது. போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் சபையின் ஒத்துழைப்புடன் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு உரிய முறைமையொன்று தரைப்படைத் தளபதியின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

5. மேற்பார்வை மற்றும் ஆவணங்கள் பிரிவுகளை அறிமுகப்படுத்தல்: உரிய மேற்பார்வையானது பெறுகைச் செயன்முறை வினைத்திறனாக அமைவதற்குக் காரணமாக அமையும். இத்தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்கு போ.மா.ஜெ. கிளையில் மேற்பார்வை மற்றும் ஆவணங்களுக்கான பிரிவுகள் தாபிக்கப்பட்டன.

6. சகல காணாமல்போதல்களையும் நட்டங்களையும் கணனிமயப்படுத்தல்: சொத்து முகாமைத்துவ பணிப்பாளர் குழுமத்தின் மீள்நிறுவுகைக்கு முன்னர் தரைப்படையில் காணாமல்போதல்கள் மற்றும் நட்டங்கள் பற்றிய அறிக்கைகள் போர்த் தளபாட மாஸ்ரர் ஜெனரல் கிளையின் மூலம் பேணப்பட்டு வந்தது. இவ்வறிக்கைகள் புடைப்பெயர்ச்சி நிலைமையில் தரைப்படையில் உபகரணங்களும் பண்டங்களும் காணாமல்போதல்களும் நட்டங்களும் இடம்பெறும். இவ்வாவணங்களின் முக்கியத்துவம் மற்றும் எதிர்காலத்தில் பரீசீலிக்கும் வசதிக்காக விசேடமாக பேணப்பட்டு வந்தது.

வருடாந்த மீளாய்வு

7. 2013 ஆம் ஆண்டிற்காக போர்த் தளபாட மாஸ்ரர் ஜெனரல் கிளையினால் 19 சிறு பெறுகைக் குழுக்களும் 16 திணைக்களப் பெறுகைக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டன.

8. 2013 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் மட்டுப்பாடு காரணமாக அத்தியாவசிய தேவைகளுக்கு முந்துரிமைப்படி தேவைகள் நிறைவேற்றப்பட்டன. சில தேவைகள் குறைந்த முக்கியத்துவம் காரணமாக நீக்கப்பட்டன. எவ்வாறாயினும், சகல தேவைகளையும் நிறைவேற்றுவதற்கு போர்த் தளபாட மாஸ்ரர் ஜெனரல் கிளையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

9. பொதுநலவாய நாடுகளின் அமர்வை வெற்றிபெறச்செய்வதற்கு பல்வேறு வசதிகள் அளிக்கப்பட்டன.

10. புதிய தரைப்படை மருத்துவமனையை நிறுவுவதற்கும் மருந்துகளைக் கொள்வனவுசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

11. லெபனான், ஹைட்டி ஆகிய நாடுகளில் நிலைகொள்ளச் செய்யப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையினருக்கு அவசியமான வசதிகள் முந்துரிமைப்படி வழங்கப்பட்டன.

12. போர்த் தளபாட மாஸ்ரர் ஜெனரல் கிளையும் அதன் கீழுள்ள பணிப்பாளர் குழுமங்களும் காலோசிதமாக எடுத்த தீர்மானங்கள் காரணமாக ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகளை மீளளிக்காமல் வேறு நிதியங்களின் ஊடாக ஈடுபடுத்தி அத்தியாவசிய பண்டத் தேவைகளை நிறைவு செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது.

நிதிசார் தகவல்கள்

13. நிதிசார் தகவல்கள் பின்வருமாறு:

தொடர் இல.	செலவுத் தலைப்பு	செலவுத் தலைப்பு விபரம்	நிதி ஒதுக்கீட்டு அளவு (ரூ.)	மொத்தச் செலவு (பிணைப்புகளுடன் (ரூ.)
1.	222-01-2-1302 (iii)	படைவீடு (பாளையம்) பராமரிப்பு	11,000,000.00	6,255,111.71
2.	222-01-2-1205(xxiv) 222-01-4-1205(xxiv)	சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு பதார்த்தங்கள்	13,000,000.00	11,549,491.73
3.	222-01-2-1405(xx)	தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக் கொடுப்பனவுகளையும் பெறுகைக் குழு கொடுப்பனவுகளையும் மேற்கொள்ளல்.	3,050,000.00	9,442,175.33
4.	222-01-3-2103(i)a	இயந்திர உபகரண செலவுத் தலைப்பு	229,393935.47	235,696,688.07
5.	222-01-3-2103(vii)	படை வீரர்களுக்கு வசதியளிப்பதற்கான செலவுத் தலைப்பு	7,000,000.00	8,585,474.00
6.	222-01-1-2502(2)	புதிய மருத்துவமனைக் கருத்திட்டம்	700,000,000.00	1,654,208,279.02

போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமம்

அறிமுகம்

1. போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமம் தரைப்படைத் தலைமையகத்தில் 1980 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. தரைப்படை நடத்தை ஒழுங்குகள் 18/94 உடன்படிக்கையின் பிரகாரம் சகல போர்த் தளபாட கைத்தொழில் நடவடிக்கைகளுக்கும் பொறுப்பு வகிக்க வேண்டும். இதில் உள்நாட்டு/வெளிநாட்டு கொள்வனவுகள், துறைமுக மற்றும் நிதிப் பிரிவுகள் அடங்கும்.

2. தரைப்படைத் தலைமையகம் மீள் ஒழுங்கமைக்கப்பட்டவுடன் போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமம் போர்த் தளபாட மாஸ்ரர் ஜெனரல் கிளையின் கீழ் கொண்டுவரப்பட்டது. 17 உத்தியோகத்தர்களையும் 217 ஏனைய பதவிப் படித்தரங்களையும் உள்ளடக்கிய ஒரு கூட்டுத்தாபனம் அனுமதிக்கப்பட்டது. திட்டமிடல் பிரிவு, கொள்வனவுப் பிரிவு, முன்னேற்ற மீளாய்வுப் பிரிவு, நிறைவேற்றுப் பிரிவு, துறைமுகப் பிரிவு, நிதிப் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு என்பவற்றை உள்ளடக்கி புதியதொரு கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தப்பட்டது.

பொறுப்புக்கள்

3. போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமம் சகல வெளிநாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்வனவுகள், வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் பண்டங்களை தீர்ப்பனவுசெய்தல், உறுதிச்சீட்டுக்களை உறுதிப்படுத்தல் ஆகியன தொடர்பாக போர்த் தளபாட மாஸ்ரர் ஜெனரல் தரைப்படைத் தளபதிக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

4. போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமத்தின் பொறுப்புக்கள் பின்வருமாறு:

அ. போர்த் தளபாட சேவைக்குரிய சகல தொழில்நுட்ப நடவடிக்கைகளையும் முறையாக கொள்கைகளுக்கு அமைய முன்னெடுத்துச்செல்வது குறித்து போர்த் தளபாட மாஸ்ரர் ஜெனரல் தரைப்படைத் தளபதிக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

ஆ. தரைப்படையின் இன்றைய தேவைகளை தீர்மானிக்கும் கொள்கைக்கு அமைய போர்த் தளபாடங்கள் என்ற பண்ட வகைக்கு உட்பட்ட சகல விடயங்களுக்கும் வருடாந்த மற்றும் மேலதிக மதிப்பீடுகளைத் தயார்செய்தல்.

இ. நிதி முகாமைத்துவக் கொள்கைகளின் பிரகாரம் வருடாந்த திட்டங்களைத் தயாரித்தல். அவதானித்தலும் போர்த் தளபாட களஞ்சியசாலைகளதும் பண்டங்களதும் முன்னேற்றத்தை காலப் பொருத்தப்படி அறிக்கையிடுதல்.

ஈ. தரைப்படைத் தலைமையகத்தில் பொது நிர்வாக மற்றும் உணவு, போர்க்கல விநியோகம் சார்ந்த கொள்கைகளுக்கு இசைவாக சகல போர்த் தளபாட பண்டங்கள், ஆயுதங்கள், துப்பாக்கி ரவைகள், வெடிபொருள்கள், புதிய சேர்ப்புகள் மற்றும் எதிர்காலத் திட்டங்களை மேற்கொள்ளல்.

உ. போர்த் தளபாட கருவிகளின் அளவுகளைத் தயார்செய்தல்.

ஊ. தரைப்படை உடுப்புத் தொகுதி, பொத்தான்கள், உத்தியோகபூர்வ இலச்சினைகள், பதக்கங்கள் என்பவற்றுடன் தொடர்புபட்ட கட்டளை நியமங்களைத் தயார்செய்தலும் இற்றை வரைப்படுத்தலும்.

எ. சந்தை தேர்வும் வழங்குநர்களைத் தெரிவுசெய்தலும்.

ஏ. போர்த் தளபாட களஞ்சியத் தொகுதிகளில் பேணப்பட்டுவரும் பண்டங்களின் திருத்தமான தன்மையை தொடர்பில் அடிக்கடி சோதனையிடல், அதனுடன் சம்பந்தப்பட்ட கொள்கைகளை அவதானித்தல், போர்த் தளபாட மாஸ்ரர் ஜெனரல் ஊடாக வெளியிடப்படும் கொள்கைகளை அமுல்படுத்தல்.

ஐ. வருடாந்த இருப்புக் கணக்கெடுப்புச் செயன்முறையைத் திட்டமிடல், இருப்புக் கணக்கெடுப்புக் குழுக்களினால் அதன் அச்செயன்முறை திருத்தமான முறையில் மேற்கொள்ளப்படுகிறதா என்பதை அவதானித்தல்.

ஒ. போர்த் தளபாட மாஸ்ரர் ஜெனரலுக்கு வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பு அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதுடன் சரியான நடைமுறைகளை அமுல்படுத்துதல்.

ஓ. நோக்கெல்லையிலுள்ள போர்த் தளபாட உருப்படிகளின் குறியீடு இடலையும் வகைப்படுத்தலையும் மேற்கொள்ளல்.

ஔ. தரைப்படைத் தலைமையகத்தினால் வெளியிடப்பட்டுள்ள கொள்கைவகுப்பு தொடர்பான அவதானிப்புகளையும் அபிவிருத்திகளையும் மேற்கொள்ளல்.

க. துப்பாக்கி ரவைகளையும் வெடிபொருள் பரீட்சிப்புகளையும் திட்டமிடலும் பரீட்சிப்பு அறிக்கைகளை மதிப்பீடுசெய்தலும் அமுல்படுத்தலும்.

ங. சகல போர்த் தளபாட பண்டங்களின் பரீட்சிப்புகளைத் திட்டமிடுதலும், பரீட்சிப்பு அறிக்கைகளை மதிப்பீடு செய்தலும் அமுல்படுத்தலும்.

ச. சகல போர்த் தளபாட பிரிவுகளிலும் இருப்பைப் பதிவுசெய்தலுடன் சம்பந்தப்பட்ட செயன்முறையை முறையாக மேற்கொள்வதும் இருப்புகளைப் பேணிச் செல்லலும்.

ஞ. போர்த் தளபாட கருமங்களில் ஈடுபடும் மனிதவளத்தின் மதிப்பீடும் சேவைப் பங்களிப்பின் மதிப்பீடும்.

ட. தற்போதுள்ள களஞ்சியசாலைகள்/களஞ்சியத்திடல் நடைமுறைகள் அமுல்படுத்தப்படும் முறையை தொடர்ந்தும் நுண் கண்காணிப்பிற்கு உட்படுத்தலும் அவசியமானவிடத்து தகுந்தவாறு இற்றைவரைப்படுத்தலும்.

ண. படைப்பிரிவிலுள்ள படைவீரர்களின் தொழிற்பயிற்சியுடன் சம்பந்தப்பட்ட கொள்கைகளை அமுல்படுத்தல்.

த. போர்த் தளபாட விடயங்களுடன் சம்பந்தப்பட்ட வருடாந்த கணிப்பீடுகளை அமுல்படுத்தல்.

<u>வருடாந்த மீளாய்வு</u>

5. புதிதாக நிறுவப்பட்ட,

அ. <u>பாதுகாப்பிற்கு அவசியமான உற்பத்திகள்:</u> தரைப்படையினருக்கு அவசியமான படைவீடுகள், வீட்டு உபகரணங்கள், போர்த்தளபாட காப்புப் பொதிகள் பெரும் எண்ணிக்கையில் வருடாந்தம் கொள்வனவுசெய்யப்படுவதுடன், அதற்கவசியமான அளவுகளை வழங்குநர்களிடமிருந்து பெற்றுக்கொள்வது சிரமமானதாக அமைந்துள்ளது. ஆகையால், தரைப்படைத் தளபதியின் ஆலோசனையின் பேரில் தற்போது இயங்கும் வேலைத்தலங்களை மேலும் முன்னேற்றி போர்த் தளபாட தொழிற்சாலையொன்றை ஆரம்பித்து தற்போது தரைப்படைக்கு அவசியமான படைவீடு, போர்த்தளபாட காப்புப் பொதிகள் முதலியவற்றை உற்பத்திசெய்வதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆ. <u>படைவீடுகளின் பரிமாணங்களைத் தயாரித்தல்:</u> தரைப்படையின் சகல நிறுவனங்களுக்கும் அவசியமான படைவீட்டுப் பண்டங்களுக்கான பரிமாணங்களைத் தயாரித்து தரைப்படைத் தளபதியின் அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

இ. <u>துப்பாக்கி ரவைகளை மீள நிரப்புதல்:</u> பீரங்கி மரியாதை வேட்டுக்களைத் தீர்ப்பதற்கு அவசியமான துப்பாக்கிக் குண்டுகளும், சிறு ஆயுதங்களுக்கான சில வகையான ரவைகளும் மீள நிரப்பப்படுகின்றன.

ஈ. <u>துணித் தேவைகளின் வழங்கலைத் திட்டமிடுதல்:</u> மிகை இருப்பு பேணப்பட்டுவருவதுடன், 2013 ஆம் ஆண்டில் கொள்வனவுசெய்யத் திட்டமிடப்பட்ட தேவைப்பாடுகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

6. மேற்குறிப்பிட்ட தகவல்களுக்கு மேலதிகமாக, போர்த் தளபாட வழங்ககல் வலையமைப்பை முன்னேற்றி முன்னெடுத்துச் செல்வதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

போர்த் தளபாட பரீட்சிப்புகளும் இருப்புக் கணக்கெடுப்பும்

7. போர்த் தளவாட பரீட்சிப்புகளும் இருப்புக் கணக்கெடுப்புகளும் வருடம் பூராவும் தரைப்படையின் சகல நிறுவனங்களிலும் மேற்கொள்ளப்படுவதுடன், பதவிநிலை தலைவரின் பரீட்சிப்பிற்கும் முதல் பரீட்சிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. ஏதேனும் அவதானிப்புகள் இருக்குமாயின், நிறுவனத் தலைவருக்கு அது குறித்து அறிவித்து அவற்றை இணக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

8. ப்பணிப்பாளர் குழுமத்தின்கீழ் கடமையாற்றுகின்ற இருப்புக் கணக்கெடுப்புக் குழுக்கள் மூலம் தரைப்படையின் சகல போர்த் தளபாட அலகுகளிலும் போர்த் தளபாட பண்ட இருப்புக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படுகிறது.

போர்த் தளவாட களஞ்சியசாலைகளின் நிர்மாணிப்புகளும் களஞ்சியக் காப்பாளர்களின் தொழில்நுட்ப அறிவை விருத்திசெய்தலும்.

9. அலகுகளின்கீழுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை முன்னேற்றுவதற்கும் தொழில்நுட்ப வசதிகளை முன்னேற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அ. பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் ஆலொசனைப்படி புகையிரதத் திணைக்களத்திற்குச் சொந்தமான 10 ஏக்கர் விஸ்தீரணமுள்ள ஒரு காணி ராகம பகுதியில் ஒதுக்கப்பட்டு ஆதார போர்த்தளபாட களஞ்சியசாலை அவ்விடத்தில் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆ. சகல தொழில்நுட்ப படைவீரர்களின் தொழில்நுட்ப அறிவை மேம்படுத்துவதற்கான செயலமர்வுகள் நடாத்தப்படுவதுடன், மத்திய ஆயுத மற்றும் துப்பாக்கி ரவை களஞ்சியசாலையினால் தரைப்படையின் சகல நிறுவனங்களிலும் துப்பாக்கி ரவைகள் களஞ்சியத்திடல் பற்றி செயலமர்வுகள் நடாத்தப்படுகின்றன.

இ. மத்திய ஆயுதங்கள் மற்றும் துப்பாக்கி ரவைகள் களஞ்சியசாலைக்குரிய களஞ்சியசாலைகளில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், தற்போது 443 மெட்ரிக் தொன் அளவான துப்பாக்கி ரவைகள் கொஸ்கம களஞ்சிசாலையிலிருந்து வெயாங்கொட களஞ்சியசாலை வரை போக்குவரத்துச் செய்யப்பட்டுள்ளது.
ஈ. போர்த் தளபாட தொழிற்சாலையை நிறுவுவதற்கு தரைப்படைத் தளபதியின் அனுமதி பெற்றுக்கொள்வதற்கான திட்ட வரைவுகள் தயார்செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

உ. மத்திய ஆயுதங்கள் மற்றும் துப்பாக்கி ரவைகள் களஞ்சியசாலையிலிருந்து துப்பாக்கி ரவைகள் மற்றும் வெடிபொருள்களின் பாவனையுடனும் பாதுகாப்புடனும் சம்பந்தப்பட்ட குறிப்பிடத்தக்க அளவான விடயங்களும் அவற்றை ஒப்படைக்கும்போது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட நடைமுறைகள் பற்றிய அறிவு பாதுகாப்புப் படைத் தலைமையக மட்டத்தில் உத்தியோகத்தர்கள்/ ஏனைய பதவிப்படித்தரங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஊ. தீயணைப்புப் படையுடனான ஒத்துழைப்புடன் தீயணைப்பு பற்றிய பாடநெறிகள் நடாத்தப்பட்டுள்ளன.

வெடிபொருள் பரீட்சிப்புகள்

10. பானு தோட்டாக்கல் மற்றும் வெடிபொருள்கள் பெரும் எண்ணிக்கையானவை தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின்கீழ் பரீட்சிப்புக்கு உட்படுத்தப்பட்டதை அடுத்து, அனுமதிக்கப்பட்ட குழம அறிக்கைகளுக்கமைய அழித்துவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போர்த் தளபாட பண்டங்களுக்கான கட்டளை நியமங்களைத் தயாரித்தல்.

11. சகல போர்த்தளபாட பண்டங்களின் கட்டளைநியமங்களின் இற்றைவரைப்படுத்தல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆயுத இலக்கங்களை கணனிமயப்படுத்தல்

12. ம.ஆ.து.களஞ்சியசாலையினால் ஆயுத இலக்கங்கள் கணனிமயப்படுத்தப்படுகிறது. மொத்த எண்ணிக்கையில் 90% சதவீதமானவை இவ்வாண்டில் பூர்த்திசெய்யப்படவுள்ளது.

13. பெறுகை வழிகாட்டிநெறிக்கோவையின் பிரிவு 8:11 இன்பிரகாரம் செயலாற்றுகை பிணைமுறிகள், விலைக்கேள்வி காப்புப் பிணைமுறிகள், தாமதக் கட்டணங்கள் என்பவற்றை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது பின்வருமாறு தயார் செய்யப்பட்டுள்ளது:

தொடர் இல.	போர்த் தளபாட வகை	விலைக்கேள்வி காப்புப் பிணைமுறித் தொகை	செயலாற்றுகை பிணைமுறித் தொகை	தாமதக் கட்டணங்கள்
1.	போர்த் தளபாட வகை I		2,072969.00	137,361.00
2.	போர்த் தளபாட வகை II		987,749.05	80,947.00
3.	போர்த் தளபாட வகை III		-	-
4.	போர்த் தளபாட வகை IV	100,000.00	2,736,951.10	3,171,818.51
5.	போர்த் தளபாட வகை V	14,500.00	106,950.00	443,392.00
6.	போர்த் தளபாட வகை VI	386,150.00	1,060,039.00	2,933,303.00
	மொத்தம்	**500,650.00**	**6,964,658.15**	**6,765,821.51**
	முழு மொத்தம்			**14,231,129.66**

நிதிசார் தகவல்கள்

14. வருடாந்த ஒதுக்கீட்டு முகாமைக்கான நடவடிக்கை கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள்

அ. போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமத்தினால் நடவடிக்கைக் கட்டுப்பாடு.்.கொள்வனவுகளை மேற்கொள்ளும் செலவுத் தலைப்பிற்காக ஒதுக்கப்பட்ட வருடாந்த நிதிஒதுக்கீடு மற்றும் அதற்குரிய செலவு விபரம் என்பன கீழ் தரப்பட்டுள்ளன.

ஆ. 2013 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளில் 99% தொடர்பில் சிக்கனமான முறையில் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதற்குரிய கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் நிதிப் பணிப்பாளர் குழுமத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

செலவு அறிக்கை - 2013.12.31 அன்றுள்ளவாறான போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமம்

செலவுத் தலைப்பு	விவரணம்	மொத்த வருடாந்த நிதி ஒதுக்கீடு	மொத்தச் செலவு	பிணைப்புகள்	மொத்தச் செலவும் பிணைப்புகளும்	சதவீதம் %
மீண்டெழும் செலவுத் தலைப்பு						
222-01-2-1201	எழுதுகருவிகள்	105,130,000.00	146,800,842.03	-	146,800,842.03	139.64
222-01-2-1203(I)	சீருடைகள்	3,700,000,000.00	2,469,117,155.26	1,552,820,200.27	4,021,937,355.53	108.70
222-01-2-1205 (I)	யா/பி அ/பகுதி	142,286,730.40	241,289,154.24	23,059,681.87	264,348,836.11	185.79
222-01-2-1205 (II)	∴பெடிடோ	225,000,000.00	293,404,089.70	36,310,279.46	329,714,369.16	146.54
222-01-2-1205 (III)	இசை உதிரிப்பாகங்கள்	1,200,000.00	1,418,479.50	-	1,418,479.50	118.21
222-01-2-1205 (IV)	ஏ வாகன உதிரிப் பாகங்கள்	25,000,000.00	24,855,167.83	3,558,788.20	28,413,956.03	113.66
222-01-2-1205 (V)	பீரங்கி உதிரிப் பாகங்கள்	20,000,000.00	21,347,399.15	3,899,947.52	25,247,346.67	126.24
222-01-2-1205 (VI)	சமிக்ஞை உதிரிப் பாகங்கள்	40,000,000.00	20,417,425.34	12,118,354.11	32,535,779.45	81.34
222-01-2-1205 (VII)	சிறு ஆயுதங்களின் உதிரிப் பாகங்கள்	6,000,000.00	1,114,813.51	-	1,114,813.51	18.58
222-01-2-1205 (IX)	கணனி உதிரிப்பாகங்கள்	15,000,000.00	19,564,687.27	2,655,483.60	22,220,170.87	148.13
222-01-2-1205 (X)	படைவீட்டுப் பண்டங்கள்	187,882,500.00	386,287,855.06	64,860,482.98	451,148,338.04	240.12
222-01-2-1205 (XI)	பொதுப் பண்டங்கள்	78,000,000.00	165,846,198.65	19,113,966.19	184,960,164.84	237.13
222-01-2-1205 (XII)	முகாம் பாதுகாப்பு	47,857,154.88	9,945,838.00	5,153,016.96	15,098,854.96	31.55
222-01-2-1205 (XIII)	வெடிபொருள்கள்	84,312,732.00	60,509,736.77	44,860,737.60	105,370,474.37	124.98
222-01-2-1205 (XXIII)	∴பெடிடோப் சி வாகனங்கள்	75,000,000.00	83,619,182.05	24,317,165.60	107,936,347.65	143.92
222-01-2-1302 (III)	படைவீடுகள் பராமரிப்பு	11,000,000.00	7,488,791.10	1,364,077.32	8,852,868.42	80.48
222-01-2-1405 (XX)	பெறுகைக் கொடுப்பனவுகள்	3,737,000.00	1,507,240.00	-	1,507,240.00	40.33
222-01-2-1204 (IV)	வைத்தியசாலைத் துணிகள்	41,000,000.00	9,151,317.92	11,834,004.38	20,985,322.30	51.18
222-01-2-1204 (VII)	நலன்புரி மற்றும் புனருத்தாரணம்	121,400,000.00	57,237,445.47	11,089,107.40	68,326,552.87	56.28
மொத்தம்		4,929,806,117.28	4,020,922,818.85	1,817,015,293.46	5,837,938,112.31	2,192.79
மீண்டெழும் - தொண்டர்						
222-01-4-1201	எழுதுகருவிகள்	25,000,000.00	21,558,824.31	14,319,183.07	35,878,007.38	143.51
222-01-4-1203 (I)	சீருடைகள்	250,000,000.00	52,862.50	221,097,138.00	221,150,000.50	88.46
222-01-4-1205 (X)	படைவீட்டுப் பண்டங்கள்	35,000,000.00	21,174,584.82	21,934,039.04	43,108,623.86	123.17
மொத்தம்		310,000,000.00	42,786,271.63	257,350,360.11	300,136,631.74	355.14
மூலதன செலவுத்தலைப்பு						
222-01-3-2002 (IV)	புனருத்தாரணமும் முன்னேற்றலும்	35,000,000.00	46,201,841.42	473,148.00	46,674,989.42	133.36
222-01-3-2003 (I)	வாகனங்கள்	3,400,000.00	12,979,509.23	2,473,865.14	15,453,374.37	454.51
222-01-3-2101 (I)	ஏ வாகனங்கள்	-	-		-	
222-01-3-2101 (II)	பீ வாகனங்கள்	94,996,420.00	304,291.00	10,075,261.00	10,379,552.00	10.93
222-01-3-2101 (III)	சீ வாகனங்கள்	-	-	-	-	
222-01-3-2101 (17)	வாகனங்கள்	-	15,845,000.00	-	15,845,000.00	
222-01-3-2102	அலுவலக உபகரணங்கள்.	150,000,000.00	217,732,785.05	32,212,563.63	249,945,348.68	166.63
222-01-3-2103 (I) a	இயந்திராதிகள் - ஜீஐசீஜெ	229,393,935.47	287,120,742.36	55,455,276.06	342,576,018.42	149.34
222-01-3-2103 (I) b	இயந்திராதிகள் - ஞஐசீஜெ	32,329,908.61	27,920,731.25	16,551,210.88	44,471,942.13	137.56
222-01-3-2103 (I) c	இயந்திர உபகரணங்கள் - பி.ப.கி.	7,160,491.97	16,790,741.97	151,900.00	16,942,641.97	236.61
222-01-3-2103 (II)	ஆயுதங்களும் கருவிகளும்	39,877,411.00	33,433,793.59	23,048,792.17	56,482,585.76	141.64
222-01-3-2103 (III)	சமிக்ஞை உபகரணங்கள்	88,000,000.00	126,369,212.85	57,967,485.95	184,336,698.80	209.47
222-01-3-2103 (IV)	நாய்களைக் கொள்வனவு செய்தல்	1,000,000.00	692,148.00	322,091.80	1,014,239.80	101.42
222-01-3-2103 (V)	இசைக்கருவிகள்	10,500,000.00	40,007,371.20	1,844,920.00	41,852,291.20	398.59
222-01-3-2103 (VI)	போர்க் குழுக்களின் வசதிகள்	10,952,347.53	1,282,897.48	-	1,282,897.48	11.71
222-01-3-2103 (VII)	நலன்புரிப் பண்டங்கள்	7,000,000.00	13,827,976.92	713,357.00	14,541,333.92	207.73
222-01-1-2502-(2)	புதிய மருத்துவமனைத் திட்டம்	700,000,000.00	1,396,646,926.59	605,899,310.68	2,002,546,237.27	286.08
மொத்தம்		**1,409,610,514.58**	**2,237,155,968.91**	**807,189,182.31**	**3,044,345,151.22**	**2,645.59**
முழு மொத்தம்		**6,649,416,631.86**	**6,300,865,059.39**	**2,881,554,835.88**	**9,182,419,895.27**	**5,193.52**

செலவுத் தலைப்பிற்குரிய செலவு

17. செலவுத் தலைப்பிற்குரிய செலவு விபரம் பின்வருமாறு:

	ஒதுக்கீட்டுத் தொகை	செலவு
(1) பயிற்சிக் கொடுப்பனவுகள்	ரூ. 10,000.00	ரூ. 10,000.00
(2) சஞ்சிகைகளும் பருவ வெளியீடுகளும்	ரூ. 5,000.00	ரூ. 5,000.00
(3) செய்திப் பத்திரிகைகள்	ரூ. 21,890.00	ரூ. 21,890.00

இலங்கை தரைப்படையின் போர்த் தளபாட படையணி பிரிவுகளின்கீழ் உற்பத்தியாக்கமும் திருத்த வேலைகளும் - தலைக்கவசங்கள் திருத்தம், இரும்புக் கட்டில்கள், வாகன கெனபிகள், உருக்கினாலான மேசைகள், உருக்கினாலான கதிரைகள், கடிதவுறைகள், கொடிகள், சீருடைகள் உற்பத்தியும் திருத்த வேலையும்

18. மேற்குறிப்பிட்ட பண்டங்களின் உற்பத்தி மற்றும் பழுதுபார்ப்பின் ஊடாக அரச நிதி அநாவசியமாக செலவிடப்படுவது குறைக்கப்பட்டதுடன், தரைப்படைக்கு அவசியமான பண்டங்கள் உரிய நேரத்தில் கிடைப்பதும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டில் போர்த் தளபாட தொழிற்சாலைகள் மூலம் மேற்குறிப்பிட்ட உற்பத்திகள் காரணமாக பின்வருமாறு அரச நிதியை மீதப்படுத்த முடிந்துள்ளது.

தொடர் இல.	அலகு	மூலப்பொருள்களுக்கான கிரயம்	கருத் திட்டங்களின் எண்ணிக்கை	சந்தை விலை	மீதி
1.	மத்திய ஆயுதங்கள் மற்றும் துப்பாக்கி ரவைகள் களஞ்சியசாலை	362,164.59	09	3,902,126.27	3,865,911.54
2.	1 ஆவது இலங்கை தரைப்படை போர்த் தளபாட சிறப்பணி	37,615,756.20	48	11,797,860.00	18,329,404.30
3.	2 ஆவது இலங்கை தரைப்படை போர்த் தளபாட சிறப்பணி	10,216,111.00	20	12,865,114.00	2,830,128.00
4.	3 ஆவது இலங்கை தரைப்படை போர்த் தளபாட சிறப்பணி	735,043.00	09	47,991.00	2,115,870.00
5.	5 ஆவது இலங்கை தரைப்படை போர்த் தளபாட சிறப்பணி	706,011.00	33	982,250.00	473,877.00
6.	6 ஆவது இலங்கை தரைப்படை போர்த் தளபாட சிறப்பணி	547,904.00	01	1,300,000.00	752,000.00
	மொத்தம்	**50,182,989.79**		**30,895,341.27**	**28,367,190.84**

பண்டத் தீர்ப்பனவு

19. போர்த் தளபாட சேவைகள் பணிப்பாளர் குழுமத்தின்கீழ் இடம்பெறும் பணிகளிடையே விமானம் மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் தபால் மார்க்கமாகவும் கிடைக்கின்ற பண்டங்கள், தாமதம் ஏற்படாத வகையில் தீர்ப்பனவுசெய்து குறித்த இடங்களில் ஒப்படைக்கப்படுகிறது. இதனுடன் இணைப்பாக 2013 ஆம் ஆண்டிற்குரிய வான் மார்க்கவும் கடல் மார்க்கமாகவும் தீர்ப்பனவுசெய்யப்பட்ட பண்டங்கள் பற்றிய விபரம் தரப்பட்டுள்ளது. அதன்படி, கடல் மார்க்கமாகக் கிடைக்கப்பெற்றுள்ள பண்டங்களின் மொத்த நிறை 404327.16 கி.கி. (919 தொன்) ஆகவும் வான் மார்க்கமாகக் கிடைக்கப்பெற்றுள்ள பண்டங்களின் மொத்த நிறை 5407.81 கி.கி. ஆகவும் காணப்படுகிறது.

மின்சார பொறிமுறை எந்திரிகள் பணிப்பாளர் குழுமம்

அறிமுகம்

1. இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி 1949 டிசம்பர் மாதம் 12 ஆந் திகதி சிறு உதவிப் பிரிவொன்றாக ஆரம்பிக்கப்பட்டது. அதுமுதற்கொண்டு படிப்படியாக விரிவடைந்த இச்சிறப்பணி இன்று 186 உத்தியோகத்தர்களையும் 4,484 ஏனைய பதவிப்படித்தரங்களையும் கொண்டுள்ளது. மின், எந்திரவியல், கட்புல மற்றும் உயிரியல் தொழில்நுட்ப உபகரணங்களின் பராமரிப்பிற்கும் பழுதுபார்ப்பிற்கும் அவசியமான ஆலோசனை வழங்குவதுடன் பழுதுபார்ப்பதில் இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி ஈடுபடுகிறது. 2009 ஆம் ஆண்டில் எல்ரீரீஈ இயக்கம் தோல்வியடையச் செய்யப்பட்டதை அடுத்து நாட்டின் துரித அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு அர்ப்பணிக்கும் இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி தற்போது அந்நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்து வருகிறது.

பொறுப்புக்கள்

2. இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் பணிப்பாளர் குழுமத்தின் பொறுப்புக்கள் பின்வருமாறு:

அ. பதவிநிலை உத்தியோகத்தர்கள் ஏனைய படைக்கலந்தாங்கிய மற்றும் சேவை நிறுவனங்களுக்கு தொழில்சார் பொறியியல் பணிகளும் உபகரணங்களின் பராமரிப்பு மற்றும் நம்பகத்தன்மை பற்றிய ஆலோசனைகளை வழங்கலும்.

ஆ. சகல மின் மற்றும் பொறியியல் பொறுப்புக்களுடனான உபகரணங்களின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புக்கான வருடாந்த செலவுத் தலைப்புகள் குறித்து வரவுசெலவுத்திட்ட மற்றும் நிதி நிர்வாகப் பணிப்பாளர் குழுமத்திற்கு ஆலோசனை வழங்குதல்.

இ. உபகரணங்களின் பராமரிப்பு, பரீட்சிப்பு, பழுதுபார்ப்பு, தகுதியற்றதாக்கல் என்பவற்றுக்கான கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் வகுத்தலும் அவசியமான ஆலோசனைகளை வழங்குதலும்.

ஈ. உபகரணங்களை தீர்த்தொதுக்கிவிடல்.

உ. மின், எந்திர, இலத்திரனியல், கட்புல, உயிர் பொறியியல் உபகரணங்களின் பழுதுபார்ப்பும், பரீட்சிப்பும், மாற்றங்களை மேற்கொள்ளலும். (சைகை உபகரணங்களும் பொறியியல் சி வாகனங்களும் தவிர்ந்த)

ஊ. மின் மற்றும் எந்திரப் பொறியியல் தொழில்நுட்பவலர்களையும் ஏனைய சேவை தொழில்நுட்பவலர்களையும் பயிற்றுவித்தல்.

எ. மின் மற்றும் எந்திரப் பொறியியல் பொறுப்புக்களுடன்கூடிய சகல உபகரணங்களையும் தகுதியற்றதாக்குதல்.

ஏ. உதிரிப்பாகங்கள் மற்றும் ஆக்கப்பொருள் அளவுகளை வகுத்தல்.

ஐ. மின் மற்றும் எந்திரப் பொறியியல் உபகரணங்களையும் வேலைத்தல உபகரணங்களுக்கும் திட்டங்களை வகுத்தல்.

செயற்பாடு

3. இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் பணிப்பாளர் குழுமம் போர்த் தளபாடங்கள் மாஸ்ரர் ஜெனரல் கிளையின்கீழ் நிர்வகிக்கப்படுவதுடன், நிர்வகிப்பதற்கு வசதியாக பின்வரும் பிரிவுகளின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது:

அ. தொழில்நுட்ப நிர்வாகப் பிரிவு.

ஆ. பி/மு பிரிவு.

இ. பிராந்திய கொள்வனவுகள் பிரிவு.

ஈ. ஆக்கப்பொருள் நிர்வாகப் பிரிவு.

உ. நிதிப் பிரிவு.

எ. நிர்வாக/தொழில்நுட்ப பயிற்சிப் பிரிவு.

ஏ. மேற்பார்வைப் பிரிவு/ஆராய்ச்சிப் பிரிவு.

ஐ. வாகனங்கள் விற்பனைக்குப் பிந்திய பழுதுபார்ப்புகள் மற்றும் பரீட்சிப்புப் பிரிவு.

ஒ. வாகன விபத்துக்கள் பிரிவு.

ஓ. கருத்திட்டப் பிரிவு.

ஔ. சிறு உதவிப் பிரிவு - தரைப்படைத் தலைமையகம்.

க. வெளியீடு, அறிக்கை/எந்திர திட்ட வரைவுப் பிரிவு.

செயற்பொறுப்பு

4. போர்த் தளபாடங்கள் மாஸ்ரர் ஜெனரல் கிளையின்கீழ் இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் பணிப்பாளர் குழுமத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள வாகனங்களதும் உபகரணங்களதும் பழுதுபார்ப்புகளும் பராமரிப்பும் குறித்த பொறுப்புக்கள் கீழ் தரப்பட்டுள்ளன.

அ. பணிப்பாளர் குழுமத்தின் முறையான செயற்பாடு குறித்து போர்த் தளபாடங்கள் மாஸ்ரர் ஜெனரல் கிளைக்கு பொறுப்புக் கூற வேண்டும்.

ஆ. தரைப்படையிடமுள்ள வாகனங்களதும் உபகரணங்களதும் பராமரிப்பு குறித்த முறைமையொன்றை அறிமுகப்படுத்தல்.

இ. அதேபோல்,

(1) தரைப்படையின் வாகனங்களின் விற்பனைக்குப் பிந்திய பழுதுபார்ப்புகளை மேற்கொள்வதற்கும் அவற்றின் திருத்த வேலைகளையும் பராமரிப்பையும் மேற்கொள்வதற்கு அவசியமான வசதிகளை அளித்தல்.

(2) தரைப்படையிடமுள்ள வாகனங்களதும் உபகரணங்களதும் பராமரிப்பு குறித்து போர்த் தளபாடங்கள் மாஸ்ரர் ஜெனரல் கிளைக்கு ஆலோசனைகளை வழங்குதல்.

(3) 'ஏ' மற்றும் 'பீ' வாகனங்களின் பழுதுபார்ப்புகள் சம்பந்தமான திட்டங்களை வகுத்தலும் வருடாந்த மதிப்பீடுகளைத் தயாரித்தலும்.

(4) தொடர்ச்சியாக வாகன பரிசோதிப்புகளைப் பேணிச்செல்லல்.

(5) தரைப்படையின் வாகனங்களையும் உபகரணங்களையும் எப்பொழுதும் தயார்நிலையில் வைத்திருத்தல்.

(6) துரிதமாக பழுதுபார்ப்புகளை மேற்கொள்ளக்கூடிய விதத்தில் வேலைத்தளங்களைத் திட்டமிட்டு பேணிச்செல்லல்.

(7) தொழில்நுட்பப் பயிற்சி வழங்கக்கூடிய விதத்தில் வேலைத்தளங்களைத் திட்டமிட்டு பேணிச்செல்லல்.

(8) இலங்கை மின் மற்றும் எந்திரப் பொறியியல் நடைமுறை மீது காலத்திற்குக் காலம் கவனம் செலுத்துதல்.

வருடாந்த மீளாய்வு

5. 'பீ' வாகன அறிக்கை: ஒவ்வொரு படையணிக்கு/வேலைத்தளத்திற்கு உரிய 'பீ' வான அறிக்கை கீழ் தரப்பட்டுள்ளது.

தொடர் இல.	தொழில்நுட்ப பரப்பு	கனரக வாகனங்கள்	மென்ரக வாகனங்கள்	மோட்டார் சைக்கிள்கள்	பிற வாகனங்கள்	மொத்தம்
1	1 ஆவது படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	535	753	539	241	2068
2	3 ஆவது படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	283	215	376	431	1305
3	4 ஆவது படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	203	195	306	372	1076
4	5 ஆவது படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	401	266	272	518	1457
5	6 ஆவது படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	171	138	151	325	785
6	7 ஆவது படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	176	145	156	324	801
7	2 ஆவது (தொண்டர்) படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	99	87	141	87	414
	மொத்தம்	**1868**	**1799**	**1941**	**2298**	**7906**

7. படைப் பிரிவுகள் / வேலைத்தளங்கள்மூலம் பழுதுபார்ப்பு வேலைகள் பூர்த்திசெய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை**.**

அ. உபகரணங்கள் மற்றும் பல்வேறு திருத்தவேலைகள் தவிர 2013 ஆம் ஆண்டில் படைப் பிரிவு வேலைத்தளங்களில் இடம்பெற்ற பழுதுபார்ப்பு வேலைகள் பற்றிய விபரம் கீழ் தரப்பட்டுள்ளது.

ஆ. 2 ஆவது அட்டவணையில் இலங்கை மின் மற்றும் எந்திரப் பொறியியல் படையணியினால் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்ப்பு வேலைகள் வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளதுடன், குறிப்பு 1 மூலம் வாகனங்களின் வகைப்படி மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்ப்பு வேலைகள் காட்டப்பட்டுள்ளன.

தொடர் இல.	இ.மி.எ.பொ. படைப் பிரிவு	கனரக வாகனங்கள்	மென்ரக வாகனங்கள்	மோட்டர் சைக்கிள்கள்	பிற வாகனங்கள்	மொத்தம்
1.	1 ஆவது படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	328	166	221	56	771
2.	3 ஆவது படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	315	389	192	190	1086

3.	4 ஆவது படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	620	484	300	443	1847
4.	5 ஆவது படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	105	138	89	99	431
5.	6 ஆவது படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	231	398	133	181	943
6.	7 படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	268	351	103	263	985
7.	படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் (போர்) சிறப்பணி	40	27	21	374	462
8.	படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி (பீரங்கி)	82	51	2	130	265
9.	மி.எ.பொ. ஆரம்ப வேலைத்- தலம் (E.M.E. base workshop) - கொழும்பு	40	3334			3374
10.	மி.எ.பொ. ஆரம்ப வேலைத்- தலம் (E.M.E. base workshop) - உடவளவை	32	2		27	61
11.	மி.எ.பொ. ஆரம்ப வேலைத்- தலம் (E.M.E. base workshop) - கட்டுபெத்த	47	141	42	11	241
12.	2 ஆவது (தொண்டர்) படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி	19	48	37	11	115
	மொத்தம்	**2127**	**5529**	**1140**	**1785**	**10581**



பயிற்சிப் பாடநெறிகள்

8. சிவில் தொழில்நுட்பவியல் நிறுவனங்கள்மூலம் நடாத்தப்பட்ட பாடநெறிகள்: பின்வரும் தொழில்நுட்பப் பாடநெறிகள் பயிற்சி பணிப்பாளர் குழுமத்தின் ஒருங்கிணைப்புடன் முன்னெடுக்கப்பட்டன. 2013 ஆம் ஆண்டில் சிவில் நிறுவனங்கள் மூலம் நடாத்தப்பட்ட பாடநெறிகளுக்கு பங்குபற்றிய உத்தியோகத்தர்கள்/ஏனைய பதவிப்படித்தரங்களின் விபரத்தை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

தொடர் இல.	நிறுவனம்	பாடநெறி	பங்குபற்றியோர் எண்ணிக்கை
1.	ஒற்றோ மொபைல் இன்ஜினீரிங் பயிற்சி நிறுவனம் – ஒருகொடவத்த	மோட்டார் வாகன காற்றுச்சீராக்கி தொழில்நுட்பவலர்	10
2.	ஒற்றோ மொபைல் இன்ஜினீரிங் பயிற்சி நிறுவனம் – ஒருகொடவத்த	இலக்ரொனிக் .ூபுவல் இன்ஜக்சன்	10
3.	ஒற்றோ மொபைல் இன்ஜினீரிங் பயிற்சி நிறுவனம் – ஒருகொடவத்த	என்ஜின் செம்மைப்படுத்தல் (Tuning)	10
4.	ஒற்றோ மொபைல் இன்ஜினீரிங் பயிற்சி நிறுவனம் – ஒருகொடவத்த	மோட்டார் வாகன இலத்திரனியல் தொழில்நுட்பம்	10
5.	ஒற்றோ மொபைல் இன்ஜினீரிங் பயிற்சி நிறுவனம் – ஒருகொடவத்த	தன்னியக்க கியர் பெட்டி பராமரித்தலும் பழுதுபார்த்தலும்	10
6.	ஒற்றோ மொபைல் இன்ஜினீரிங் பயிற்சி நிறுவனம் – ஒருகொடவத்த	வாகன நுட்பவியலர்	10
7.	ஒற்றோ மொபைல் இன்ஜினீரிங் பயிற்சி நிறுவனம் – ஒருகொடவத்த	மோட்டார் வாகன இலத்திரனியல் தொழில்நுட்பம்	10
8.	ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் – கட்டுபெத்த	மோட்டார் வாகன இலத்திரனியல் தொழில்நுட்பம் (இ-3)	20
9.	ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் – கட்டுபெத்த	.ூபுவல் இன்ஜக்சன்	8
10.	ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் – கட்டுபெத்த	மோட்டார் வாகன கைத்தொழில் தொழில்நுட்பம் (எம்-10)	10
11.	ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் – கட்டுபெத்த	எரிபொருள் பம்பி தொழில்நுட்பவலர் 2 (எம்.-5)	8
12.	ஜேர்மன் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவகம் – கட்டுபெத்த	ஒற்றோ இலக்ரிசிற்றி அன்ட் இலக்ரொனிக் இன் ஒற்றோ மொபைல் (ஈஏ)	15
13.	இலங்கை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை – அநுராதபுரம்	வானொலிப் பெட்டி, தொலைக்காட்சிப் பெட்டி பழுதுபார்த்தல் தொழில்நுட்பம்	6
14.	இலங்கை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை – அநுராதபுரம்	மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவலர்	6
15.	இலங்கை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை – அநுராதபுரம்	முச்சக்கர வண்டி தொழில்நுட்பவலர்	6
16.	இலங்கை வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபை – அநுராதபுரம்	மோட்டார் வாகன மின்னியல்	10
17.	இலங்கை வாழ்க்கைத்	மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பவலர்	10

	தொழிற்பயிற்சி அதிகாரசபை - அநுராதபுரம்		
மொத்தம்			**169**

9. படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் பயிற்சிப் பாடசாலை மூலம் நடாத்தப்படும் பாடநெறிகள் விபரம் பின்வருமாறு:

அ. <u>சகல அணிகளின் பாடநெறி:</u>

(1) போக்குவரத்து உத்தியோகத்தர் பாடநெறி 1.

(2) இளைப்பாற்றுகைக்கு முந்திய மின்தொழில்நுட்பவலர் பாடநெறி.

(3) இரவு நேரத்தில் தொலைவை நோக்குதல் பாடநெறி.

(3) போக்குவரத்து சாசன் பாடநெறி 1.

(4) போக்குவரத்து சாசன் பாடநெறி 2.

(6) அலுவலக உபகரணங்கள் பராமரிப்பு பாடநெறி.

ஆ. படைப் பிரிவு - இலங்கை மின்சார பொறிமுறை எந்திரிகள் <u>தொழில் பாடநெறிகள்:</u>

(1) மோட்டார் வாகன தொழில்நுட்பவலர்.

(2) மின் தொழில்நுட்பவலர்.

(3) காய்ச்சி ஒட்டுநர்/உலோகத் தகடு.

(4) அடிப்படை காய்ச்சி ஒட்டுதல்.

(5) கவச வாகன பாடநெறி (ரி-56, பி.எம்.பி., பிட்ஆர்.)

(6) ஏனைய பதவிவரிசைக்கான பாடநெறி.

(7) காற்றுச்சீராக்கி/குளிரூட்டி பாடநெறி.

(8) ஆயுத கிடங்கு

(இ) <u>பிரதேச பழுதுபார்த்தல் பிரிவு.</u> பிரதேச முகவர்களின் வழியில் 2013 ஆம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்ட வாகனங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

(1) <u>வாகனங்கள்</u>.

தொடர் இலக்கம்	வகை	கடமைகளின் எண்ணிக்கை
1.	பார வாகனங்கள்	170
2.	இலகுவான வாகனங்கள்	1151
3.	மோட்டார் சைக்கிள்	62
4.	ட்ராக்டர்	02
5.	ஏனைய	15
	மொத்தம்	1400

(2) <u>கருவிகள்.</u>

தொடர் இல	வகை	பணிகளின் எண்
1.	நகல் எடுக்கும் இயந்திரம்	62
2.	காற்றுச்சீராக்கி இயந்திரங்கள்	62
3.	அச்சுப்பதிவு இயந்திரம்	02
4.	அரிசி கொதிகலன்கள் (Rice Boilers)	06
5.	வீடியோ ஒளிப்பதிவுக்கருவிகள்	02
6.	ஊடுகதிர் இயந்திரங்கள்	01
7.	பெற்றோல் எரிபொருள் மீட்டர்	02
8.	மின் ஆக்கி கருவிகள்	02
9.	நீர் இயந்திரங்கள்	07
10.	காற்றாடி (Ventilator)	11
11.	பகுப்பாய்வுக் கருவி	05
12.	மயக்க மருந்து இயந்திரம் (Anesthesia)	01
13.	உயிரகம் இயந்திரம் (Oxygen Machine)	02
14.	முகனிப்பு (Monitor)	12
15.	ஊடுகதிர் இயந்திரங்கள் மருத்துவ உபகரணங்கள்	07
16.	டயலொக் குருதிச்சுத்திகரிப்பு உபகரணங்கள் (Dialog dialysis)	04
17.	காற்றழுத்தி	05
18.	ஏனையவை	19
19.	**கூட்டுத்தொகை**	**207**

10. மின்சார பொறிமுறை எந்திரிகள் குழுமத்தின் பிரதேசவாரியான கொள்வனவு மூலம் 2013 ஆம் ஆண்டிற்குள் மேற்கொள்ளப்பட்ட மேலதிக உதிரிப்பாகங்களின் வழங்கீடு பின்வரும் அட்டவணையினால் காட்டப்பட்டுள்ளது.

தொடர் இல	வகை	வேலை அளவுகள்
1.	கனரக வாகனங்கள்	174
2.	பாரமற்ற மோடடார் வாகனங்கள்	413
3.	மோட்டார் சைக்கிள்கள்	109
4.	ஏனையவை	78
5.	**கூட்டுத்தொகை**	**774**

11. மின்சார பொறிமுறை எந்திரிகள் குழுமத்தின் பணிப்பாளர் குழுமத்தினால் பிரதேசவாரியான முகவர்கள் மூலம் சீராக்கம் செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பான விவரங்கள் பின்வரும் அட்டவணையின் மூலம் காடடப்பட்டுள்ளன.

தொடர் இல	வகை	அளவு
1.	கனரக வாகனங்கள்	71
2.	பாரமற்ற மோட்டார் வாகனங்கள்	1755
3.	மோட்டார் சைக்கிள்கள்	103
4.	இழுவை வாகனங்கள்	02
5.	முச்சக்கர வண்டி	06
	கூட்டுத்தொகை	**1937**

12. <u>வாகன விபத்துப் பிரிவு.</u> 2013 ஆண்டிற்குள் தரைப் படை வாகனங்களுக்கு ஏற்பட்ட விபத்துகளுக்காக த.வி.பொது 33 ஆ வெளியிடும் விபரம் பின்வரும் அட்டவணையின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர் இல	வாகன வகை	அளவு
1.	கனரக வாகனங்கள்	45
2.	பாரமற்ற மோடடார் வாகனங்கள்	71
3.	மோட்டார் சைக்கிள்கள்	10
4.	இழுவை வாகனங்கள்	01
5.	நெடுநீள இழுவை வண்டி	02
6.	முச்சக்கர வண்டி	01
	கூட்டுத்தொகை	**130**

<u>சாதனைகள்</u>

13. மின்சார பொறிமுறை எந்திரிகள் பணிப்பாளர் குழுமத்தின் மேற்பார்வையின் கீழ் அனைத்து மின்சார பொறிமுறை எந்திரிகள் குழுமத்தின் சிறப்பணி மற்றும் அடிப்படை பட்டறைகளின் மூலம் அவர்களின் அடிப்படைக் கடமைகள் வினைத்திறன் மற்றும் திருப்திகரமான விதத்தில் நிறைவேற்றுவதற்கு முயன்றுள்ளனர்.

14. அதிகளவு இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் பழைமை வாய்ந்த வாகனங்களைக் கொண்ட தரைப் படையின் வாகனங்களை பழுதுபாரத்தல் மற்றும் பராமரித்தல்கள் திருப்திகரமான விதத்தில் மேற்கொள்வதற்கு மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணி முயன்றுள்ளது. அனைத்து சந்தர்ப்பங்களிலும் இயக்குவதற்கு முடியாத மோட்டார் வாகனங்களின் அளவு 5 இலும் குறைவாக பேணுவதற்கு மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணிக்கு முடியுமாகவுள்ளது.

15. கடந்த 2013 ஆம் ஆண்டிற்குள் பெருமளவு அதிகாரிகள் மற்றும் ஏனைய அணிநிலைகளை அவர்களுக்கு பொருந்தும் துறைகளினூடாக பயிற்றுவிக்கப்பட்டதுடன் அதன் மூலம் இலங்கை தரைப்படையின் விளைவுபெருக்கத்தினை அதிகரிக்க முடிந்தது.

16. கடந்த வருடத்துக்குள் 16 அதிகாரிகள் மற்றும் 459 படைவீரர்கள் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

17. அரச பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சினால் ஒப்படைக்கப்பட்ட கருத்திட்டங்கள் பல திருப்திகரமான முறையில் பூர்த்தி செய்வதற்கு மின்சார பொறிமுறை எந்திரிகள் அலகு முயன்றுள்ளது. அத்துடன் தியத்த பூங்காவில் நிர்மாணிக்கப்பட்ட 164 கூடாரங்கள், தொட்டில்கள் மற்றும் 57 பேருந்து தரிப்பிடங்களை விஷேடமாக குறிப்பிட முடியும்.

18. 2013 ஆம் ஆண்டில் நடைப்பெற்ற பாதுகாப்பு மாநாட்டிற்காக பாவனை செய்யப்பட்ட 691 வாகனங்களின் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் மின்சார பொறிமுறை எந்திரிகள் சிறப்பணியால் மேற்கொண்டமை பாராட்டப்பட வேண்டிய கடமைப் பொறுப்பாகவுள்ளது.

<u>நிதியியல் விபரங்கள்</u>

19. 2013 ஆம் ஆண்டிற்கு ரணவிரு வீடமைப்பு நிதியத்திற்காக அதிகாரிகள் / ஏனைய அணிநிலைகளின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளை குறைத்ததன் காரணமாக பெற்ற வருமானம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

தொடர் இல	செலவுத் தலைப்பு	விபரம்	மு.கொ.செல் 2012	பே.த.மா.ஜே.கி மூலம் ஒதுக்கீடு 2013
			(ரூ. மி)	(ரூ. மி)
	மீண்டெழுஞ் செலவு			
1.	222-01-2-1205 (i)	போக்குவரத்து மேலதிக உதிரிப்பாகங்கள்	82.82	142.71
2.	222-01-2-1205 (viii)	செலவுப் பொருட்கள்	22.15	50.00
3.	222-01-2-1301	வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்கள்	108.71	200.14
4.	222-01-2-1302 (i)	பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்கள் அலுவலக உபகரணங்கள் மற்றும் மின்சாரப் பொருட்கள்	14.27	25.50
5.	222-01-2 -1302-(vii)	ஏ வாகனங்கள்	5.17	10.50
6.	222-01-2 -1302-(viii)	பீரங்கி பழுதுபார்த்தல்	-	5.50
7.	222-01-2-1302 (xi)	உயிரியல் மருத்துவ உபகரணங்களின் பழுதுபார்த்தல்	2.49	11.00
8.	222-01-2-1302 (xiii)	பட்டறை உபகரணங்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு	1.62	4.00
9.	103-01-7-1301	வாகன பராமரிப்பு –செலவுத் தலைப்பு	0.11	7.62
10.	105-02-3-1-2502	பொறியாளர் வாகனங்கள்	–	7.50
11.	222-01-2-2003	பாதுகாப்பு மாநாட்டு வாகனங்கள்	–	44.00
12.	103-01-07-2003	வாகன பராமரிப்பு –செலவுத் தலைப்பு	–	0.55
	பிரதான செலவு			
13.	222-01-3-2002 (iii)	தொழில்நுட்ப உபகரணங்களின் பழுதுபார்த்தல்கள் மற்றும் மேம்பாடுகள்	5.28	7.50
14.	222-01-3-2003 (ii)	வாகன பழுதுபார்த்தல்கள் மற்றும் மேம்பாடுகள்	60.66	100

கட்டளை தலைமையக தரைப்படை பயிற்சி

அறிமுகம்

1. கட்டளை தலைமையக தரைப்படை பயிற்சி (கததபப) 2012.01.29 ஆந் திகதி நிறுவப்பட்டது. இங்கு நிறுவன தலைமைக் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் பதவியில் சிரே‘ட ஒருவர் தலைமைக் கட்டளை அதிகாரி பதவியை வகிப்பதுடன் தரைப்படைக் கூட்டுயாக்கத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரியாவார்.

2. பின்வரும் தரைப்படை பயிற்சி பாடசாலைகள் இந்த கட்டளை தலைமையகத்தினால் நிர்வகிக்கப்படும்.

அ. இலங்கை தரைப்படை கல்விக்கல்லூரி.

ஆ. அதிகாரி ஊக்குவிப்பு மேம்பாட்டு நிலையம்.

இ. தரைப்படை பயிற்சி பாடசாலை.

ஈ. காலாட்படை பயிற்சி மையம.

உ. சண்டை பயிற்சி பாடசாலை.

ஊ. தரைப்படை உடல் பயிற்சி பாடசாலை.

எ. தொண்டர் பயிற்சி பாடசாலை.

ஏ. தேர்ச்சி துப்பாக்கிச் சூடு பயிற்சி பாடசாலை.

ஒ. ஆணைப்பெறாத அதிகாரிகள் பயிற்சி பாடசாலை.

ஓ. அமைதி காக்கும் பயிற்சி பாடசாலை.

ஔ. படையணி திட்டமிடல் பயிற்சி பாடசாலை.

பொறுப்புகள்

3. கட்டளையிடும் தலைமையக தரைப்படை பயிற்சியின் பொறுப்புகளாக அமைவது தரைப்படை பயிற்சிகள் அபிவிருத்தி செய்தல் மற்றும் தரைப்படைக்குரிய போர்திறஞ்சார்ந்த மற்றும் மூலக்கோட்பாடுகளை அறிமுகப்படுத்துதல்.

நோக்கு

4. தரைப்படையின் உயர்ந்த தரத்தினாலான பயிற்சிகளினூடாக அறிவு , தேர்ச்சி மற்றும் மனப்பாங்கை மேம்படுத்தி தரைப்படையின் எதிர்காலத்திற்கு உயர் பயனுறுதிவாய்ந்த படைவீரர்களை உருவாக்குதல்

நிறைவேற்றப்பட்ட பணிகள்

5. பின்வரும் மாநாடுகள் இந்த அடியுறையிலிருந்து வருடத்துக்குள் நடாத்தப்பட்டது.

அ. ஆங்கில போதனையாளர் கருத்தரங்கு.

ஆ. வருடாந்த பயிற்சி மீளாய்வு கருத்தரங்கு.

நிதியியல் விபரங்கள்

6. இந்த அடியுறைக்காக பின்வருமாறு நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

அ.	மீண்டெழுஞ் செலவுகள்	ரூ. 25.000.00	(செலவாகிய நிதி ரூ. 10.98000).
ஆ	பத்திரிகைகளுக்காக	ரூ. 90.000.00	(செலவாகிய நிதி ரூ. 81.99000).
இ.	பயிற்சி கொடுப்பனவுக் கணக்கு	ரூ .35.000.00	(செலவாகிய நிதி ரூ .35.00000).
ஈ.	விளையாட்டு	ரூ .15.000.00	(செலவிடப்படவில்லை).
உ.	சுத்திகரிப்பு பொருட்கள்	ரூ .40.000.00	(செலவாகிய நிதி ரூ. 30.00000).
ஊ	நில பராமரிப்பு	ரூ .40.000.00	(செலவாகிய நிதி ரூ 197.25520).

படைக்கல விநியோகத்திற்கான தரைப்படை தலைமையகம்

அறிமுகம்

1. படைக்கல விநியோகத்திற்கான தரைப்படை தலைமையகம், தரைப்படை தலைமையகத்தின் கீழ் கொண்டு நடாத்தப்படுவதுடன் தரைப்படை தளபதியால் வழங்கப்படும் பொறுப்புகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு இணைந்துள்ளனர்.

2. படைக்கல விநியோகத்திற்கான தரைப்படை தலைமையகம், சாலாவ, கொஸ்கமவில் அமைந்துள்ளது. நிரந்தர தரைப்படை சேவை அணி மற்றும் எதிர்கால பராமரிப்பு பிரதேசங்களில் நிர்வாக நடவடிக்கைகள் இந்த தலைமையகத்தினால் மேற்கொள்ளப்படும்.

பொறுப்புகள்

3. படைக்கல விநியோகத்திற்கான தரைப்படை தலைமையகத்திற்கு, அனைத்து எதிர்கால பராமரிப்பு பிரதேசங்கள் நிரந்தர தரைப்படை சேவை அலகுகளில் நிர்வாக நடவடிக்கைகள் அணி நிலையங்களினூடாக நிர்வகிப்பதற்கான பொறுப்பு வழங்கப்பட்டுள்ளன.

பணிகள்

4. படைக்கல விநியோகத்திற்கான தரைப்படை தலைமையகத்தின் பணிகள் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளன.

அ. படைவீரர்கள் மற்றும் பொருட்களை பராமரித்தல் பகிர்வு மீளமைப்புச் செய்தல்

